விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 07 ஞாயிற்றுக்கிழமை (23.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

## 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்

### இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே வலியுறுத்து



(கொழும்பு)
இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்தபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லி 15

## அரியாலையில் குண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் இருந்து பல மோட்டார் குண்டுகள் நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 15

## அரசுடன் இணைந்து செயலாற்ற
# வடக்கு பிரதிநிதிகள் முன்வர வேண்டும்

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அழைப்பு



(கொழும்பு)
அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்ற முன்வருமாறு வடக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு கல்வி அமைச்சரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முன்னணியின் தவிசாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அழைப்பு விடுத்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் காயங்களுடன் முதியவரின் சடலம் மீட்பு

(வவுனியா)
வவுனியா கனகராயன்குளம் பகுதியில் காயங்களுடன் முதியவர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில உள்ள வீடொன்றின் அருகாமையில் சடலம் 15

நாட்டின் பல்வேறு பகுதிகளில்
## 24 மணி நேர விபத்தில் 11 பேர் பலி

(கொழும்பு)
கடந்த 24 மணி நேரத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் 11 பேர் உயிரி 15

கட்சியின் முடிவு ஜனநாயகத்துக்கு எதிரானது
## அமைப்பாளர், பேச்சாளர் பதவிகளில் தொடர்ந்திருப்பேன்

### மணிவண்ணனும் விடாப்பிடி



(யாழ்ப்பாணம்)
தனக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் ஜனநாயகத்திற்கும் இயற்கை நீதிக் கோட்பாட்டுக்கும் எதிரானது. 15

பட்டதாரிகளுக்கு
## நியமனங்கள் வழங்குவது உறுதி

### அமைச்சர் டக்ளஸ்



03ஆம் பக்கம் பார்க்க

விக்னேஸ்வரனின் உரையை
## ஹன்சார்ட்டிலிருந்து நீக்குவது குறித்து ஆலோசிக்கின்றோம்

### சபாநாயகர் மகிந்த யாப்பா

(கொழும்பு)
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரையை ஹன்சார்ட்டிலிருந்து நீக்குவது குறித்து தற்போது ஆலோசிக்கப் 15

நாட்டுக்கு பாதிப்பில்லாத வகையில்
## புதிய அரசியலமைப்பை உருவாக்க சுதந்திரக் கட்சி பூரண ஒத்துழைப்பு

### கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர

(கொழும்பு)
நாட்டுக்கு பாதிப்பில்லாத புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பூரண ஒத்துழைப்பினை வழங்கும் என அந்தக் கட்சியின் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று ஊடகங்களுககு கருத் துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய அரசியல் திருத்தம் தொடர்பாக ஆலோசித்துள்ளோம். இதற்கு கட்சி என்ற ரீதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனை 15

ராஜ் ஜுவல்லர்ஸ்
அடகு பிடிப்பவர்கள்
Best Choice

1 பவுண் - 22 கரட்டிற்கு 78,000/=
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது.
1 வருட கால அவகாசம்
உங்களுக்கு நாங்கள் தருகின்றோம்.
(3183)
இல. 31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி ( சந்தைக்கு அருகில் )
Tel : 021 221 7287 / 076 636 1238

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## மீனாட்சிப்பிள்ளை தர்மலிங்கம்

யாழ். புலோலி தெற்கு, புலோலி, பூமகள் வாசம் பெருந்தெருவைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மீனாட்சிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் 21.08.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சின்னையா - கதிராச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் தர்மலிங்கத்தின் (ஓய்வு பெற்ற அதிபர் புற்றளை மகாவித்தியாலயம், சமாதான நீதவான், புலோலி) அன்பு மனைவியும் வினாயகமூர்த்தி, கணேசமூர்த்தி, விக்னேஸ்வரமூர்த்தி, சத்தியமூர்த்தி, சாரதாதேவி, காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சத்தியாதேவி மற்றும் சகுந்தலாதேவி, கிருஸ்ணமூர்த்தி, வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நடராஜசுந்தரம், சிவலிங்கம், ராகவன், பத்மாவதி, தயாவதி, சுசாந்தி, சுதர்லா, தயாழினி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, செல்லத்துரை, பரமநாதன், பாலசுப்பிரமணியம், கந்தசாமி மற்றும் சரஸ்வதி கிட்ணபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் மாதுளா, ஜனனி, அனந்தசயனன், ஆரணன், யாழினி, சர்மிதா, சந்தியா, கார்த்திகேயன், வள்ளி, கீதன், கவின், விதுரன், கார்த்திகா, சிறிநாத், லஸ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஹரிஸ், காமாட்சி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-130)

பூமகள் வாசம், பெரும் தெரு.
யாழ். புலோலி தெற்கு. புலோலி.

தகவல்:-
குடும்பத்தினர்


## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(3655)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வீடு வாடகைக்குண்டு

யாழ். நகரில் K.K.S வீதி, பண்டிக் கோட்டுப் பிள்ளையார் கோவில் முன் கின்னர் கொலிச் லேனில் சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு கிழமை, மாத அடிப்படையில் அல்லது நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படும். (3662)

**077 285 0753**

## விற்பனையாளர்கள் தேவை

எமது புடவைக் கடைக்கு
O/L, A/L படித்த ஆண்கள் தேவை.
தொழில் பழகுபவர்களும்
விரும்பத்தக்கது.

(3662)

**சென்னை பெஷன் வேல்ட்**
63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## பணியாளர்கள் தேவை

பிரபல கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு சாதாரணதரக் கல்வி அறிவுடைய, அலுவலக பணியாளர்கள் தேவை.

(3651)

தொடர்புகளுக்கு :-

**சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்**

இல. 55, 57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்

பிறப்பு
1950
-
09
-
04



இறப்பு
2020
-
08
-
22

## திருமதி நகுலாம்பிகை பஞ்சலிங்கம்

(தவம்)

யாழ். மில் ஒழுங்கை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் காளிகோவிலடி, தாவடியை வசிப்பிடமாகவும் தற்போது மல்லாகத்தில் வசித்தவருமான நகுலாம்பிகை பஞ்சலிங்கம் நேற்று (22.08.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு - பரிபூரணம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற தம்பிஐயா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரஸ்வதி, மற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற இலட்சுமணன், காலஞ்சென்ற கந்தசாமி, பரஞ்சோதி, கனகசுந்தரம் (ராசா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2020) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று மல்லாகம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3659)

மல்லாகம்.

T.P : 077 066 3153
076 603 9761

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## இரத்தினேஸ்வரி சுப்பிரமணியம்

தும்பளையைப் பிறப்பிடமாகவும் ஆத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரி சுப்பிரமணியம் 21.08.2020 வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் லயன் சுப்பிரமணியத்தின் (ஓய்வு பெற்ற உதவி விவசாய பணிப்பாளர், சமாதான நீதவான்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆனந்தநடராஜா-மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-சிவபாக்கியம் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான தங்கேஸ்வரி, சிதம்பரநடராஜா மற்றும் ஞானேஸ்வரி, விஜயலட்சுமி, சிவகுமாரன், காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் சங்கரநாதன், கலாநிதி நந்தகுமார், கனகசபை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுஜந்தினி (லண்டன்), சுஜந்தன் (பொறியியலாளர்- கனடா), கஜந்தன் (பொறியியலாளர்-லண்டன்), அஜந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரதாஸ் (லண்டன்), சிவாஜினி (கனடா), சுதர்சினி(லண்டன்), நாமலி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருசாந், நிஷாந், சுஜீவினி, சுஜீவன், சஜீவன், விதீஷன், தஸ்வின், அஜானா, வினிஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-128)

பாபா பனை,
ஆத்தியடி,பருத்தித்துறை.

தகவல்:-
கணவர்
லயன் ச.சுப்பிரமணியம் (J.P)

# அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் உறுதி

## அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

**பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்ட பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட மற்றும் ஒத்திவைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் அனைவரையும் எதிர்வரும் செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னதாக மேன்முறையீட்டை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தின் போது பாதிக்கப்பட்ட ஒரு பகுதியினர் நேற்றுச் சனிக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ். அலுவலகத்தில் சந்தித்த போதே அமைச்சர் இக்கருத்தினைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் குறித்த பட்டதாரிகள் நியமனத்திற்கு விண்ணப்பித்தவர்களில் சுமார் 1500 இற்கும் மேற்பட்டவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அல்லது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பதாரிகள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொண்டவர்கள் அல்லது ஏற்கனவே தொழில்வாய்ப்பினை பெற்றுக் கொண்டவர்கள் என்பதற்கு ஆதாரமாக சேமலாப நிதி கணக்கினை கொண்டிருப்பவர்கள் என்ற அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படாது தவிர்க்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது, பல்கலைக் கழகங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளுக்கும் சேமலாப நிதிக் கணக்கினை வைத்திருந்தாலும் பட்டப்படிப்பிற்கு பொருத்தமற்ற தொழில்களில் தற்காலிகமாக ஈடுபட்டு வருகின்றவர்களுக்கும் நியமனங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். அந்த வகையில், பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் மேன்முறையீட்டை மேற்கொள்ளுமாறும் மேலதிகமாக பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# சமூகங்களுக்கிடையே ஒரு பாலமாக இருக்க விரும்புகிறேன்
# குற்றச்சாட்டுக்களை யோசிக்க எனக்கு நேரமில்லை

(கொழும்பு)

அடிப்படை அற்ற குற்றச்சாட்டுகளைப் பற்றி பொருட்படுத்தி யோசித்துக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

உங்களை விமர்சிப்பவர்களுக்கு நீங்கள் ஏதேனும் கூற விரும்புகிறீர்களா? என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த அவர்,

2012 முதல் நான் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியாக இருக்கிறேன். சட்டத்தரணியாக மட்டும் 25 வருடங்களுக்கு மேல் பணியாற்றியுள்ளேன்.

அரசியலமைப்புச் சட்டம், நிர்வாகச் சட்டம், கிரிமினல் சட்டம் மற்றும் சிவில் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் வரும் பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம் மற்றும் மாகாண நீதிமன்றங்களில் நான் தோற்றியிருக்கிறேன்.

எனது தொழில் துறையின் தொழில்சார் பங்களிப்பு இதுவாகும். அத்துடன் சட்டத்தரணிகள் சங்கத்தின் உபதலைவராக இரண்டு வருடகாலம் பதவி வகித்துள்ளேன்.

மத மற்றும் சமூக நல்லிணக்கத்தை தாங்கிக் கொள்ள முடியாத சிலரே இவ்வாறு விமர்சனம் செய்து வருகின்றனர். நான் சமூகங்களுக்கிடையில் ஒரு பாலமாக இருக்க விரும்புகிறேன். எனது சட்டத்தொழிலை கைவிட வேண்டியுள்ளது.

எனினும் இந்தப் பாதையில் நான் விரும்பியே நடக்கின்றேன். நாட்டின் நன்மைக்காகவே நான் இந்த அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றேன்.

நீதி அமைச்சில்நிறைய வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளன. எனவே அந்த அமைச்சை பெற்றுக் கொண்டதை மிகுந்த சவாலுக்குட்பட்டதாகவே நான் கருதுகிறேன்.

நான் அந்தச் சவால்களை எதிர்கொள்ளக் கூடியவன் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இருந்திருக்கக் கூடும். அதனால் தான் அவர்கள் நீதி அமைச்சராக என்னை தெரிவு செய்துள்ளார்கள்.



ஜனாதிபதியின் தலைமையிலான அமைச்சரவை தீர்மானிக்கும் வகையில் அரசாங்கத்தின் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல நான் கடமைப்பட்டுள்ளேன்.

அரசாங்கத்தின் அங்கீகாரம் இன்றி நான் எதையும் செய்து விட முடியாது. அரசாங்கத்தின் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதே எனது வேலையாகும்.

அடிப்படை அற்ற குற்றச்சாட்டுகளைப் பற்றி பொருட்படுத்தி யோசித்துக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை என அலி சப்ரி மேலும் தெரிவித்தார். (2-7)


AUGUST 23 2020

தமிழ் திரைத்துறைக் கலைஞர்கள் ஒருங்கிணைப்பு-03

மூத்த கல்வியியலாளர்கள், அரச நிர்வாக உத்தியோகஸ்தர்கள் மற்றும் மூத்த கலை ஆளுமைகள் முன்னிலையில்

"தமிழ் திரைத்துறைக் கலைஞர்கள் சங்கத்துக்கான ஒன்றுகூடல்."

காலம் - 23.08.2020 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் - மாலை 4.00 மணி
இடம் - தந்தை செல்வா கலையரங்கம், யாழ் மத்திய கல்லூரி.

தமிழ் திரைத்துறைக் கலைஞர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைத்து நிற்கின்றோம்.

குறிப்பு : குறித்த நேரத்திற்கு சமூகமளிப்பதோடு, சுய பாதுகாப்பு, மற்றும் சமூக இடைவெளிகளை பின்பற்றி இணைந்து நிற்போம்.

(3654)

தன்னார்வ செயற்குழு
தமிழ் திரைத்துறைக் கலைஞர்கள் சங்கம்,
வடமாகாணம், இலங்கை.

4PM


# பொதுக்கொள்கையின் துறைகளில் அரசாங்கம் முடிவெடுக்க நிபுணர்கள் அல்ல

(கொழும்பு)

பொதுக் கொள்கையின் அனைத்துத் துறைகளிலும் முடிவுகளை எடுக்க அரசாங்கம் நிபுணர்கள் அல்ல எனக் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், சுகாதாரத் துறையைச் சேர்ந்த நிபுணர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே பாடசாலை மாணவர்கள் தொடர்பாக முடிவெடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் பரீட்சைகளுக்கான திகதிகளை நிர்ணயிப்பது குறித்து உரையாற்றிய கல்வி அமைச்சர், இது விரைவில் திட்டமிடப்படும் என்றும் உறுதியளித்தார். (ஜ-2)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை

## தீர்வு கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும்

(மன்னார்)

**சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு கிழக்கில் நினைவுகூரப்படவுள்ளது. எங்களுக்கு என தீர்வு ஒன்று கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் ஒவ்வொரு வருடமும் போராட்டங்களையும், கண்டனப் பேரணியையும் மேற் கொண்டு வருகின்றோம். ஆனால் இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேசம் இதுவரை எங்களுக்கு ஒரு தீர்வையும் பெற்றுத் தரவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோர் சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.**




மன்னாரில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை வடக்கு-கிழக்கில் 8 மாவட்டங்களை உள்ளடக்கி மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

எங்களுக்கு என தீர்வு ஒன்று கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் ஒவ்வொரு வருடமும் போராட்டங்களையும், கண்டன பேரணியையும் மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் இதுவரை இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேசம் எங்களுக்கு ஒரு தீர்வையும் தரவில்லை. தீர்வு கிடைக்கும் என்று நம்பி நாங்கள் ஒவ்வொரு வருடமும் இதனை செய்து வருகின்றோம்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்த வரையில் 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை 85 இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டம் முப்படையினரின் பாதுகாப்பில் இருந்த காலப்பகுதியில் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளை தேடுகின்ற பல அம்மாக்கள், அப்பாக்கள் உயிரிழந்துள்ளனர்.

தற்போது கதைத்துக் கொண்டு இருக்கின்ற நாங்கள் அடுத்த வருடம் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் வரை உயிரோடு இருப்போமா? என்று தெரியவில்லை.எனவே எங்களுக்கு முழுமையான தீர்வு கிடைக்க வேண்டும்.

எனவே ஒவ்வொரு அமைப்புக்களும், குறிப்பாக அரச,அரச சார்பற்ற அமைப்புக்கள், பொது மக்கள், வர்த்தக சங்கம்,தனியார் வாகன உரிமையாளர் சங்கம் ஆகியோர் எங்களுக்குப் பலமாக செயற்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்களுக்கு மாத்திரம் பிள்ளைகள் இல்லை. உங்களுக்கும் உறவுகள். எனவே நீங்களும் எங்களுடன் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. மேலும் அம்பாறை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தின் பெயர்ப்பலகை அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

எனவே சர்வதேசம் எங்களையும் திரும்பிப் பார்க்க வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-2-285)

# பொலிஸார் தாக்கியதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய குற்றச்சாட்டில், கைது செய்த குடும்பஸ்தரை பொலிஸார் தாக்கியதாக பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஆட்டோ சாரதியிடம் பயணிப்பதற்காக ஆட்டோ கேட்ட போது, ஏற்பட்ட தகராற்றில், பொலிஸ் உத்தியோகத்தருக்கும், ஆட்டோச் சாரதிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, அருகில் நின்ற ஆட்டோ சாரதி ஒருவர், குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கும், மற்றைய சாரதிக்கும் இடையில் நடைபெற்ற வாய்த்தர்க்கத்தை சமாதானப்படுத்த சென்ற போது, சமாதானப்படுத்த சென்றவர், யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு, நடமாடும் பொலிஸார் வந்ததும், காங்கேசன்துறையில் இருந்து வந்த அந்த பொலிஸ் உத்தியோகத்தர், சமாதானப்படுத்த சென்றவர் தன்னை தாக்கியதாக பொலிஸாருக்கு தெரிவித்த மைக்கு அமைவாக, பொலிஸார் சமாதானப்படுத்திய ஆட்டோச் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்த குறித்த சாரதியை சிறு குற்றத்தடுப்பு பிரிவில், வைத்து, பொய்க்குற்றச்சாட்டு சொன்ன பொலிஸ் உத்தியோகத்தர் தாக்கியுள்ளார். குறித்த ஆட்டோ சாரதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் அனுமதியுடன், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சாரதிக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக, அவரது மனைவி யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

. அந்த முறைப்பாட்டின் பிரகாரம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தாக்குதலுக்கு இலக்கான, ஆட்டோ சாரதியை வைத்தியசாலையில் பார்வையிட்டதுடன், விசாரணைகள் முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ-101)

# குணமடைந்தோர் 2798

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 798 ஆக அதிகரித்துள்ளது. நேற்று மேலும் 9 பேர் குணமடைந்ததை அடுத்தே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் தற்போது கொரோனா தொற்றுக்குள்ளான 2 ஆயிரத்து 941 பேரில் 143 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை 65 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண் காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் நாட்டில் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)




கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்கல்வியை தொடரும் புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் எஸ்.பூலோகராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், வலயக்கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- முறிகண்டி செய்தியாளர்)

# கண்ணீர் காணிக்கை



எமது உற்ற நண்பரும் வர்த்தக
முன்னோடியும் தற்போது சரவணாஸ்
மல்ரி சென்ரர் உரிமையாளருமாகிய

அமரர்

## தம்பையா தியாகலிங்கம்

அவர்கள் 21.08.2020 அன்று
காலமானதையிட்டு துயரடைவதுடன்
அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வ
தோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி

பிறப்பு
1953.03.10

இறப்பு
2020.08.21

E.S.P. நாகரத்தினம் (Lion PMK)
E.S.P. நாகரத்தினம் அன்கோ , கஜமுகன் ஹாட்வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


(C-125)

# கண்ணீர் காணிக்கை

S.V.M நிறுவனத்தை 25 வருட காலமாக முன்னேற்றப் பாதைக்கு கொண்டு
சென்ற முன்நாள் முகாமையாளரும்
தற்போது சரவணாஸ் மல்ரி சென்ரர் உரிமையாளருமாகிய

அமரர்

## தம்பையா தியாகலிங்கம்



ஓய்வையே பார்க்காத கால்களும்
ஆய்ந்து ஆய்ந்து பார்க்கும் கண்களும்
உயர்ந்து ஓங்கிய தோற்றமும்
சிறந்த சிவப்பு மேனியும்
களைப்போ காணா உடலும்
உழைப்பே உயிராய் உயர்ந்த வாழ்வும்!
நிலைத்த ஹரியில் உறைந்த பக்தியும்
நிறைய காதில் நீங்கா பூக்களும் - இனி
காணுவமோ கண்ணெதிரே உங்களை!
நிலைக்காது வாழ்வென்று எம்மை நினைக்க வைத்தீரே!

அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு
1953.03.10

இறப்பு
2020.08.21

S.V முருகேசு நிறுவனத்தின்
உரிமையாளரும் ஊழியர்களும்

| S.V முருகேசு | S.V.M பிறைவேற் லிமிட்டட் | S.V முருகேசு |
|---|---|---|
| 154, ஆஸ்பத்திரி வீதி, | 122, டாம் வீதி, | A9 வீதி, கரடிப்போக்கு சந்தி, |
| யாழ்ப்பாணம். | கொழும்பு - 12 | கிளிநொச்சி. |

(C-119)

## இராசிபலன்

23.08.2020
ஆவணி 07,ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 9.49 மணி வரை
சித்திரை முன்னிரவு 10.15 மணிவரை
சுப நேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சந்திராஷ்டமம் -பூரட்டாதி உத்திரட்டாதி
ஆவணி ஞாயிறு வளவன்

**மேஷம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், பொன்னான நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்**: கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும் நாள்.

**மிதுனம்**: பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்**: மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**: சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி**: சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பணியாளர் தொல்லை அகலும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.

**துலாம்**: திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**: பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் சற்று கூடும்.

**தனுசு**: நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்**: செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்**: நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் இருந்த மனக்கசப்புக்கள் மாறும், பயணங்கள் கைகூடும்.

**மீனம்**: வரவும் செலவும் சமமாகும் நாள், குடும்பத்தினரிடையே சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை.

உன் உள்ளத்தைச் சீர்படுத்த உன் உணர்வுகளைச் சீர்படுத்து

# சந்நிதியான் ஆலயச் சூழலில் தொற்று நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில், கொரோனா தொற்று அச்சம் காரணமாக ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமூக இடைவெளியினை பேணி ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.





அடியவர்கள் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் நிலையில் ஆலயப் பகுதியில் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தும் முகமாக வல்வெட்டித்துறை நகரசபையின் சுகாதாரப் பிரிவினரால் ஆலய பகுதியில் கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடானது இரவு வேளைகளில் ஆலயத்தின் உட்புறம் மற்றும் வெளி வீதிகளில் முன்னெடுக்கப்படுகின்றது. (ஜ-2)

# எமது நோக்கம் அரசியல் அல்ல பிரதேச அபிவிருத்தியே

## சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

அரசியல் அல்ல.பிரதேச அபிவிருத்தியே எமது பிரதான நோக்கம் என சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார். நேற்றுச் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் காலம், அபிவிருத்தி சார்ந்த காலமாக இருக்கும். அதனை சரியாகப் பயன்படுத்தி அரசியலுக்கு அப்பால் அபிவிருத்திக்காக செயற்பட வேண்டும்.

எமது நோக்கம் அரசியல் அல்ல. அபிவிருத்தியே எமது நோக்கம். மக்களின் எதிர்பார்ப்பும் அதுதான். எனவே அபிவிருத்திக்கு முன்னுரிமை அளித்து மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப செயலாற்ற வேண்டும்.

நாம் பாரிய கொரோனா மற்றும் தேர்தல் சூறாவளிகளைச் சந்தித்து தற்போது ஓரளவு அமைதியான சூழலில் எமது சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

எதிர்காலத்தில் பிரதேச அபிவிருத்தியை அதிகளவில் மேற்கொள்ளும் வாய்ப்பு காணப்படும் என நம்புகிறேன். அண்மையில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் எமது சபை எல்லைக்குள் புனரமைக்கப்பட வேண்டிய சகல வீதிகளையும் மதிப்பீடு செய்து விபரத்தை அனுப்புமாறு கோரப்பட்டிருந்தது.

எமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் உதவியுடன் 200 வீதிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் அதிக வீதிகளுக்கான மதிப்பீட்டினை தயாரித்து அனுப்பிய பெருமை எமது சபைக்கே உள்ளது.

அந்த வீதி விபரத்தில் சப்ரிகம மற்றும் கம்பெரலிய திட்டத்தில் புனரமைக்கப்பட்ட வீதிகளின் குறை வேலைகளையும் உள்ளடக்கி மதிப்பீட்டினை தயாரப்படுத்தி அனுப்பி இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-30)

# கொழும்பிற்கு முன்னேற்றமான வெள்ள வடிகாலமைப்பு தேவை

## உலக வங்கி நிபுணர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொழும்பில் முத்துவால் கழிவுநீர் சுத்திகரிப்பு வடிகாலமைப்புத் திட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய உலக வங்கியில் விவசாயத்துறை நிபுணர் அன்றா குட்வில் முத்துவால் கழிவுநீர் சுத்திகரிப்பு வடிகாலமைப்புத் திட்டம் போன்று கூட்டிணைக்கப்பட்ட பல முன்னேற்றகரமான வடிகாலமைப்பு கொழும்பிலும் அதன் நகர்ப்புறங்களிலும் தேவையானது என்றும் இத்திட்டமானது உலக வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் மிடையிலான நீண்டகால அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான உதாரணமாகும் என்றும் இவ்வாறான பத்து வடிகாலமைப்புத்திட்டங்கள் வருகின்ற மாதங்களிலும் பூரணப்படுத்தப்படும் என்றும் மற்றும் 20 உப திட்டங்கள் ஏற்கனவே பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஜ-2)

# வேலைவாய்ப்பு நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் மேன்முறையீடு செய்யலாம்-அரசாங்க தகவல் திணைக்களம்

(கொழும்பு)

அரசாங்க வேலை வாய்ப்புத் திட்டத்தில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு மேன்முறையீடு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் உள்ள பிரதேச செயலகங்களில் செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது மேன்முறையீடுகளை செய்யலாம் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் www.pubad.gov.lk என்ற இணையத்தளத்தில் மேன்முறையீடு செய்வதற்கான விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம் இதேவேளை, தொழில் பெறும் பட்டதாரிகள் எதிர்வரும் செப்டெம்பர் 2 ஆம் திகதி அருகிலுள்ள பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட ஒரு இலட்சம் பேரைத் தொழில்களில் அமர்த்தும் பணிகள், அதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள செயலணியின் மூலம் எதிர்வரும் செப்டெம்பர் 2 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## தாய்லாந்திலிருந்து 87 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொவிட்-19 தொற்றால் தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு திரும்ப முடியாமல் சிக்கியிருந்த 87 பேர் பாங்கொக்கிலிருந்து UL-403 என்ற ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் விமானம் மூலம் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (ஐ-4)


### சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை AAA Gold Center.

0765684346 (1004)

### வாடகைக்கு

ஆரியகுளம் சந்திக்கருகாமையில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
0772030309
0778185017 (3649)

### வைத்தியம்

அனைத்து விதமான வைத்தியங்கள் செய்தும் மாறாத நோக்கள், விறைப்புக்கள் உள்ளவர்கள், ஆஸ்துமா, மூலம், IBS, முள்ளந்தண்டு வலிகள், குழந்தை இன்மை, பக்கவிளைவுகள் அற்ற இயற்கை, மூலிகை வைத்தியம்.

Dr.R.Sivagurunathan
0777301669
ஞாயிறு, திங்கள்
யாழ்ப்பாணத்தில் சந்திக்-கலாம். (1005)

### வாடகைக்கு

வெள்ளவத்தையில் Harmes Avenue யில் குறைந்த விலையில் நாள், கிழமை, மாத வாடகைக்கு.

2,3,6 Bed rooms சுபகாரியங்களுக்கும் கொடுக்கப்படும் MARKET, station அருகில்

தொடர்பு:-
SATHIYA- 0777667511, 0112503552 (1003)

### விற்பனைக்கு

வைக்கோ (Excarator) விற்பனைக்கு

தொடர்பு:- 0774801734 (3650)


# 46 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

23.08.2020

## சுப்பிரமணியம் ஜெயராஜ்





இன்று தனது 46 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் சுப்பிரமணியம் ஜெயராஜ் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

Happy Birthday to you

பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர், நண்பர்கள். (3649)


### மணமகள்மார் தேவை

லண்டனில் வாழும் 32 வயது 8 இல் செவ்வாய் அச்சுவினி 2 ஆம் பாத நட்சத்திர மணமகனுக்கும் கனடாவில் வாழும் 33 வயது லக்கினத்தில் செவ்வாய் ஆயிலிய நட்சத்திர மணமகனுக்கும் இலங்கையில் அரச தொழில் புரியும் 29 வயது 8 இல் செவ்வாய் அத்தம் நட்சத்திர மணமகனுக்கும் மணமகள்களை தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு:- சொர்க்கம் திருமண சேவை
0014166661855, 0014377728129,
0762364188, 0212221515, 0776505097. (3652)

### பண்ணைத்தொழில் (மிருக வளர்ப்பு)/விவசாயம் சார்பான நிபுணத்துவம் பெற்ற ஆண் பணியாளர்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் பிரபல கம்பனி ஒன்றின் பண்ணையொன்றிற்கு விவசாயம் மற்றும் பண்ணைத்தொழில் (மிருக வளர்ப்பு) சார்பான நிபுணத்துவம் பெற்ற ஆண் பணியாளர் தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

உடன் தொடர்புக்கு:-
071-532 4582 / 075-933 7712
Email Address:vacancy.col@gmail.com (3656)

### பெண் உதவியாளர் தேவை

Cargills Square இல் (No:11,1st floor,Jaffna) அமைந்துள்ள Secrets விற்பனை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தகைமை:- A/L OR O/L ஆங்கில அறிவு, வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது. வேலை நேரம் 10.00 a.m to 7.30 p.m. Monday - Saturday

தொடர்புக்கு:-
Priya.G
0779510436, 021-221 6488 (3638)


## 276 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

உயர்கல்வி கற்பதற்காக அவுஸ்திரேலியா சென்றிருந்த 276 மாணவர்களுடன் விசேட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

மெல்பேர்ன் விமான நிலையத்திலிருந்து வந்தடைந்த விமானத்திலிருந்த எல்லா பயணிகளும் பி.சி.ஆர்.பரிசோதனையின் பின் கொவிட்-19 தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஐ-2)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: சூரி, செவ் 5 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. கட்டட ஒப்பந்தகாரர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/7521 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: hospital work in Swiss<br>எதிர்பார்ப்பு: சுவிஸ், அல்லது ஜேர்மன் நாட்டு மணமகன் மட்டும்<br>தொ.இ: G/8959 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 32 1/2 செவ் 7 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.Sc Engineering, Software Engineer in Singapore<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. பொறியியலாளர், வைத்தியர் போன்ற உத்தியோகம் உள்ள பெண்<br>தொ.இ: B/7529 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Programme Manager in Australia<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. பொறியியலாளர் போன்ற உயர் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/8960 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. கமம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/7525 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 31 1/4 செவ் 10 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Completed Diploma in Accounting. Following ACCA. Accountant (private)<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: G/8964 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ/த. கணக்காளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/7575 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 17 செவ் 8 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: G/8970 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.

**சோமசுந்தரம் விக்கினேஸ்வரன்**

மலர்வு:- 25.11.1944 உதிர்வு:- 30.08.2014

தீதி:- 23.08.2020

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்ததையா
ஆனாலும் உம் நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிலையாய் வாழுதையா.

(C-124)

இணுவில் மேற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்.


## ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு
# உதயங்க வீரதுங்கவிற்கு அழைப்பு

(கொழும்பு)

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய நாளை 24 ஆம் திகதி ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் முன்னிவையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டரீதியாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள கொள்கலன் ஒன்று சட்ட விதிமுறைகளை மீறி நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவித்து சுங்கத் திணைக்களம் தமக்கு எதிராகத் தவறான சாட்சியங்களைப் பதிவு செய்து வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த முறைப்பாடு நாளை 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (ஜ-2)

# புதிய முகத்துவார சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகள் நிறைவு



(கொழும்பு)

கொழும்பு வடக்கு பகுதியில் நீண்டகாலமாக நிலவிய வெள்ள அனர்த்த நிலைமையைக் கட்டுப்படுத்தும் வகையிலான நிரந்தரத் தீர்வாக புதிய முகத்துவாரம் சுரங்கப்பாதை நிர்மாணப் பணி நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் நிறைவடைந்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கொழும்பு பெருநகரை அண்மித்த நகர அபிவிருத்தித் திட்டமாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் இந்தத் திட்டத்தை செயற்படுத்தியுள்ளது.

அலுத்மாவத்தை பிரதான கால்வாயுடன் இணைக்கப்பட்டு ஆரம்பமாகும் இந்தச் சுரங்கப் பாதை புதிய முகத்துவாரம் பகுதி ஊடாக நிலத்தடி வழியாக சென்று முகத்துவாரம் மீன்பிடி துறைமுகத்திற்கு அருகில் கடலுக்குத் திறக்கப்படுகிறது.

குறித்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா, பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த, இலங்கைக்கான சீனத் தூதர் ஹூவே மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறி நிமல் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-2)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 200 |
| தக்காளி | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 80 |
| கோவா | 140 | 140 | 150 |
| கரட் | 100 | 140 | 150 |
| பூசணி | 100 | 100 | 100 |
| புடோல் | 100 | 60 | 80 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 60-100 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 170 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 120 |
| பயற்றங்காய் | 160 | 200 | 140 |
| லீக்ஸ் | 60 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 90 | 120 |
| கறிமிளகாய் | 280 | 280 | 320 |
| முருங்கைக்காய் | 120 | 120 | 120 |
| போஞ்சி | 350 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 100 | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 70-80 | 60-90 |
| இராசவள்ளி | — | 300 | — |
| வெங்காயப்பூ | 200 | 220 | 200 |
| முள்ளங்கி | 80 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 40 | 60 |

# தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகள்
## நீரியல் வள திணைக்களத்தால் கைப்பற்றல்
### இரகசிய தகவலையடுத்து அதிரடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**விற்பனைக்கு தயாராகவிருந்த மீன்பிடிக்கு தடை செய்யப்பட்டுள்ள 113 கிலோ தங்கூசி வலைகள் நீரியல்வளத் திணைக்களத்தினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.**



யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றிலிருந்து மீன்பிடிக்கு தடை செய்யப்பட்டுள்ள தங்கூசி வலைகள் நீரியல்வளத் திணைக் களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் தங்கூசி வலை பாவித்து மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ள நிலையில் தங்கூசி வலை மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவோர் நீரியல் வளத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்ற நிலையில் நேற்று யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் தங்கூசி வலை விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து அங்கு விரைந்த நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் குறித்த கடையினை சோதனை செய்தபோது 113 கிலோ கிராம் எடையுடைய தங்கூசி வலைகள் மீட்கப்பட்டுள்ளன

குறித்தகடை உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

# எவராலும் தோற்கடிக்க முடியாது
## கோட்டாபயவுக்கு புகழாரம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின்கீழ் மேலும் 15 ஆண்டுகள் இருப்பதற்காக மனதை தேற்றிக் கொள்ள வேண்டும் என பல்கலைக் கழக விரிவுரையாளரான கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

தனது முகநூல் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை வரலாற்றில் உருவாகிய அரசாங்கங்களில் இதுவே மிகவும் பலமான அரசாங்கம். இதனை 1970 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துடன் மாத்திரமே ஒப்பிட முடியும்.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் 1970 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தை விட பலமானது.

கோட்டாபயவின் கீழ் 15 ஆண்டுகள் வாழ மனதை தேற்றிக்கொள்ள வேண்டும் என நான் 2009 ஆம் ஆண்டு கூறினேன். அது இன்று நிஜமாகியிருக்கிறது.

2015 ஆம் ஆண்டு தோற்டிக்கப்பட்டது மகிந்த ராஜபக்ஷவின் திட்டமே அன்றி, கோட்டாபயவின் திட்டம் அல்ல. மகிந்தவின் அரசாங்கத்தை கவிழ்த்தது போல கோட்டாபயவின் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது.

இன்று கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிரான



மாற்று சக்தியை கண்களுக்கு எட்டிய தூரம் வரை காண முடியவில்லை.

இதனால், அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களின் வெற்றிகளை தீர்க்கமாக ஆராய்ந்த பின்னரே அரசாங்கத்திற்கு எதிராக வாயைத் திறக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-2)

# சுயாதீன ஆணைக்குழுக்களை ஒழிக்க வேண்டாம்

## தேசிய மக்கள் சக்தி கோரிக்கை



(கொழும்பு)

**அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் குறைபாடுகள் இருக்கும் அதேவேளை அதன் மூலம் அறிமுகப்படுத்திய சுயாதீன ஆணைக்குழுக்களை இரத்துச் செய்ய வேண்டாம் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பின் போது வலியுறுத்தினார்.**

19 ஆவது திருத்தம் ஜனநாயகம் மற்றும் நீதியை உறுதி செய்வதில் தேர்தல்கள் ஆணைக்குழு போன்ற சுதந்திரமாக செயற்படும் ஆணைக் குழுக்களுக்கு முக்கிய பங்கு உள்ளது என்றும் அவர் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

19 ஆவது திருத்தம் அறிமுகப் படுத்தப்பட்ட பின்னர் சுதந்திரமான, நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முக்கியமானவை. 19 ஆவது திருத்தத்தின் முற்போக்கான அம்சங்கள் ஒழிக்கப்படக்கூடாது"

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டு 19 ஆவது திருத்தத்தின் கீழ் பாராளுமன்றத்திற்கு அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், பாராளுமன்றத்தின் அதிகாரத்தை பலவீனப்படுத்துவதற்கும் அனைத்து அதிகாரங்களையும் ஒரு தனி நபருக்கு வழங்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தேசிய மக்கள் சக்தி எதிர்ப்பு தெரிவிக்கும் என்றும் அவர் தெரிவித்தார் (ஜ-2)

# மைத்திரிக்கு புனர்வாழ்வளிக்கவும்

## பொன்சேகா வலியுறுத்து



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, தற்போதைய அரசாங்கம் புனர்வாழ்வளிக்க வேண்டுமெனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பாராளுமன்ற தெரிவுக்குழுவில் சாட்சியமளித்த மைத்திரி, பொய் கூறினார் என சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு அப்போதிருந்த அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமென நான் அப்போதே கூறியிருந்தேன்"

"அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றாலும் அப்போதைய எமது அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சை வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே இந்தத் தாக்குதல் தொடர்பில் அறிந்திருந்தும் தடுக்கத் தவறியவர் என்பதால், அவரே இதில் முதலாவது குற்றவாளி.

"பாதுகாப்பு அமைச்சராக அவர் தேசிய பாதுகாப்புக்கு தேவையான எந்தவொரு தீர்மானங்களையும் எடுக்கவில்லை. எங்களது பக்கத்தில் அவரை வைத்திருப்பது பயனற்றது என்பதாலேயே அவரை ஆளுங்கட்சிக்கு வழங்கியிருக்கிறோம். அவருக்குப் புனர்வாழ்வளிக்க வேண்டும்.

"தேசிய பாதுகாப்புச் சபையையும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அவர் கூட்டவில்லை . உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அவர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, தாக்குதல்கள் தொடர்பில் அவருக்கு முன் கூட்டியே தெரியவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

"தாக்குதல் நடக்கும்போது. மைத்திரி சிங்கப்பூரில் இருந்தார். காலையில் தாக்குதல் நடைபெற்றது. ஆனால், மைத்திரி அன்றிரவு 12 மணிக்கே நாட்டுக்கு வந்திருந்தார். உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் நடைபெற்றவுடன் நீங்கள் ஏன் நாட்டுக்கு வரவில்லை என்று, மைத்திரியிடம் கேள்வி கேட்டிருந்தேன். சிங்கப்பூரிலிருந்து பகல் மூன்றுக்கும், இரவு 9 மணிக்கும் இலங்கைக்கு வரும் விமானத்தில்,' தனக்கு சீட் கிடைக்கவில்லை" என்றார்.

"உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பாராளுமன்ற தெரிவுக்குழுவில் சாட்சியம் வழங்கிய மைத்திரி பொய் கூறினார்.

"சிங்கப்பூரிலிருந்து வந்த விமானங்களில் சீட் இருந்ததா? என நாம் ஆராய்ந்து பார்த்தோம்.

பகல் வந்த விமானத்தில் 13 சீட்களும் இரவு வந்த விமானத்தில் 30 சீட்களும் இருந்தன. ஜனாதிபதியாக இருந்தும் மைத்திரி பொய் கூறினார்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## டிப்பர் - கார் மோதல் ஐவர் பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு - குருநாகல் பிரதான வீதியிலுள்ள சிலாபம் - வலக்கும்புர பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, டிப்பர் ரக வாகனம் ஒன்றும் சிறிய ரக கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும், வலக்கும்புர பகுதியில் மரண வீடொன்றுக்கு சென்று மீள குருநாகல் நோக்கி பயணித்த சிறிய ரக காரில் இருந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2)

## பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க முடியாதவர்கள் தற்பொழுது அரசாங்கத்தை விமர்சிக்கின்றனர்

(கொழும்பு)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு உரிய வகையில் நியமனங்கள் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டுள்ளது என சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளின் தொழில் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத தரப்பினர் தற்பொழுது அரசாங்கத்தின் இந்த வேலை திட்டத்தை விமர்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதில் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தெளிவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி ஆற்றிய உரையில் 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் என்று தெரிவித்தார். ஆனால் ஆவணத்தில் 50 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டுக்கு விளக்களிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியதுடன் அரசாங்கம் பதவிக்கு வருவதற்காக அவசர அவசரமாக தெளிவற்ற வகையில் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்திருக்கின்றது.

நியமனங்களுக்கு தெரிவாகாத பட்டதாரிகள் அது குறித்து மேன்முறையீடு செய்ய முடியும். இதற்கான நடவடிக்கையை தற்பொழுது அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

பட்டதாரிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே தனது திட்டத்தை முன்னெடுத் துள்ளது இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த் தன தாம் பதவியில் இருந்த போது வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு எதுவுமே செய்யத் தவறியவர்கள் இன்று அரசாங்கத்தின் திட்டங்களை விமர்சிக்கின்றனர்" எனச் சுட்டிக் காட்டினார். (2)

## பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகள் மாணவர் வரவு மந்தகதியில்


(கொழும்பு)

கொரோனா அனர்த்தத்தின் பின்னர் அனைத்து பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளும் கடந்த 17 ஆம் திகதி முதல் வழமை போல் ஆரம்ப மாகிய நிலையில் மாணவர்களின் வரவு மந்தகதியில் உள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் சுமார் 3 மாத காலங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த நிலை யில் பல்கலைக்கழக மானிய ங்கள் ஆணைக்குழு மேற் கொண்ட நடவடிக்கையின் பல னாக கடந்த 17 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டது.

அத்துடன் சுகாதார வழிகாட்டி ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்படுமாறு அனைத்து பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டதற்கு அமைய பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் தென்கிழக்கு பல்கலை மாணவர்வரவு வீதம் மந்தகதியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# வீட்டுத் திட்டங்களில் ஊழல் செய்தவர்களுக்கு தண்டனை



## ஜீவன் தொண்டமான் எச்சரிக்கை

(கொழும்பு)

தனி வீட்டுத் திட்டங்களில், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தப்போவதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மலையகம் என்றாலே, தோட்டத் தொழில் மட்டும்தான் என சிலர் நினைத்துக்கொண்டு இருக்கின்றனர். ஆனால், விவசாயம் உட்பட பல தொழில்கள் அங்குள்ளன.

வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் எனப் பலர் உருவாகியுள்ளனர். எனினும், மலையகம் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கு என்ன காரணம்? தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம், அவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவில்லை.

ஆனால், மக்களின் உண்மையான பிரச்சினைகள் எவை என்பதை ஜனாதிபதி கண்டறிந்துள்ளார். மலையகத்திலுள்ள ஆறு பிரதான வைத்தியசாலைகளிலும் போதுமான வசதிகள் இல்லை. பாடசாலைகளிலும் வளங்கள் முழுமையாக இல்லை. இவை தொடர்பில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிலோன் டீ என்ற நாமம், சரிவைச் சந்தித்துள்ளது. அதனைக் கட்டியெழுப்ப வேண்டும். இந்த விடயமும் ஜனாதிபதியின் உரையில் இடம்பெற்றது. சிறுதோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகளையும் எடுத்துரைத்துள்ளார். மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இன்று நிறையப் பேர், வெளிநாடு சென்று கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்கு, உள்நாட்டில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். மலையகத்தில் 4 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. ஆனால், கண்காணிப்புக் குழு மூலம் ஆராய்ந்தோம். 500 வீடுகளே கட்டப்பட்டுள்ளன.

ஏனையவை அரைகுறையில் உள்ளன. அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என பழமொழியொன்று உள்ளது. எனவே, வீட்டுத் திட்டத்தில் ஊழல் செய்தவர்களை கட்டாயம் சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

எனது தந்தை ஆறுமுகன் தொண்டமான், தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் வழிகளில் எனது பயணம் தொடரும்" என மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# பாடும் நிலா மீண்டு வருவதற்கு இலங்கையில் கூட்டுப் பிரார்த்தனை





(கொழும்பு)

பாடும் நிலா என இசைப் பிரியர்களால் அழைக்கப்படும் பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவர் குணமடைந்து மீண்டுவர வேண்டும் என உலகம் முழுவதும் உள்ள ரசிகர்கள் பிரார்த் தனை செய்துவரும் நிலையில் இலங்கையிலும் எஸ்.பி.பி. நலம்பெற பிரார்த்தனை இடம் பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழ்க் கலைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வு கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் நடைபெற்றது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவரும் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் உடல் நிலை சீராக உள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# நாட்டை குழப்பத்தில் ஆழ்த்திய 19 ஆவது திருத்தம் - தினேஷ்



(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் கடந்த அரசாங்கம் நாட்டை குழப்பத்தில் ஆழ்த்திய நிலையில் அரசியல் பொறிமுறையில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை சபைத் தலைவர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றைக் கலைக்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை நீக்குதல், பாராளுமன்றின் பதவிக் காலம் நான்கரை ஆண்டுகள் முடியும் வரை கலைக்க முடியாது என்ற ஒரு பிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது. மர்மமான சுயாதீன ஆணைக்குழுக்களும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தின என அவர் குற்றம்சாட்டினார்.

19 ஆவது திருத்தத்தின் உட்பிரிவின் காரணமாக மார்ச் மாதம் வரை பாராளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதியால் முடியவில்லை. இது பாராளுமன்றம் அதன் பதவிக்காலத்தின் நான்கரை ஆண்டுகள் இயங்கும் வரை கலைக்க முடியாது என்பதனாலே என தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தில் உள்ள அதிகாரங்கள் நாட்டை சீர்குலைப்பதற்காக கடந்த அரசாங்கத்தால் அகற்றப்பட்டன.

ஜனாதிபதி தனது கொள்கை அறிக்கையில் ஒரு புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்தி பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவதாக உறுதியளித்தார் என்றும் தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

2015 ஆம் ஆண்டில் 'நல்லாட்சி அரசாங்கத்திடம்' நாடு ஒப்படைக்கப்பட்டபோது, பொருளாதார வளர்ச்சி விகிதம் 6.7 சதவீதமாகவும் 2020 இல் நாடு திரும்ப ஒப்படைக்கப்பட்ட போது, பொருளாதார வளர்ச்சி விகிதம் வெறும் இரண்டு சதவீதமாகவும் இருந்தது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# மின்தடைக்கு மன்னிப்பு கோரினார் மின்சக்தி அமைச்சர் டலஸ்



(கொழும்பு)

கடந்த 17 ஆம் திகதி நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் மின்தடைக்கு மின்சக்தி அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரினார்.

மேலும் தான் குறித்த அமைச்சை பெறுப்பேற்று நான்கு நாட்களில் மின்தடை ஏற்பட்ட போதிலும் தான் அதனைக் காரணம் காட்டி மன்னிப்புக் கேட்பதைத் தவிர்க்கவில்லை என்றும் ஜனாதிபதியின் கொள்கைப்பிரகடனத்தில் கூறியதைப் போன்று தற்போது 32% ஆக உள்ள மீள் உருவாக்க மின்சக்தி உற்பத்தியை 2030 ஆம் ஆண்டளவில் 80% ஆக அதிகரித்து மின்சாரப் பற்றாக்குறைக்குத் தீர்வு காணப்படும் என அவர் கூறினார். (ஜ-2)

# துப்பாக்கிச் சூட்டில் பாதசாரி உயிரிழப்பு

(அம்பலாங்கொடை)

அம்பலாங்கொடை, பெரட்சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவரே, இவ்வாறு பாதசாரி ஒருவர் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் 48 வயதான நபர் ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


சம்பவத்தில் காயமடைந்த நபர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2)

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2020 - 16.09.2020

## குடும்பப் பிரச்சினைகள் தீரும்



சார்வரி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு உங்கள் இராசியிலேயே வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார்.

அவரோடு தனாதிபதியான சனியும் வக்கிரமாக இணைந்திருக்கிறார். கேதுவும் இராசியிலேயே இருப்பதால் இம்மாதம் உங்களுக்கு சிறப்பான மாதமாகவே அமையும். இராசிநாதன் குரு வக்கிரம் பெற்றிருப்பதால் எதையும் தீர்க்கமாக முடிவெடுத்துச் செய்ய இயலாது.

### உச்ச புதனின் சஞ்சாரம்

ஒகஸ்ட் 29 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப் போகின்றார். இதன் விளைவாக தொழிலில் மிகுந்த முன்னேற்றம் ஏற்படும். வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு அது கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு உண்டு. வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலமும் வருமானம் வரலாம்.

### கடக சுக்கிரனின் சஞ்சாரம்

ஒகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கும், லாப ஸ்தானத்திற்கும் அதிபதியானவர் சுக்கிரன்.

அவர் அஷ்டமத்தில் வரும் பொழுது 'விபரீத ராஜயோகம்' செயற்படும். அதன் விளைவாகப் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படலாம்.

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

இதுவரை மிதுனத்தில் சஞ்சரித்த ராகு, செப்டெம்பர் முதல் திகதி ரிஷப இராசிக்கும், தனுசு இராசியான உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த கேது, விருச்சிக இராசிக்கும் செல்கின்றார்கள்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும் நேரமிது.

### குருவின் வக்கிர நிவர்த்தி காலம்

செப்டெம்பர் 9 ஆம் திகதி தனுசு இராசியில் குரு வக்கிர நிர்த்தியாகின்றார்.




இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள்.

### சனியின் வக்கிர நிவர்த்தி காலம்

செப்டெம்பர் 14 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் வக்கிர நிவர்த்தியாகின்றார்.

உங்கள் இராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். மேலும் வாக்கு, தனம், குடும்பம், உடன் பிறப்புகள், வெற்றிகள் போன்றவற்றைக் குறிக்கும் இடங்களுக்கும் இவரே அதிபதி. அவர் வக்கிர நிவர்த்தியாகிப் பலம் பெறும் பொழுது குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். இம்மாதம் இல்லத்து பூஜை அறையில் பெருமாள், லட்சுமி, அனுமன் படம் வைத்து வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குருவின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு எதிர்பார்த்த காரியம் எதிர்பார்த்தபடி நடைபெறும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்பு கைகூடி வரும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும்.

ஆரோக்கியத் தொல்லை அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## திட்டமிட்ட காரியங்கள் நடைபெறும்



ஆவணி மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் விரயஸ்தானத்தில் வக்கிரம் பெற்றிருக்கின்றார். ஏழரைச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது உள்ளது.

விரயாதிபதி வியாழனும், விரயஸ்தானத்திலேயே வக்கிரம் பெற்றிருக்கின்றார். கேதுவும் 12 இல் சஞ்சரிக்கின்றார். எனவே விரயங்கள் அதிகரிக்கும் நேரமிது. வீண் பிரச்சினைகள் தேடி வரலாம்.

### உச்ச புதனின் சஞ்சாரம்

ஒகஸ்ட் 29 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப்போகின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். இக்காலத்தில் தந்தை வழி உறவில் இருந்த விரிசல் மறையும். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

### கடகசுக்கிரனின் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒகஸ்ட் 31 ஆம் திகதி 7 ஆம் இடமான கடக இராசிக்கு வரப்போகின்றது. இதன் விளைவாகக் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவீர்கள். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

செப்டெம்பர் முதல் திகதி ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் இருந்த ராகு, 5 ஆம் இடத்திற்கு வரப்போகின்றார். 12 ஆம் இடத்தில் இருக்கும் கேது லாப ஸ்தானத்திற்கு வருகின்றார். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு முன்னேற்றமான செய்தி வந்து சேரும்.

### குருவின் வக்கிர நிவர்த்தி காலம்

செப்டெம்பர் 9 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் வக்ர நிவர்த்தியாகின்றார். விரயாதிபதி வக்கிர நிவர்த்தியாகும் இந்த நேரத்தில் விரயங்கள் கூடுதலாக இருக்கும்.




குடும்பச் சுமையும் அதிகரிக்கும். இடமாற்றம், வீடு மாற்றங்கள் ஒரு சிலருக்கு அமையலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரத்திலிருந்து அழைப்புகள் வரலாம்.

### சனியின் வக்கிர நிவர்த்தி காலம்

செப்டெம்பர் 14 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிநாதனாகவும், தனாதிபதியாகவும் விளங்கும் சனி வக்கிர நிவர்த்தியாவதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். கொடுத்த கடன்கள் வசூலாகும். தொழில் முன்னேற்றம் கருதி பிற இனத்தார்களைக் கூட்டாகச் சேர்க்கலாமா? என்று சிந்திப்பீர்கள். மூத்த சகோதரத்தால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.

இம்மாதம் இல்லத்து பூஜை அறையில் சஞ்சீவி மலையைத் தூக்கிச் செல்லும் அனுமன் படத்தை வைத்து வழிபட்டு வருவதோடு அனுமன் கவசமும் படிப்பது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் குடும்பச்சுமை கூடுதலாக இருக்கும். செவ்வாய் பலம் நன்றாக இருப்பதால் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் உண்டு. பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து மகிழ்ச்சி காணபர்.

(தொடரும்)

# ஒரு நாடு ஒரு சட்டம் என்ற விடயத்தின் உண்மைநிலையை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் -முஜிபுர் ரஹ்மான்

(கொழும்பு)

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற அரசாங்கத்தின் கொள்கையின் உள்ளர்த்தத்தை அரசாங்கம் வெளிப்படையாக தெரிவிக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதிகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி பல்வேறு நிலைப்பாடுகளைக்கொண்ட குழுக்களை இணைத்துக்கொண்டு 2019, 2020ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இரண்டு தேர்தல்களில் இன, மத அடிப்படையில் பிரசாரங்கள் மேற்கொண்டு பாரிய வாக்குகளை பெற்றுக்கொண்டார். இவர்களுடன் ஜனாதிபதியின் திட்டங்களை நிறைவேற்றுவது பாரிய சவாலாகும்.

1956இல் இனவாதிகளுடன் சேர்ந்து ஆட்சியை முன்னெடுத்தமையால்தான் பண்டாரநாயக்க தமது உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த அரசாங்கத்தின் பின்னாலும் அவ்வாறானவர்கள் உள்ளனர். பண்டாரநாயக்கவுக்கு ஏற்பட்ட நிலைமையை ஜனாதிபதி உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் உலகத்துடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

மதில்களை அமைத்துக்கொண்டு பயணிக்க முடியாது. உலகத்துடன் ஒன்றிணைந்து பயணிக்கும் நிலைப்பாட்டுக்கு எதிரான கொள்கைகளை கொண்டவர்களுடன் இணைந்து பயணிப்பது ஜனாதிபதிக்கு பாரிய சவாலாகும்.

மேலும் ஒரு நாடு ஒரு சட்டம் என ஜனாதிபதி கூறியுள்ளார். அது தொடர்பில் எமக்கு தெளிவில்லை. நாட்டில் பல இனக்குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு



இனக்குழுக்களுக்கும் சம்பிரதாயபூர்வமான சில சட்டங்கள் உள்ளன. அவை தொடர்பில் எவ்வித கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. நாம் இப்போது ஒரு நாடு ஒரு சட்டம் என்ற அடிப்படையில் தான் வாழ்கின்றோம்.

ஆனால் அரசாங்கம் இதனை அடிக்கடி தெரிவித்து வருவது தொடர்பில் எமக்கு சந்தேகம் எழுகின்றது. அதனால் அரசாங்கத்தின் ஒரு நாடு ஒரு சட்டம் என்ற கொள்கையின் உண்மையான உள்ளடக்கத்தை மக்களுக்கு வெளிப்படையாக தெரிவிக்கவேண்டும்.

மேலும் அமைச்சரவையில் உள்ள 14 பேருக்கு நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளன. அவ்வாறானவர்களை வைத்துக்கொண்டு எவ்வாறு தூய்மையான அரசியல் கலாசாரத்தை உருவாக்க முடியும் எனக் கேட்கின்றோம்.

அதேபோன்று புத்திஜீவிகள் கொண்ட குழுவொன்றினாலே வெளிநாட்டு தூதுவர்களை நியமிப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் மாலைதீவுக்கான தூதுவர் 85 வயதுடையவர். இவருக்கு எந்த புத்திஜீவிகள் அமைப்பு அனுமதி வழங்கி இருந்தது எனக்கேட்கின்றேன்.

எனவே அரசாங்கம் கொண்டுவரும் நல்லவிடயங்களை நாம் ஆதரிப்போம். ஆனால், மக்கள் பக்கம் நின்று மக்களின் ஜனநாயகத்திற்காகவே எப்போதும் செயற்படுவோம் என அவர் தெரிவித்தார். (ஐ-2)

# அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதை வெளிப்படுத்த வேண்டும் - சஜித்



(கொழும்பு)

நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு ஆளாகி இருக்கின்றது. இதிலிருந்து நாட்டை எவ்வாறு மீட்பதென்ற இலக்கு அரசாங்கத்திடம் இல்லை. அதனால் அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவதென்பதை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு பாரிய பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அரசாங்கம் அதனை மக்களுக்கு மறைக்கின்றது. மக்களுக்கு மறைப்பதன் மூலம் இந்த பிரச்சினையில் இருந்து மீளமுடியாது.

நாட்டின் அபிவிருத்தி இலக்கை எவ்வாறு பூரணப்படுத்துவது?, எந்த காலத்தில் பூரணப்படுத்துவது, என்ற விடயங்கள் கொள்கை பிரகடனத்தில் தெரிவிக்கப்படவில்லை.

மேலும் அரசாங்கத்தின் கொள்கை பிரகடனம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அதில் எந்த குறையும் இல்லை. ஆனால் கொள்கை பிரகடனத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது என அதில் தெரிவிக்கப்படவில்லை.

அதனால் அரசாங்கம் முன்வைத்திருக்கும் கொள்கை பிரகடனத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவதென்று நாட்டுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

அத்துடன் கொவிட் 19 காரணமாக நாட்டில் 4 இலட்சத்துக்கும் அதிகமானவர்களின் தொழில் இழக்கப்பட்டிருக்கின்றது. அவர்களின் தொழில் வாய்ப்புக்களை பாதுகாத்து மீண்டும் அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்தார். (ஐ-2)

# பாக்.தூதரக பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் இராணுவத் தளபதி சவேந்திரவுடன் சந்திப்பு



(கொழும்பு)

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் பாதுகாப்பு இணையதிகாரியான கேர்னல் சஜாட் அலி, அவரது பணிவுக் கால நிறைவின் பின்பு தூதரகத்தை விட்டுச் செல்வதன் நிமித்தம் நேற்று முன்தினம் இராணுவத் தலைமையகத்தில் பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும், இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவை சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது இராணுவ தளபதி 2009 ஆம் ஆண்டு பாகிஸ்தானால் கடந்த மனிதாபிமான நடவடிக்கைகளின் போது வழங்கிய தளபாட ஒத்துழைப்பிற்கும் நன்றியை இந்த அதிகாரியுடன் பகிர்ந்து கொண்டு விடைபெற்றுச் செல்லும் இந்த அதிகாரிக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இலங்கை ஆயுதப் படைகளுக்கு பாகிஸ்தான் இராணுவத்தின் தொடர்ச்சியான சிறந்த ஆதரவை உறுதிப்படுத்திய கேர்னல் சஜ்ஜாத் அலி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா கொவிட் -19 தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக அர்ப்பணித்த சேவைகளுக்காகவும், தனக்கும் இலங்கைக்கும் இடையில் திறம்பட செயற்படும் உறவுகள் குறித்தும் நன்றி தெரிவித்தார். இச்சந்திப்பின் இறுதியில் இவர்கள் இருவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்டன. (ஐ-2)

# இரு பௌத்த பல்கலைக்கழகங்கள் கல்வியமைச்சின் கீழ்

(கொழும்பு)

மகாசங்கத்தினரின் வேண்டுகோளின்பேரில் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தையும் புத்த ஷிராவக பிக்கு பல்கலைக்கழகத்தையும் கல்வி அமைச்சின் கீழ்கொண்டு வருவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இரண்டு பல்கலைக்கழகங்களையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

இப்பல்கலைக்கழகங்களின் தனித்துவத்தை பாதுகாக்கும் வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சரின் கீழ் முறையாக மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி பௌத்த ஆலோசனைக் குழுவின் ஐந்தாவது கூட்டத்தொடரின் போது ஜனாதிபதியினால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (ஐ-4)



தன் சொந்தக் கால்களில் தலைநிமிர்ந்து நிற்பவனாகச் செய்யவல்ல கல்வியே நமக்கு வேண்டப்படுவது. – விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆட்சிக்கொரு பாடமாற்றம் ஆற்றலைகிறது எம் கல்வி

இலங்கையின் கல்விக் கொள்கை குறித்த விமர்சனங்கள் இன்னமும் தீர்ந்தபாடில்லை,

காலத்துக்குக் காலம் ஆட்சிப் பீடமேறும் அரசாங்கங்கள் பாடத்திட்டங்களை மாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றன.

தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் பதவியேற்கும் போது புதிய கல்வி அமைச்சர் நியமிக்கப்படுகிறார்.

அவர் கல்வி அமைச்சராகப் பதவியேற்றதும் அவரின் முதலாவது அறிவிப்பு பாடத்திட்டம் பொருத்தமில்லை. அதனை மாற்றியே ஆக வேண்டும் என்பதாகவே இருக்கும்.

இந்த மரபை புதிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் மீறாமல் பாடத்திட்டத்தை மாற்ற வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இஃது அரசாங்கங்களினதும் கல்வி அமைச்சர்களினதும் வழமையாக இருக்க,

பொதுப் பார்வையில் இலங்கையின் பாடசாலைக் கல்வியும் கலைத்திட்டமும் மனித வாழ்க்கைக்கு உதவுவதாக இல்லை என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.

இதன் காரணமாக பாடசாலைக் கல்வியை நிறைவுபடுத்தி விட்டு, எந்த வேலையிலும் இணைய முடியாத வெறுமை எம் இளம் சமூகத்திடம் இருப்பது உணரப்படுகின்றது.

இதுதவிர, இலங்கையின் பாடவிதானத்தில் சமய பாடம் கற்பிக்கப்படுகிறதாயினும் சமய பாடம் என்பது பரீட்சைப் பெறுபேற்றுக்கானதாக இருக்கின்றதேயன்றி, சமய பாடத்தைக் கற்றதனால் பண்பாட்டு விழுமியங்களும் மனித நேயங்களும் ஜீவகாருண்யமும் எங்களிடம் மிகுந்திருக்கிறது என்று கூற முடிகிறதா? என்றால் இல்லவே இல்லை.

ஆக, சமயக் கல்வி என்பது நம் மண்ணில் படுதோல்வி கண்டுள்ளது என்றே கூற முடியும். இதை நாம் கூறும்போது, உங்களில் பலர் மெல்லியதாகச் சிரித்துக் கொள்வீர்கள்.

அந்தச் சிரிப்பின் உள்ளார்ந்தம்; பௌத்த பிக்குகளிடம் கூட மனிதநேயத்தை வளர்த்து விட முடியவில்லை எனும்போது, வாரத்தில் இரண்டு பாடவேளையாக, வெறும் 80 நிமிடங்கள் மட்டுமே போதிக்கப்படுகின்ற சமயக் கல்வி மாணவர்களிடம் அற வாழ்வை ஏற்படுத்தி விடும் என நினைப்பது தவறு.

ஆக எமது கல்வித்திட்டம், கலைத்திட்டம் என்பன மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது உண்மையாயினும் அந்த மாற்றம் மாணவர் சமூகத்தில் நேர்க்கணிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமே தவிர,

மீண்டும் மீண்டும் பாடமாற்றத்தை மட்டும் செய்வதாக இருக்கக்கூடாது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

# சுகாதார வழிமுறைகளை பாடசாலைகள் கடுமையாக பின்பற்ற வேண்டும்

## கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது கடைபிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள வழிமுறைகள் கடுமையாக பின்பற்றப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று முற்பகல் மல்வத்து மஹா விஹாரையின் மஹாநாயக்கரை சந்தித்து நல்லாசி பெற்றார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், பாடசாலை பரீட்சைகள் இடம்பெறும் போதும் இந்த நடைமுறைகள் மிகக் கடுமையாக பின்பற்றப்பட வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் தற்போதைய சமகால அரசாங்கம் பாரிய வெற்றியை பெற்றது. இது நாட்டிற்கு நன்மையான ஒரு விடயமாக அமையும். நாட்டுக்கு பொருத்தம் இல்லாத அரசியல் அமைப்பு சீர்திருத்தம் மறுசீரமைக்கப்படும் எனவும் விரைவில் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-3)

# 5 வயதிற்கு உட்பட்ட 46 குழந்தைகளை சிறையிலிருந்து விடுவிக்க நடவடிக்கை

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வழங்கிய அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து சிறையில் உள்ள 46 குழந்தைகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5 வயதிற்கு உட்பட்ட 46 குழந்தைகள் தற்போது நாடு முழுவதும் உள்ள சிறைகளில் தங்கள் தாய்மார்களின் பராமரிப்பில் உள்ளனர் என்று பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பெண்களுக்கு பிறந்த குழந்தைகள் மற்றும் பல்வேறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தாய்மார்களின் பராமரிப்பில் உள்ள சிறு குழந்தைகளே சிறைக்கு வெளியே பராமரிக்கப்படவுள்ளனர்.

சிறைச்சாலை சீர்திருத்தங்களுக்கான இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே இது குறித்து தெரிவிக்கையில், குழந்தைகளை விடுவிப்பதற்கான செயல்முறைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் சிறைச்சாலைத் துறை தெரிவித்துள்ளது. (ம-3)

# கணவன் - மனைவி மீது வீடு புகுந்து தாக்குதல்

## தென்மராட்சியில் சம்பவம்

(சாவகச்சேரி)

ஆயுதங்களுடன் வந்த வன்முறைக் குழுவொன்று வீடு புகுந்து தாக்கியதில் வீட்டில் இருந்த கணவன்-மனைவி இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று தென்மராட்சி மறவன்புலவு மத்திய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆயுதக் கும்பல் தடிகள் மற்றும் பொல்லுகளால் தாக்கியதில் மறவன்புலவு மத்திய பகுதியைச் சேர்ந்த 45வயதான மு.யசோதரன் மற்றும் அவரது மனைவியான 37 வயதான ய.தர்சினி ஆகியோரே தாக்குதலில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்த வந்த கும்பலில் ஆறு பேர் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,60)

# நெடுந்தீவு யுவதி மன்னாரில் சடலமாக மீட்பு

## இரு பெண்கள் கைது

(மன்னார்)

மன்னார்-சௌத்பார் புகையிரத நிலைய பிரதான பாதை அருகில் காணப்படும் உப்பளத்திற்கு சொந்தமான உப்பு உற்பத்தி பாத்தியில் இருந்து கடந்த 13 ஆம் திகதி நெடுந்தீவைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.


குறித்த மரணம் தொடர்பில் உயிரிழந்த யுவதியின் குடும்ப உறவுப் பெண் மற்றும் மேலும் ஒரு பெண்ணையும் மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த யுவதி யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சேர்ந்த 21 வயதுடையவர் எனவும் கைது செய்யப்பட்டவர்களில் உயிரிழந்த யுவதியின் இரத்த உறவினர் ஒருவரும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,285)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

புத்திமான் எல்லாக் காலத்திலும் கவனத்துடன் தனது ஆன்மாவை தியானிக்க வேண்டும். கண்ணால் காணப்படாவிட்டாலும் அது ஒன்றே உண்மையானது என்பதை உணருங்கள்.
- ஆதிசங்கரர்

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- கருணையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும். நேர்மையும் அமைதியும் ஒன்றையொன்று முத்தமிடும்.
- வீடும் செல்வங்களும் தந்தையரின் வாரிசு சொத்து. புத்தியுள்ள மனைவியோ ஆண்டவரிடமிருந்து கிடைப்பது.
- வெறும் பகட்டின் மூலம் சுலபமாய்ச் சேர்த்த செல்வம் விரைவில் குறைந்து போகும். ஆனால், உழைப்பின் மூலம் சிறுகச் சிறுகச் சேகரிப்பவனோ செல்வத்தைப் பெருக்குவான்.
- தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்திகள் தாகம் பிடித்த ஆன்மாவிற்குக் குளிர்ந்த தண்ணீர் போல.
- சிலரது நற்காரியங்கள் முன்னதாகவே பிரபலம் அடைகின்றன. அப்படி ஆகாதவைகளை என்றென்றைக்குமே மறைத்து வைத்து விட முடியாது.
- பிறர் உங்களுக்கு எதைதையெல்லாம் செய்ய வேண்டும் என்று ஆவல் கொள்கிறீர்களோ, அவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.
- உங்களிலே அறிவாளியும், கல்விமானும் யார்? தன் அறிவின் சாந்த குணத்தோடு தன் காரியச் சித்திகளைக் காண்பிக்கட்டும்.

# 126 அரச நிறுவனங்கள் ராஜபக்ஷக்களின் கீழேயுள்ளது

## மனுஷ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கத்தின் அமைச்சரவைக்கு கீழ் வருகின்ற 434 அரச நிறுவனங்களில் 126 நிறுவனங்கள் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களின் நிர்வாகத்தின் கீழே கொண்டுவரப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க பிரகடனம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தில் உள்ள விடயங்களை அரசாங்கம் உண்மையில் நிறைவேற்றுவார்களா? என்பது தொடர்பில் எனக்கு சந்தேகமே உள்ளது. இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே கோட்டையில் 20 ஏக்கர் நிலத்தை விற்றனர். அத்துடன் நிறுவனமொன்றுக்கு மொனராகலை பகுதியில் காணிகள் விற்கப்பட்டன.

அதேபோன்று ஒரே நாடு, ஒரே சட்டம்எனக்கூறுகின்றனர். ஆனால் குருநாகல் நகர மேயர் தொல்பொருள் இடமொன்றை இடித்த போது அவர் மீது கை வைக்க இடமளிக்க மாட்டோம் எனத் தெரிவித்தனர்.

அதேபோல் அரச சேவைக்கு செல்லும் போது பொலிஸ் அறிக்கையை கேட்பதுடன் வழக்குகள் இருக்கின்றனவா எனவும் பார்க்கின்றனர். ஆனால் இந்த பாராளுமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரும், நீதிமன்றத்தில் குற்றவாளியாக 5 வருடங்களாக சிறையில் இருப்பவரும் உள்ளனர். சட்டமா அதிபர் தனக்கு வேலைகளை செய்ய இடமளிக்கின்றார் இல்லையெனவும் தெரிவித்தார்.

இவர்களின் சேவைகள் நாட்டுக்காகவா அல்லது குடும்பத்திற்காகவா என்று பார்க்கும் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களாக சமல் ராஜபக்ஷ, நாமல்ராஜபக்ஷ என்ற இருவர், அத்துடன் இராஜாங்க அமைச்சராக சசிந்திர ராஜபக்ஷ மற்றும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் நிபுண என ஒரு வலையமைப்பு உருவாக்கியுள்ளனர்.

அதுமட்டுமல்ல பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் 3 அமைச்சுகள், கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் 23 நிறுவனங்கள், சமல் ராஜபக்ஷவின் கீழ் 17 நிறுவனங்கள், பிரதமர் வகிக்கும் அமைச்சு பதவிகளின் 76 நிறுவனங்களும், நாமல் ராஜ பக்ஷவின் கீழ் 7 நிறுவனங்களும், சசிந்திர ராஜபக்ஷவின் கீழ் 6 நிறுவனங்களும் உள்ளன.

அதேபோன்று அமைச்சு பெயர் குறிப்பிடப்படாத முக்கிய 7 நிறுவனங்கள் பசில் தலைமையிலான கொவிட் கட்டுப்பாட்டு பிரிவின் கீழ் இருக்கின்றன. இதன்படி 126 நிறுவனங்கள் ராஜபக்ஷ குடும்பத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

434 நிறுவனங்களில் 126 நிறுவனங்கள் அதாவது 26 வீதமான நிறுவனங்கள் ராஜபக்ஷ சகோதரர்கள் குழுமத்தின் கீழே இயங்குகின்றன என அவர் தெரிவித்தார். (ஜ-2)

# மலையக மக்களுக்காக அனைத்து மொழிகளிலும் நாங்கள் பேசுவதற்கு தயாராக இருக்கின்றோம்

## வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு



(கண்டி)

மலையக மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இத்தாலி மற்றும் பிரெஞ்சு மொழிகளிலும் பேசுவதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க பிரகடனம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வடிவேல் சுரேஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமென யாரும் நினைத்தால் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான மலையக மக்களை யாரும் மறந்து விட முடியாது.

சிலோன் டீ என்ற பெயருக்கு காரணமானவர்கள் மலையக மக்களே. எனினும் 200 வருட காலமாக மலையக மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். இன்னும் அவர்களுக்காக வீடுகள், பாதைகள் முறையாக அமைக்கப்படவில்லை. அதே வேளை அடாவடி நிர்வாகங்களினால் இன்னும் மலையக மக்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்.

இவர்கள் என்றுமே தனி நாடு என்று கதைத்தது கிடையாது. தமது உரிமை மற்றும் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை கேட்கின்றனர்.

இதற்காகத்தான் அவர்கள் போராடுகின்றனர். ஆனால் அவர்களுக்கான 1000 ரூபா சம்பளம் வழங்கப்படவில்லை. அவர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கின்றது.


ரணில் அரசாங்கமும் சரி, தற்போதைய அரசாங்கமும் சரி, வழங்கிய வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லை. அவர்களுக்கு அந்த சம்பளத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பொருளாதாரத்தில் பின்னடைவாக இருந்தாலும் மலையக மக்கள் கல்வியில் உயர்வடைந்துள்ளதுடன் அரச தொழில்களிலும் இருக்கின்றனர்.

அதேபோன்று அவர்களுக்காக பேசுவதற்கு பாராளுமன்றம், மாகாண சபைகளில் உறுப்பினர்கள் இருக்கின்றனர். மலையக மக்களுக்காக அனைத்து மொழிகளிலும் பேசுவதற்காக நாங்கள் பாராளுமன்றத்தில் இருக்கின்றோம்.

அது தமிழாக இருக்கலாம், சிங்களமாக இருக்கலாம், ஆங்கிலமாக இருக்கலாம், பிரெஞ்சு மொழியாக இருக்கலாம், இத்தாலி மொழியாக இருக்கலாம். இந்த 5 மொழியிலும் என்னுடைய தொப்புள் கொடி உறவுகளான மலையக மக்களுக்காக செயலாற்றுவதற்கு தயாராக இருக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (ஜ-2)

# பிள்ளையான் மீண்டும் சிறைக்கு



(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என்கின்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் மீண்டும் நேற்றைய தினம் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

ஒன்பதாவது பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கு விடுக்கப்பட்ட நகர்வுப் பிரேரணைக்கான கோரிக்கைகள் ஏற்கப்பட்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றினால் அனுமதி வழங்கப்பட்டது.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் 2015 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனடிப்படையில் கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய நிலையில் அதில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பு மேல்நீதிமன்றில் நகர்வு மனுத்தாக்கல் செய்யப்பட்டு பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்கான அனுமதி கோரப்பட்டிருந்தது.

இதனையடுத்து 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி டி.எம். சூசைதாசன், பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கும் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வில் கலந்து கொள்வதற்குமான அனுமதியை வழங்கினார்.

இந்நிலையில், பாராளுமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர் மீண்டும் நேற்று மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# 6 மில்லியன் டொலர் உதவியை வழங்கும் அமெரிக்கா

(கொழும்பு)

நாட்டில் கொரோனா நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் மக்களுக்காக 6 மில்லியன் டொலர் உதவியை வழங்கியதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ள 6 மில்லியன் உதவித் தொகையில் பொருளாதார நெருக்கடிக்கு 2 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக சேவைகளை அதிகரிக்கவும், சமூக ஒத்திசைவுக்கான குறிப்பிட்ட அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்யவும் எதிர்மறையான பொருளாதார தாக்கங்களைத் தணிக்கவும் மிகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் பெண்களின் பொருளாதார பங்களிப்பை அதிகரிப்பதற்கும் இலங்கைக்கு 2 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கு சுகாதார அமைப்புகளுக்கும் தொற்று கண்டுபிடிப்பு மற்றும் கண்காணிப்பை செயற்படுத்தவும் 1.3 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொரோனா தொற்று ஏற்பட்டதில் இருந்து சுமார் 1.6 பில்லியன் டொலரை சர்வதேச அபிவிருத்தி, அவசர சுகாதாரம், மனிதாபிமான, பொருளாதார மற்றும் மேம்பாட்டு உதவிகளுக்காக அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## 13ஆவது திருத்...

ணக்கம் குறித்த இந்தியாவின் நீண்டகால நிலைப்பாடு மற்றும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் விளைவாக 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதுடன் அதன் ஒரு பகுதியாக 9 மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் சில அதிகாரங்கள் பகிரப்பட்ட போதிலும் அதில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் இன்னும் வழங்கப்படவில்லை.

அதேவேளை இலங்கை - இந்திய உடன்படிக்கையின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படைகள் தொடர்பாக இந்தியா கூடிய அர்ப்பணிப்புடன் இருப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் தமது பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 13ஆவது திருத்தச் சட்டம் உட்பட இலங்கையில் முன்னெடுக்கப்படும் அனைத்து விடயங்கள் சம்பந்தமாக புதுடில்லி உன்னிப்பாக அவதானித்து வருகிறது எனவும் இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார் எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம-3)

## வவுனியாவில்...

ஒன்று இருப்பது தொடர்பாக கனகராயன் குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தினை அடையாளப்படுத்தியதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சடலத்தில் காயங்கள் காணப்படுகின்ற நிலையில் கொலை என்ற ரீதியில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த சடலத்தினை வவுனியா நீதவான் நீதிமன்ற நீதிபதி தஸ்லீமா பௌசானா நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

சம்பவத்தில்க. இந்திரகுமார் (வயது - 75) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## அமைப்பாளர்...

எனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் தொடர்ந்தும் நானே இருப்பேன் என்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடக பேச்சாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி இரு தினங்களில் எனக்கு கட்சித் தலைவர் மற்றும் செயலாளரினால் நான் பதவி விலக்கப்பட்டுள்ளதாக கடிதம் மூலம் அறிவித்திருந்தனர்.

கடந்த பாராளுமன்ற தேர்தல் காலத்தில் நான் இந்த தேர்தலில் தோல்வி யுற்றால் தேர்தல் அரசியலில் இருந்து விலகுவேன் என அறிவித்திருந்தேன். இதனை எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அரசியலில் இருந்து வெளியேறுவதை பலரும் விரும்பாததால், நான் தொடர்ந்து அரசியலில் பயணிப்பேன்.

எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் என் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை நிராகரித்துள்ளேன். எனக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் இயற்கை நீதி கோட்பாட்டுக்கு எதிரானது.

மத்திய குழு கூட்டம் ஏன்? எதற்கு? எனக் கூறப்படாமல் கூட்டப்பட்டது. எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. என் தரப்பு நியாயங்களை கூற சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இது ஜனநாயகம் இல்லாதது; அறமற்ற செயற்பாடாகும்.

அதில் பிரதான குற்றச்சாட்டு பணம் வாங்கியதாக உள்ளது. நான் எனது சொந்த தேவைக்காக பணம் பெறவில்லை. அதனை முற்றாக மறுக்கிறேன். ஏனைய விடயங்கள் தொடர்பாக பொது வெளியில் பிரஸ்தாபிக்க விரும்பவில்லை. அது தொடர்பாக எனது பதில் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன்.

எனக்கு எதிராக கட்சியினால் எடுக்கப்பட்ட ஜனநாயக பண்பற்ற ஒரு தீர்மானம் என்பதாலும், இயற்கை நீதி கோட்பாட்டிற்கும் எதிரானது என்பதனாலும் நான் தொடர்ந்து தேசிய அமைப்பாளராகவும் ஊடக பேச்சாளராகவும் செயற்படுவேன்.

எம் இனத்திற்காக உயிர் நீத்தவர்களை மனதில் நிறுத்தி அர்ப்பணிப்புடன் எனது செயற்பாடுகள் தொடரும் என ஆணித்தரமாக கூறுகிறேன்.

இன்று தேசியம் பேசுபவர்கள் பிளவுபட்டு நிற்பதனால் சிங்கள கட்சிகள் தேசியம் பேசாதவர்கள் வெற்றி பெறுகின்றார்கள். அதனால் சிறு சிறு பிரச்சினை களுக்காக பிரிந்து செல்வதனை நான் என்றைக்கும் ஏற்கமாட்டேன்.

தேர்தல் காலத்தில் எனக்கு எதிராக கட்சியை சேர்ந்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கடந்த 9ம் திகதி எனது நண்பன் சட்டத்தரணி அர்ஜுனாவுடன் சென்று சந்தித்து முறையிட்டு சில ஆதாரங்களையும் முன்வைத்தோம். அது தொடர்பில் எனக்கு இதுவரை தலைவர் எந்த பதிலையும் தரவில்லை.

எனக்கும் தலைவருக்கும் இடையிலான உறவு ஆழமானது. நான் என்றும் இணைந்து செயற்படுவேன். நான் எனது கட்சியுடன் நேசக்கரத்தை நீட்டுவேன்.

எனது கட்சி நிறுவனமயப்படுத்தப்பட்டு மக்கள் சேவைக்காக செயற்படும். அதற்காக தொடர்ந்து செயற்படுவேன் என உறுதி அளிக்கிறேன். காலங்கள் பல பதில்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் என நம்புகிறேன்" என்றார். (ம-3)

## வடக்கு பிரதிநிதி...

அஸ்கிரிய மற்றும் மல்வத்துபீடங்களின் தலைமைத் தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட பின் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே கல்வியமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் அரசியல் மிகவும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன்று தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் அல்ல.

தாங்களே தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் என்றும், தமிழர்களின் குரல் என்றும், தமிழ் மக்கள் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதற்குத் தங்களிடமே அதிகாரம் இருப்பதாகவும் கூட்டமைப்பு இதுவரை பாராளுமன்றத்தில் கூறிவந்தது. எனினும் இனி அவ்வாறு அவர்களுக்கு கூறமுடியாது.

இன்று வேறு சில தலைவர்களும் வடக்கிலிருந்து தெரிவாகியுள்ளனர். விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார், அங்கஜன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். தமிழ் மக்கள் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொடுத்துள்ளனர்.

வடக்கில் கல்வி சார்ந்த ஆவல் அதிகரித்திருக்கிறது. அரசாங்கம் பாரபட்சம் காட்டாது. அனைவருடைய ஆதரவும் அரசாங்கத்திற்கு அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## புதிய அரசியலமை...

களை முன்வைப்பதற்காக ஒரு குழுவை நாம் நியமிக்கவுள்ளோம்.

இதன் ஊடாக அனைத்து விடயங்களும் ஆராயப்படும்.

பின்னர், அனைவரது கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு, நாட்டுக்கு பாதிப்பில்லாத புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.

சுதந்திரக் கட்சிக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள சில அமைச்சுக்களில் அதிருப்தி காணப்படுவதால், இதுதொடர்பாகவும் நாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். எதிர்காலத்தில் இது தொடர்பாக நாம் நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதிக்கு எந்தவொரு பதவியும் வழங்காத விடயம் இணக்கப்பாட்டுடன்தான் மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில், அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்ளும் போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்களிப்பு பலமானதாக இருக்கும்.

அத்துடன் சுதந்திரக் கட்சியை நாம் பாதுகாப்போம். இந்தக் கட்சியை இறுதிவரை கொண்டுசெல்வோம்" என்று தெரிவித்தார். (ம-3)

## அரியாலையில்...

யாழ். அரியாலைப் பகுதியில் உள்ள வெற்றுக் காணியொன்றில் இருந்து மோட்டார் குண்டுகள் இருப்பதை அப்பகுதியில் உள்ளவர்களினால் நேற்று முன்தினம் கண்டறியப்பட்டது.

உடனடியாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் குறித்த மோட்டார் குண்டுகளை மீட்டுள்ளனர். (ம-3)

## 24 மணி நேர...

முந்துள்ளனர்.

அலவ்வ, இராவண, தம்புத்தேகம, நீர்கொழும்பு, கதங்கொட மற்றும் பாதுக பகுதிகளில் ஏற்பட்ட விபத்துக்களில் பத்து நபர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த ஆண்டு இதுவரை 10,924 விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் செய்தித் தொடர்பாளர் எஸ்.எஸ்.பி ஜாலிய சேனரத்ன தெரிவித்தார். (ம-3)

## ஹன்...

பட்டு வருவதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்பு நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதியரசர் விக்னேஸ்வரன்பாராளுமன்றத்தில் தனது கன்னி உரையில் தமிழர்கள் இந்த நாட்டின் ஆதிக்

குடிகள் எனவும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் எனவும் கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020 / 08 / 22 | 1528 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 07 | வெற்றி இலக்கங்கள் 14 39 59 60
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2020/08/22
சீட்டிழுப்பு இலக்கம் 4222
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
O 4 9 5 5 0 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 22-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2517
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கங்கள் 24 35 51 72
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22-08-2020 | சீட்டிழுப்பு இலக்கம் 1048
வெற்றி இலக்கங்கள்
B 0 8 6 2 2 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0589
வெற்றி எழுத்து Z | சுப்பர் இலக்கம் 20 | வெற்றி இலக்கங்கள் 14 15 24 49

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல. 1018
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.08.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,117,330/-
SEASON
வெற்றி இலக்கங்கள் 50 52 67 69 | ஆங்கில எழுத்து K
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 3720
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 855

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3354 | திகதி: 2020.08.22
பச்சை | சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 26 58 62 73 | Y
அடுத்த ஜக்பொட் 37,489,548/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1196
சீட்டிழுப்பு திகதி 22.08.2020 சனிக்கிழமை
T 15 59 62 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,441,650.80

ரூச அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2899 | வர்ணம் இள நீலம் | திகதி 22.08.2020
வெற்றி இலக்கங்கள் 19 30 47 49 | மீனம்
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 21,80,886
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வீடு வாடகைக்கு

யாழ். நகரப்பகுதியில்
மாடி வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்களுக்கு உகந்தது)

(3661)

TEL : 071 856 7567

## மணமகள் தேவை

அரசதுறையில் பணிபுரியும் இந்து
கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977ம்
ஆண்டு, கிரகபாவம் 56 1/2 உடைய
மணமகனுக்கு அரசதுறையில்
பணிபுரியும் மணமகள் தேவை.

(3661)

TEL : 077 719 3173

## தேவை

யாழ். நகர மத்தியில் இயங்கும்
கணக்காய்வு நிறுவனத்திற்கு
கணக்காளர்கள், பயிலுனர்கள் தேவை.
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

வி. இல. C-123,
வலம்புரி - இல. 03, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(C-123)

10வருட வெற்றிகரமான சேவையில்....

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக
கனடா சென்ற மாணவர்களினை நேரில்
வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

புதிய வகுப்புக்கள் IELTS, LIFESKILLS A1 மற்றும் GERMAN A1, DUTCH
10.08.2020 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம்.
இலவச பதிவுகளுக்கு : 0779265447 (please call at 10am - 5pm)

(C-126)

புதிய மாணவர்களுக்கு 25 வீதம் கட்டண கழிவு

யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில்
கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக
சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்

நேரில்வந்து சந்தித்து இலவச
ஆலோசனைகளை அறிந்து
கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY

அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம்
ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

## பாவித்த வீட்டுப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு

- AC
- மர, இரும்பு கட்டில்கள்
- Dressing Table
- Fridge
- மேசை (மரம், பிளாஸ்ரிக்)
- மெத்தை
- T.V

(3561)

TEL : 071 856 7567

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
- மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-112)

0768226240

## மணமகள் தேவை

1965, சிங்கராசி, உத்தர
நட்சத்திரத்தில் பிறந்த கனடா பிரஜா
வுரிமை உடைய விவாகரத்து பெற்ற
MBBS வைத்தியருக்கு சூரியன்,
செவ்வாய் தோசமுள்ள மணமகள்
தேவை.

(3660)

077 253 7860

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1983, பூரட்
டாதி 4ம் பாதம், சூரி + செவ் - 10, B.Sc, M.Sc,
குறுகிய காலத்தில் விவாகரத்தான, அவுஸ்தி
ரேலியா குடியுரிமையுள்ள மணமகனுக்கு
பொருத்தமான மணமகளைப் பெற்றோர்
எதிர்பார்க்கின்றார்கள்.

தொடர்பு

077 151 5165
Viber/WhatsApp


# மரண அறிவித்தல்



## உயர்திரு தம்பையா யோகறாஜா

RETIRED AERONAUTICAL COMMUNICATION OFFICER
RATMALANA, KATUNAYAKA AIR PORT, SRI LANKA

சுன்னாகம் தேவரானை புஷ்பகிரியைப் பிறப்பிடமாகவும் மொறட்டுவையை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு தம்பையா யோகறாஜா 20.08.2020 வியாழக்கிழமையன்று இறைபதமடைந்தார்.


அன்னார் சுன்னாகத்தை சேர்ந்த காலஞ்சென்ற ஆழ்வார் தம்பையா அன்னபூரணம் தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வரும் சுன்னாகத்தைச் சேர்ந்த சீனி சபாபதி பூமணி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் புஷ்பதேவியின் அன்பான கணவரும் சைலஜன் (பிரான்ஸ்), நிறோஜன் (கொழும்பு) ஆகியோரின் பிரியமான தந்தையும் சறோஜினிதேவி, ஜெயராஜா, விஜயராஜா, சௌந்தரராஜா (போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), மகேந்திரராஜா, கிருபாகரன் (அங்கர் பாதுகாப்பு சேவை) ஆகியோரின் பாசமான சகோதரரும் சபா. புஷ்பநாதன் (துர்க்கா பொத்தகச் சோலை, சுன்னாகம்), செல்வராணி, மனோரஜினி (ஆசிரியை யூனியன் கல்லூரி தெல்லிப்பளை ), சாமுண்டீஸ்வரி (ஆசிரியை, நாவலர் மகா வித்தியாலயம் - மட்டுநகர்), சபா. ஜகந்நாதன் (சாயி புத்தகசாலை கொழும்பு), ரஞ்சிதாதேவி, செல்வநாதன் (டென்மார்க்), Dr. ரேணுகாதேவி, சபாநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சத்தியநாதன், சற்குணநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பான மைத்துனரும் ஜெயபிரிதா (பிரான்ஸ்) அவர்களின் பாசமுள்ள மாமனாரும் அரீனா (பிரான்ஸ்), அத்மிரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பான பாட்டனாரும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.08.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் சுன்னாகம் தேவி வாசாவில் இடம்பெற்று இறுதிக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

தயவுசெய்து இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-121)

'தேவி வாசா',
Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

தகவல்:-
சபா. புஷ்பநாதன்





NPL தொடரின் 2வது Season மட்டுவில் வளர்மதி மைதானத்தில் நேற்று 22ம் திகதி கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆரம்ப விழாவிற்கு கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ. கிருபாகரன் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ராஜபக்சே ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். அத்துடன் NPL 2K20 தொடரின் வெற்றிக் கிண்ணம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. போட்டிகள் யாவும் 10 ஓவர்கள் கொண்ட 11 அணி வீரர்களை உள்ளடக்கியதாக ஒருங்கமைக்கப்பட்டுள்ளது.


## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

| | |
|---|---|
| பிரான்ஸ் | ரூ.1500/ரூ.1300 |
| ஜேர்மனி | ரூ.1500/ரூ.1300 |
| டென்மார்க | ரூ.1500/ரூ.1300 |
| கொலன்ட் | ரூ.1500/ரூ.1300 |
| பெல்ஜியம் | ரூ.1600/ ரூ.1300 |
| இத்தாலி | ரூ.1700/ ரூ.1450 |
| லண்டன் | ரூ.1500/ ரூ.1150 |

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள் (C-087)

எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

லண்டன்-1000/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1500/=
சுவிஸ்- 1400/= அவுஸ்ரேலியா- 1600/= / 1000/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 075 5522999 076 1221566 | பளை மன்னார் கொழும்பு 12


## NOTICE TO STUDENTS

**(Third Year and Final Year Students- Faculty of Engineering, Ariviyal Nagar, Kilinochchi Premises-University of Jaffna)**

Third year and final year batches of students of Faculty of Engineering are hereby informed that the normal academic activities will commence on **26th August 2020 (Wednesday)** at Faculty of Engineering, Ariviyal Nagar, Kilinochchi Premises, University of Jaffna. Third year and final year students of Faculty of Engineering are expected to be present at Ariviyal Nagar, Kilinochchi premises of University of Jaffna and attend the lectures and other academic activities from that day onwards. Students those who are given hostel accommodation should report to respective hostels on 25th August 2020 (Tuesday).

Registrar
22.08.2020 (C-129)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்


நாதம் 272

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 23.08.2020 தொலைபேசி : 021 222 3378



## அயோத்தியில் மீண்டும் இராம அவதாரம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஒருமாதிரியாகப் பாராளுமன்றத் தேர்தல் முடிந்து ஒன்பதாவது பாராளுமன்றமும் கூடிற்றுது. கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

கங்காணி இவ்வாறு கூறியதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட அவலத்தைப் பார்த்தியளோ. மூப்பர் மெதுவாகக் கூறினார்.

சாத்திரியார்: அதைத் தானே எங்கட நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயா பாராளுமன்றத்தில மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

சிறாப்பர்: இந்த நாட்டின் ஆதிக் குடிகளின் மொழி தமிழ் என்று நீதியரசர் கூறியதைப் பொறுக்க முடியாதவர்கள் அந்த உரையை ஹன்சார்ட்டில் இருந்து நீக்க வேணும் எண்டு சொல்லுகினம் பார்த்தியளோ.

விதானையார்: ஓ! உண்மையைச் சொன்னால் அவர்களுக்குப் பொறுக்க மாட்டுது தானே. இலங்கைத் திருநாட்டின் ஆதிக்குடிகளின் மொழி தமிழ் என்று விக்னேஸ்வரன் ஐயா கூறியதை ஹன்சார்ட்டில் இருந்து நீக்கலாம். ஆனால் வரலாற்றில இருந்து அதனை நீக்க முடியாது.

பண்டிதர்: என்னவோ நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயா பாராளுமன்றத்தில ஆற்றிய கன்னி உரை தமிழ் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையைத் தந்திருக்குது. அவரைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த தமிழ் மக்கள் கெட்டிக்காரர்கள் என்பதை எவரும் ஏற்றுத்தானாக வேண்டும்.

வாத்தியர்ர்: விக் னேஸ்வரன் ஐயா, தம்பி கஜேந்திரகுமார் ஆகியோர் பாராளுமன்றத்தில எழுந்து உரையாற்றினால் அது கனதியாக இருக்கும் எண்டதுதானே தமிழ் மக்களின்ர நிலைப்பாடு.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

விதானையார்: விக்னேஸ்வரன் ஐயாவின்ர களநிலை அவருக்குச் சாதகமாக இருக்குது. ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின்ர நிலைப்பாடு தான்.....

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் இழுத்தார். விதானையார் கூறியதை விளங்கிக் கொள்ள முடியாத கங்காணி கார்த்திகேயன் என்ன விதானையார் சொல்லுறியள். எதையும் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

விதானையார்: கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு இந்தத் தேர்தலில இரண்டு ஆசனம் கிடைத்தது ஒரு பெரு வெற்றிதான்.


ஆனால் சாண் ஏற முழம் சறுக்கிறது மாதிரி கஜேந்திரகுமாருக்கும் மணிவண்ணனுக்கும் இடையில கருத்து முரண்பாடு ஏற்பட்டு கட்சியின்ர முக்கிய பதவிகளில இருந்து மணிவண்ணனை நீக்கியமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு பின்னடைவு என்பதை ஏற்றுத் தானாக வேண்டும்.

பண்டிதர்: உண்மை தான் முன்னணி பெற்ற வெற்றிக்குப் பின்னால மணிவண்ணன்ர வகிபங்கும் நிறைய இருக்குது.

இந்த நிலையில மணிவண்ணனை கட்சியின்ர முக்கிய பதவிகளில இருந்து நீக்கியதை முன்னணியின் ஆதரவாளர்கள் விரும்பமாட்டார்கள்.

வாத்தியார்: கட்சியின்ர உள்வீட்டுப் பிரச்சினையில வெளியார் தலையிடக்கூடாது எண்டு கஜேந்திரகுமார் சொன்னவரல்லோ. அப்ப அதுபற்றி நாங்கள் கதைக்கிறது சரியோ.

விதானையார்: கட்சியின்ர உள்வீட்டுப் பிரச்சினையில வெளியார் தலையிடக்கூடாது எண்டு கஜேந்திரகுமார் கூறினது ஒரு அரசியல் அனுபவமானது அல்ல. எப்பவும் கட்சி



## இலங்கையின் ஆதிக்குடிகளின் தாய்மொழி எம் தமிழ்மொழியே

ஆதரவாளர்கள் கட்சி தங்கட என்ற மன உணர்வோட தான் இருப்பினம். இதை கட்டாயமாக அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேணும்.

இது எங்கட கட்சி. இங்க நடக்கிற பிரச்சினைகள் பற்றி எவரும் கதைக்க முடியாது எண்டு சொன்னால், அது சர்வாதிகாரத்தையே காட்டும். சர்வாதிகாரப் போக்கின் விளைவுகள் என்ன என்பதைப் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது.

வாத்தியார்: சரி...சரி... அரசியலோடேயே காலத்தைச் செலவழிக்காதீங்க.

விதானையார்: வாத்தியார் நீங்கள் சொல்லுறது சரியாயினும் அரசியலும் மிகவும் முக்கியம். இந்தாப் பாருங்க ஜனாதிபயாக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு அமைச்சுப் பதவி தனிலும் குடுபடல்ல.

மூப்பர்: அரசியலிலும் அறம் காப்பாற்றப்படவேணும் என்பதுதான் இங்கு அவதானிக்கப்பட வேண்டிய விடயம்.

சிறாப்பர்: மூப்பர் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர நியமன எம். பி. பதவியை அம்பாறைக்கு வழங்கிய விடயத்தை துரைராஜசிங்கம் தனித்துத் தீர்மானித்தவராம்.

சாத்திரியார்: அப்ப இந்த விடயம் சம்பந்தருக் கும் தெரியாதோ.

சிறாப்பர்: சம்பந்தருக்குத் தெரியாமல் துரையர் செய்திருக்கமாட்டார். ஆனால் மாவையருக்கு தெரியாது என்பது மட்டும் உண்மை.

விதானையார்: இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருக்கே தெரியாமல் நியமன எம்.பி. பதவிக்கான பெயரை கட்சிச் செயலாளர் துரைராஜசிங்கம் சிபார்சு செய்திருக்கிறார் என்றால், அந்தக் கட்சியின் செயற்பாடுகள் எப்படி இருக்குதெண்டு பாருங்களன்.

விதானையார்: இதுகள் என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் நியமன எம்.பி. பதவியை திருமதி சசிகலா ரவிராஜுக்குக் கொடுப்பதற்கு நினைத்திருந்தேன் எண்டு மாவை சேனாதிராஜா கூறாமல் இருந்திருக்கலாம் என்பதுதான் என்ர கருத்து.

கங்காணி: ஏன் விதானையார் அப்படிச் சொல்லுறியள்.

விதானையார்: கங்காணியார் எல்லாவற்றுக்கும் பதிலை எதிர்பார்க்க முடியாது. சில விடயங்களைப் புரிந்து கொள்ள வேணும்.

இவ்வாறு விதானையார்கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்த அனைவரும் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# மைத்திரி - ரணில் நிகழ்த்திய அரசியல் ஆட்டம் மக்கள் வழங்கிய தீர்ப்பு



இலங்கையின் வரலாற்றில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் தந்த படிப்பினைகள் பல. தேர்தல் முடிவுகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் என்பதை எவர் நிராகரிக்கின்றனரோ அவர்கள் அரசியல் நீரோட்டத்தில் பயணிக்க முடியாதவர்கள் என்பதே உண்மை. இதில் முக்கியமான படிப்பினை விருப்பு வாக்கு முறைமையாகும்.

பொதுவில் விருப்பு வாக்கு முறைமையானது அரசியல் கட்சிகளுக்குள் மிகப்பெரும் பிளவுகளையும் கருத்து முரண்பாடுகளையும் ஏற்படுத்தி நிற்கின்றது.

முன்பெல்லாம் தொகுதி வாரியாகப் பாராளுமன்றத் தேர்தல் முறைமை இருந்தபோது கட்சி அரசியல் என்பது மிக உறுதியான ஒற்றுமைப்பலத்தைக் கொண்டிருந்தது.

அதாவது யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் வேட் பாளருக்காகக் கட்சித் தலைமையும் ஏனைய தொகுதி வேட்பாளர்களும் மேடையேறி கர்ச்சிப்பர். அதுவே அந்தக் கட்சிக்குப் பெரும் வெற்றியைக் கொடுத்தது.

ஆனால் விருப்பு வாக்கு முறைமை நடைமுறைக்கு வந்த பின்பு வேட்பாளர்களிடையே பிரிவினை பலம் பெற்றிருந்தது.

ஒரு சில வேட்பாளர்கள் தங்களுக்குள் ஒன்றுசேர்ந்து நீ எனது இலக்கத்தையும் சேர்த்துச்சொல்; நான் உனது இலக்கத்தைச் சேர்த்துச் சொல்கிறேன் என்பதான எழுதா உடன்படிக்கையைச் செய்து கொண்டனர்.

எனினும் அதற்குள்ளும் சுத்துமாத்துகள் நடக்கவே செய்தன. எழுதா உடன்படிக்கையைக் கைவிட்டு, எனது விருப்பு இலக்கத்தை மட்டுமே தெரிவு செய்யுங்கள் என்ற பிரசாரம் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மேலாக எனது விருப்பு இலக்கத்திற்கு மட்டும் புள்ளடி இடுவதன் மூலம் அஃது மூன்று விருப்பு வாக்குகள் எனக் கணக்கிடப்படும் என்பதான பிரசாரங்களும் செய்யப்பட்டு உண்மைகள் மறைக்கப்பட்டதான திருகுதாளங்களும் தாராளமாக நடந்தாகின.

இவ்வாறான குத்து வெட்டுக்கள், நேர்மையீனங்கள், தேர்தலுக்குப் பின்னர் வெற்றி தோல்வி என்ற பெறுபேறுகள் கிடைக்கப்பட்ட கையோடு தாண்டவமாடத் தலைப்படுகின்றன.

இவ்வாறான நிலைமை வந்தபோது, கட்சிக்குள் முரண்பாடுகள், வேட்பாளர்களுக்குள் சண்டைகள் என்ற புயல் வீசத் தொடங்கிவிட, அரசியல் கட்சிக்குள் குழப்பங்களும் சிக்கல்களும் எழலாயின.

இதன்காரணமாக தேர்தல் முடிந்த கையோடு கட்சிகள் உடைவுற்று, அதன் உறுப்பினர்கள் வெளியேறுகின்ற- வெளியேற்றப்படுகின்ற நிகழ்வுகள் அரங்கேறுகின்றன.

தவிர, உள்ளக முரண்பாடுகள் மலிந்து சந்தைக்குவர, அது தொடர்பில் பல்வேறு கருத்துக்களும் அபிப்பிராயங் களும் மக்கள் மத்தியில் விமர்சனக் காற்றாய் வீசத்தலைப்படுகின்றது.

இவ்வாறாக விருப்பு வாக்குகள் கட்சிகளுக்குள் உள்ளக முரண்பாட்டை ஏற்படுத்துவது சர்வசாதாரணமாகிவிட்டது.

இவை ஒருபுறமிருக்க, நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் இந்த நாட்டின் மிகப் பழைமைவாய்ந்த முக்கியமான



அரசியல் கட்சிகளுக்கு பொது மக்கள் அடிபோட்டுள்ளனர் என்ற உண்மையை நாம் உன்னிப்பாகக் கவனித்தாக வேண்டும்.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பன தேசிய ரீதியில் மக்களால் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் விழுக்காடு இனி அந்தக் கட்சி எழவே முடியாது என்ற நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தோல்வி கண்டுள்ளார் எனில், அவரின் அரசியல் தலைமையை சிங்கள மக்கள் அடியோடு நிராகரித்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

அதேநேரம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தனது தேர்தல் மாவட்டமான பொலநறுவையில் அதி கூடிய விருப்பு வாக்குகள் பெற்று பாராளுமன்ற உறுப் பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மைத்திரி- ரணில் என்ற நபர்கள் ஜனாதிபதி- பிரதமர் என்ற பதவிகளை வகித்தவர்கள்.

ஜனாதிபதியாகத் தான் இருந்தபோது பிரதமர் ரணிலின் செயற்பாட்டில் வெறுப்புக்கொண்ட மைத்திரிபால சிறிசேன; பிரதமர் பதவியில் இருந்து ரணிலை நீக்கினார். மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கினார். தனது பதவிக்கு பாராளுமன்றில் இருக்கக்கூடிய ஆதரவை நிரூபிக்க முடியாமல் மகிந்த ராஜபக்ஷ தத்தளித்தபோது ஜனாதிபதியாக இருந்த மைத்திரி பாராளுமன்றத்தைக் கலைத்தார். இதன்போது கூட்டமைப்பு நீதிமன்றம் சென்று ரணிலைப் பாதுகாத்து மீண்டும் அவரைப் பிரதமராக்கியது.

இவ்வாறு மைத்திரிபால சிறிசேன எடுத்த அரசியல் அதிரடிகள் நாட்டையும் அரசியலையும் குழப்பினவாயினும் அவர் மீது மக்களுக்கு எந்தக் கோபமும் ஏற்பட்டிருக்க வில்லை. மாறாக ரணில் விக்கிரமசிங்க மீதே சிங்கள மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்தது என்பதை தேர்தல் முடிவுகள் சுட்டி நிற்கின்றன.

ஆக, மைத்திரி- ரணில் என்ற அரசியல் பாத்திரத்திரங்களுக்குக் கிடைத்த தேர்தல் முடிவுகள் சிங்கள மக்களின் தெளிவான அரசியல் மதிநுட்பத்தைக் காட்டி நிற்கிறது என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

விதுரன்




## சாதுர்யமான சிறுமி



பீர்பாலுக்கு ஐந்து வயதில் ஒரு மகள் இருந்தாள். அவள் மிகவும் சாதுர்யமாகப் பேசுவாள்.

ஒருநாள் தானும் அரண்மனைக்கு வருவேன் எனத் தந்தையிடம் அடம்பிடித்தாள். பீர்பாலும் மறுக்க முடியாமல் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அன்றுதான் முதல் முறையாக அரசரைப் பார்த்தாள்.

ஆனாலும் சிறுமி மிகவும் மரியாதையோடு அரசரை வணங்கிவிட்டு நின்று கொண்டிருந்தாள்.

அக்பர் பிரியத்தோடு சிறுமியை அருகில் அழைத்து குழந்தாய் உனக்கு ஏதேனும் சொல்லத் தெரியுமா? என விசாரித்தார்.

ஓ. எனக்கு நிறையவும்குறையவும் பேசத் தெரியுமே என்று கூறினாள்.

குறையவும் நிறையவும் என்றால் என்ன அர்த்தம் எனக் கேட்டார் அக்பர்.

பெரியோர் முன்பு குறைவாகப் பேசவேண்டும். சிறுவர் முன்பு நிறையப் பேச வேண்டும் என விளக்கம் கூறினாள் சிறுமி.

புலிக்கு பிறந்தது பூனையாகுமா? தந்தையைப் போல மகளும் என்று இருவரையும் புகழ்ந்து பாராட்டியதோடு சிறுமிக்குப் பரிசுகள் தந்தார் அக்பர்.

**நீதி: சுருங்கச் சொல்லி விளக்கம் தருவது.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## சோழ வளநாடு சோறுடைத்து...

45



பழங்கால அளவை முறைகள்

இந்த ஏற்பாட்டின் படி மூலதனம் இம்மியும் நகராமல் அப்படியே வங்கியில் இருந்தது. வட்டியாக வருகிற வருமானத்தை எடுத்துக் கோயில் காரியங்களுக்கு செலவு செய்தார்கள்.

பெரிய கோயிலில் திருவிளக்குகள் ஏற்றுவதற்காக நெய் முதலிய பொருட்கள் வாங்க ஆயிரக்கணக்கான ஆடுகள், பசுக்கள், எருமைகள் போன்றவற்றைத் தானமாகக் கொடுத்திருந்தார் ராஜராஜன்.

ஒரு விளக்குக்கு நாள் ஒன்றுக்கு ஓர் உழக்கு நெய் (ஒரு உழக்கு- முந்நூற்று முப்பதாறு மில்லிலீற்றர்) அளிக்க வேண்டும்.

இதற்குப் பணம் கொடுத்தால் அரசுக்குச் செலவு தானே. அதனால் ஊருக்குப் பயன்படும் விதத்தில் கால்நடைகளையே கொடையாக அளித்திருந்தார்.

கால்நடையைப் பெற்ற மக்கள் பதிலுக்கு என்ன செய்யவேண்டும்? கோயிலுக்குத் தேவையான நெய் மற்றும் பால் தேவையுள்ள பொருட்களைத் தானமான கோயிலுக்கு வழங்கவேண்டும். இதனால் கொடையாகக் கொடுக்கப்படுகிற பொருட்கள் அரசின் செலவுகளைக் குறைத்தன.

மன்னர் கொடை வழங்கும் போது அமைச்சர் பெரு மக்கள் கைகட்டி வேடிக்கை பார்க்கமுடியுமா? அமைச்சர்,உயர் அதிகாரிகள் என அனைவருமே இந்தத் திருவிளக்குக் கொடையில் பங்கு பெற்றார்கள். கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாகும் போது ஒரு காசுக்கு 2 ஆடும், இரண்டு காசுக்கு ஒரு பசுவும், மூன்று காசுக்கு ஒரு எருமையும் விற்கப்பட்டன. அரசுக்கு வருமானம் பண்டாரத்துக்கு முதலீடு.

பெரிய கோயிலுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் கலம் நெல்லும் 300 கழஞ்சுப் பொன்னும் 2000 காசுகளும் நிரந்தர வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்தார் ராஜராஜன்

(இந்த இடத்தில் பழந்தமிழர் கடைப்பிடித்த சில அளவுகளைத் தெரிந்து கொண்டால் இன்றைய அளவைப்படி அது எவ்வளவு எடை கொண்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.

முன்னூற்று அறுபது நெல்=ஒரு சோடு; ஐந்து சோடு=ஒரு ஆழாக்கு; இரண்டு ஆழாக்கு= ஒரு உழக்கு; இரண்டு உழக்கு ஒரு உரி, இரண்டு உரி= ஒரு நாழி, எட்டு நாழி= ஒரு குறுணி, இரண்டு குறுணி=ஒரு பதக்கு; இரண்டு பதக்கு=ஒரு தூணி மூன்று தூணி=ஒரு கலம்)

ஊரின் மொத்த நிலப் பரப்பு, அதில் வரி விலக்கு பெற்ற விளை நிலங்கள், கோயில்களுக்கு தேவதானமாகத் தரப்பட்ட நிலப்பரப்பு, அதற்கான வரியைக் கோயிலுக்குச் செலுத்துதல், அளக்க வேண்டிய நெல்லின் அளவு போன்ற விபரங்கள் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டன.

பல ஊர்களில் உள்ள பல பல நிலப்பரப்புகளின் துல்லியமான நில அளவும், ஊர்ச் சபையினரால் கோயிலுக்கு வரவேண்டிய நெல்லின் அளவும், அப்படி வரும் நெல்லை எப்படி செலவளிக்க வேண்டும் என்பன போன்ற விபரங்களும் குறித்து வைக்கப்பட்டன.

உதாரணமாக, குந்தவையார் கோயிலுக்குக் கொடுத்த காசில், ஒரு ஊரைச் சேர்ந்த ஊர்ச்சபையினர் ஐநூற்று இருபது காசு பெற்றுக் கொண்டால், அதற்கு ஈடாக அவர்கள் முதல் ஆண்டொன்றுக்கு 130 கலம் நெல்லைக் கோயிலுக்கு வழங்க வேண்டும்.

அந்த 130 கலம் நெல், சுந்தரசோழரின் செப்புத் திருமேனிக்குத் திருவமுது செய்வதற்குப் பயன்படுத்தப்படும். இதை வைத்துக் கொண்டு ஊர்ச்சபையினர் ஓராண்டுக்குக் கொடுக்க வேண்டிய நெல்லின் அளவு, அந்த நெல்லை எதற்குப் பயன்படுத்த வேண்டும் என்பன போன்ற விபரங்கள் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டன.

தானமாக வந்த நிதியினை செலவு செய்யாமல் அந்த நிதியிலிருந்து வரும் வட்டியினைச் செலவினங்களுக்குப் பயன்படுத்துவதன் மூலமாகப் பண்டாரத்தை ஒரு அசல் வங்கி போல நடத்தினார் ராஜராஜன்.

கோயில் சொத்துக்களைப் பராமரிக்கப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டதில் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

ராஜராஜனின் ஆணையிலிருந்து பண்டாரிகளாகப் பொறுப்பேற்பவர்கள் பெரும் சொத்துக்களைப் பராமரிப்பவர்கள் என்பதாலும் கருவூலத்தில் பொன், நவமணிகள்,நெல் போன்ற விலை மதிப்புள்ள பொருட்கள் இருப்பதாலும் அவர்களுக்கு நிலமும் நல்ல உறவினர்களும் இருக்க வேண்டும் என்பது கட்டாய விதியாக இருந்தது.

பெரிய கோயிலுக்கு சோழ மண்டலம், பாண்டி நாடான ராஜராஜ மண்டலம்,தொண்டை நாடான ஜயங்கொண்ட சோழ மண்டலம் ஆகிய மண்டலங்களில் உள்ள பிரமதேயங்களிலிருந்து சொந்த நிலமும், உறவினர்களும் உடையவர்களை ஸ்ரீபண்டாரஞ் செய்யும் பண்டாரிகளாக நியமனம் செய்யவும் கணக்கர்கள், கீழ்க் கணக்கர்கள், திருப்பரிசாரகர்கள் ஆகியோரையும் நியமிக்கவும் ஆணை யிட்டதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. (தொடரும்)



பாராளுமன்ற கன்னி உரையில் கலக்கி விட்டாரே நம்ம விக்னேஸ் வரன்?




நீதி, நேர்மை, நியாயம் இவற்றுக்கு இங்கு மதிப்புண்டா வியாசரே?



கொரோனாவின் அச்சம் மக்கள் மத்தி யில் இல்லாது போய்விட்டதே?

**தாரு — யாழ்ப்பாணம்**

**யாரும் உங்கள் மேல் அதிகாரத்தைப் பிரயோகித்தால் பொறுப்பீர்களோ வியாசரே?**

அதிகாரம் என்பது ஏற்க முடியாத ஒன்று. அதிகாரத்தை பயன்படுத்துவதிலும் அன்பால் சில விடயங்களைக் கட்டுப்படுத்துவது சுல பமானது. இதை பலரும் விளங்கிக்கொள் வதில்லை.

எதற்கும் அதிகாரத்தைப் பிரயோகிக்க நினைப்பார்களாக இருந்தால் இழப்புக் களையே சந்திக்க வேண்டிய வரும்.

இருப்பினும் சிலரை அதிகாரத்தால்தான் அடக்க வேண்டும் என்றால் அதைப் பிர யோகித்துத்தான் ஆக வேண்டும்.

ஆனாலும் அதிகாரம் என்பதிலும் அன்பு வழி மிகச் சிறந்தது.

**சுதன் — குப்பிழான்**

**விக்கி ஐயா மூலம் பாராளுமன்றம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்குமா?**

தமிழரின் பிரச்சினை தீர்க்கப்பட வேண் டியது. தமிழர்களின் உரிமை சார்ந்த அவ ரின் பேச்சுக்கள் சர்வதேசத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கும் என்பது உண்மை

இதே வருடக்கணக்காக இருந்த கூட்ட மைப்பு இதைச் செய்ததா? இல்லையே. அரசுக்கு அவகாசம் வழங்கியதைவிட வேறு எதைச் செய்திருக்கிறார்கள்.

விக்னேஸ்வரன் எனும் நாமம் இனி பலரின் தூக்கத்தைக் கெடுக்கும் என்பது மட்டும் உண்மை.

**சிவம் — வதிரி**

**மழையின் அருமை வெயிலில் தெரி யும் என்பார்களே?**

இதைவிட இதற்கு இன்னொரு சிறந்த பழமொழியை உதாரணமாகக் கூறலாம். இளைய மருமகன் வந்த பின்புதான் மூத்த மருமகனின் அருமை புரியும் என்பது. இங்கு பலருக்கும் இது நன்றாகப் புரிந்திருக்கும்.

ஒரு அதிகாரி எமக்கு பொறுப்பாக இருந்து செயற்படுவார்.

அவரின் நடவடிக்கைகள் கடுமையாக இருக்கிறது என்று ஓடித்திரிந்து அவரை மாற்றிவிட அவருக்குப் பதிலாக வந்தவ ரின் நடவடிக்கைகளோ முந்தையவரிலும் மிகக் கடுமையாக இருந்தது.

இதுதான் இன்றைய நிலை. இதுதான் யதார்த்தம்.

**தவம் — மானிப்பாய்**

**கொரோனாவின் அச்சம் மக்கள் மத்தி யில் இல்லாது போய்விட்டதே?**

இப்போது மக்களைப் பார்த்தால் பொலிஸுக் காக மாஸ்க் போடுகிறார்கள் போல இருக் கிறது.

கொரோனாவின் கொடும் பிடியை இன்னும் எம்மவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை.

பல ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள அமெரிக்காவில் ஆயிரம் ஆயிரமாய் மக் கள் இறக்க, அமெரிக்காவில்தானே என்று இருந்துவிட்டோம்.

ஆனால் இப்போது இலங்கையில் இருந்து வெறும் 32 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்தியாவில் பல்லாயிரக்கணக்கானவர் களை பீடித்துள்ளது கொரோனா.

இந்நிலை எமக்கு வருவதற்கு வெகு நேரம் ஆகிவிடாது. இதைப் பரியாமல் நடந்து கொண்டால் நாமென்ன செய்யமுடியும் பராபரமே.

**வியாசர் பதில்கள்**

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**

**021 567 1532**

**என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**ரவி — பருத்தித்துறை**

**ஆண்டான் அடிமை எனும் பதம் மலை யேறிப் போகவில்லைப் போலும்.**

என்ன செய்ய, எமக்கு இவ்வளவு இழப்புக் களைக் கொடுத்தும் நாம் இன்றும் அதைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என் றால் எமக்கு மீட்சி இல்லை என்பதே பொருள்.

மனிதம் என்பது என்ன என்று வெறும் வெற்றுக் காகிதங்களில் படித்துவிட முடி யாது.

அன்னை திரேசாவை எமக்கு எல்லோருக் கும் தெரியும். அவரின் கருணை, சேவை எது என்பதும் தெரியும்.

வெறும் தெரியும் என்பதுதான் எமக்குத் தெரியும். அதைவிட எதையும் எம்மால் செய்துவிட முடியாது.

**நேதாஜி — வதிரி**

**பாராளுமன்ற கன்னி உரையில் கலக்கி விட்டாரே நம்ம விக்னேஸ் வரன்?**

இது இப்போது பலரின் வயிற்றில் புளி யைக் கரைத்திருக்கும்.

தமது சொந்த சுயநலனுக்காக முதல்வரை எவ்வளவு வசைபாடினார்கள்.
சி... இப்படியுமா என்று முகம் சுழிக்கும் வகையில் நடந்து கொண்டார்கள்.

இவரால் எதைச் செய்ய முடியும் என மக்களின் நம்பிக்கையைத் தகர்க்க நினைத் தார்கள்.

இவர்களின் போலி வேடம், சூழ்ச்சிகளை எல்லாம் தாண்டி இந்த முகமூடி மனிதர் களின் மூஞ்சை மீது கரி அள்ளிப் பூசி இருக்கிறார்கள் தமிழ் மக்கள். இன்னும் இருக்கிறது பொறுத்திருந்து பார்ப்போம்.

**நிலா — சுழிபுரம்**

**தமிழ்க் கட்சிகள் இனியாவது ஒன்றி ணையுமா?**

ஒன்றுபடுமா? ஒன்றுபட ஆசை உண்டென் றால் ஒரு பேப்பரில் தமிழ்க் கட்சிகள் ஒன்று பட்டன என எழுதி வைத்துப் பார்த்து உமது ஆசையைத் தீர்த்துக் கொள்ளும்.

தேர்தல் முடிந்ததும் பதவி, புகழ் ஆசை அவர்களின் கண்களை மறைத்து நிற்பதைப் பார்த்திருக்கிறீர்கள்தானே.

என்ன செய்வது தேர்தல் மட்டும் நாம் அப்படி இப்படி என்போம். மற்றப்படி சீற்றிற்கு அடிபடு வோம் என்பதுதான் நிலை.

**தானா — யாழ்ப்பாணம்**

**நீதி, நேர்மை, நியாயம் இவற்றுக்கு இங்கு மதிப்புண்டா வியாசரே?**


அப்படி இருக்கிறது போல எமக்குத் தெரிய வில்லை. எதிலும் போலி, எங்கும் சுயநலம் என்பதுதான் இன்றைய உலகம்.

தான் தான் என்று எல்லாம் தனக்குத் தன் க்கு என சுயநலத்தின் வெளிப்பாடாய் மனி தன் வழிப்படுத்தப்பட்டு விட்டான்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசு வதுதான் இப்போதைய மனிதம்.

இது இங்கு அங்கு என்று இல்லை. எம். அனைவரின் அருகிலும் இருக்கிறது. இது தான் நிலை. இதுதான் சாபம்.

# உலக தீர்ப்பு



ஒற்றைத் தமிழன்
உயிர் பறிக்கும் வரை
பற்றைப் புதருக்கும்
பதுங்கு குழிக்கும்
பல்குழல் என்ன
பல கனரகமென்ன
பவள தேர்த்திருவிழா
வெள்ளோட்டம் போலே
வெறியாட்டம் ஆடினார்
வட்டிக்கணக்கில் வைக்கோல்
வாங்கிய சுமைக்கு
கழுதையாய் நாட்டைக்
காட்டிக் கொடுத்து
கும்மாளம் ஆடினார்
கோடி கொட்டி கோபுரம்
கட்டினாய் வாடிவீடும்
வகை பல கடன்களும்
வாயில் விரலை வட்டிக்கு வைக்கவே
வந்ததெல்லாம் சீனப்
பெருஞ்சுவர் சுமையாய் போச்சு
உலகை உறிஞ்சும் உயிரைக்
குடிக்க கொண்ட கொள்கை
கொரோனாவாச்சு
எந்தத் தெருவில் யார் யார்
எவரோ எதிலோ எங்கோ ஏக்கம் பாதி
ஆக்கபூர்வமாய் அழிக்கும் உயிரை
போட்டி போட்டு வல்லமை சிரிக்குது
புல்லரிதாற் போல் பொழுது போகுது
காற்றில், நெருப்பில் நிலத்தில் நீயே
கரிய விஷத்தை கக்கினாய் மனிதா
உரிய பலன்கள் உனக்கே தீர்வே
உலக நியதியும் அதுவே சொல்லும்

நெடுந்தீவு சி.சிறி

# என்னவென்று சொல்ல...

கண்டாய் புன்னகை செய்தாய்
உண்டாய் ஒன்றாய் என்னுடனே
நாவில் சுவை தந்தாய்
கொண்டாய் காதலென்று
சொன்னாய்
வேண்டாமே இதுவென்றேன்
வண்டாய் சுற்றி வந்தாய்
வரும் பாதையில் தூங்கி நிற்பாய்
வண்ணமாய் கதை சொல்வாய்
வாயினிக்கப் பேசுவாய்
போதையில் தவிப்பேன் நான்
நாட்கள் செல்ல...



குண்டர்கள் புடை சூழ்ந்தார்
போர் செய்தார் என்னோடு
மண்டையில் இரத்த ஆறு
அப்போதுதான் உணர்ந்தேன்
எண்ணிப் பார்த்தேன் எந்நிலையை

மானந்தன்
அல்வாய்

# மௌனத்தின் தேடல் -491



## அமைதி திகழ

வாய்மூடி மாஸ் காட்டி நீரும் செல்ல காலமும்
வந்ததோ கரடியாரே கொரோனாவின் கோரத்தால்
கொலையுண்ட மனிதர்கள் எத்தனை பேரோ
கணக்கிட முடியாது காவு கொண்ட உயிர்களை

காட்டிலே வாழும் உம்மையும் வாட்டுதோ
கொரோனா கரடியாரே
கொந்தளிக்கும் நெஞ்சிலே அமைதி திகழ
ஏங்கிடும் நன்னாள் என்று வருமோ
இறைவனருளால் இன்பம் பெருகிட

சி.திவ்வியா
யா/ ப.மெ.ம.வி.

## ஓடிவிடு கொரோனாவே

அறிவு மிகுந்த அறிவாளிகளின்
ஆய்வுத் தேடலில் உருவாகி
இரக்கமின்றி ஈவுமின்றி
உயிர்களைக் கொன்று
ஊழித்தாண்டவமாடிய
எழிய கொரோனாவே
ஏன் தான் தயங்குகின்றாய்
ஐந்தறிவு படைத்த விலங்கினமும்
எமக்கான பாதுகாப்பை
தேடிக்கொண்டோம்
உன் ஜம்பம் பலிக்காது
ஒருவருக்கும் தெரியாமல்
ஓடிவிடு கொரோனாவே

சி.கஜா,
முரசுமோட்டை

## பதில் கூறு?

முற்பகல் செய்தது
பிற்பகல் விளையுமென்பர்
மனிதன் முற்பகல்
செய்த பயன்
பிற்பகல் அனுபவிக்க
எமக்கேன் இந்தவினை
பதில் கூறு இறைவா?

கஜன், யாழ்ப்பாணம்

# மௌனத்தின் தேடல் -492



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## கொரோனாவின் பசி

கொரோனா நம்மை விட்டு அகன்று போகானோ?
ஆண்டவன் அனுப்பி வைத்த சதியோ–அதிகாரத்துயர்
தலைவிரித்து ஆடுகிறது அகில மேடையிலே
இறுதிக்காலம் இதுவோ– இறை
வேடமளிக்கும் சகுனமும் இதுவோ?
இன்னும் எத்தனைபேர்
எத்தனிக்கப்படுகிறார்கள் கொரோனாவின் பசிக்கு

வி.டிலக்ஸன்
யா/ தும்பளை சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்

# கண்ணீர்க் கோடுகள்

லொக்...லொக் என இருமியபடி முத்தாயி... முத்தாயி அந்த மருந்தை எடுத்துத்தா. சரியான இருமலா இருக்கு எனத் திண்ணையில் படுத்தவாறு கேட்டார் தாமோதரம். முத்தாயியும் கணவனுக்கு மருந்தை எடுத்துக் கொடுத்துவிட்டு தொழுவத்தில் கட்டியிருந்த மாட்டிற்கு வைக்கோற் கற்றையைப் போட்டுவிட்டு அன்றைய காலை வேலைகள் எல்லாவற்றையும் முடித்த களைப்பில் முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழ் அமர்ந்த போது பக்கத்து வீட்டுச் சின்னத்துரையின் மகன் ஓடிவருவதைக் கண்டதும் " என்னடாப்பு என்ன மாமாட்ட இருந்து போன் ஏதேன் வந்ததே" என ஆவலோடு கேட்டாள் முத்தாயி.

இல்லைப்பாட்டி நேற்றுப் பால் வாங்கின காசு கொண்டு வந்தனான் எனக் கூறிப்பணத்தைக் கொடுத்துவிட்டு ஓடிச்சென்றான் செல்வம். அந்தச் சிறுவனைப் பார்த்ததும் தனது மகன் ஓடிவிளையாடிய நாட்கள் ஞாபகத்திற்கு வர முத்தாயியின் கண்கள் கலங்கியது. முத்தாயிக்கு ஒரே ஒரு ஆண் பிள்ளைதான். வேறு பிள்ளைகள் இல்லை. தாமோதரம் கூலி வேலை செய்தே தனது குடும்பத்தை நடாத்தி மகனையும் படிக்க வைத்தார்.

ஜீவனும் தந்தையின் சொல்லைத் தட்டாது இருந்தான். இப்படி இருக்கும் போது தன்னோடு படித்த காயத்திரி மீது காதல் கொண்ட ஜீவன் அவளை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தான். "ஜீவன் யாரிது. நீ என்னைப் போல் கஷ்டப்படக்கூடாது, நீ நல்லா இருக்கவேண்டுமெண்டு நான் நினைச்சால் நீ என்ன வேலை செய்திருக்கிறாய். உனக்கிப்பக் கலியாணமே வேண்டிக்கிடக்கு" எனத் தாமோதரம் பற்களை நறும்ப குனிந்த தலை நிமிராது இருவரும் நின்றனர்.

முத்தாயி தன் மகனுக்குப் பக்கவாத்தியம் பாடுவதைப் போல் " சரி... சரி...விடுங்கோ ஏதோ சின்னஞ்சிறுசுகள் செய்து போட்டினம். உலகத்தில நடக்காததையே இவையள் செய்து போட்டினம்" எனப் பயம் கலந்த புன்சிரிப்போடு கூறினாள் முத்தாயி.

தன் மனைவியின் அன்புக்கட்டளையை ஏற்றுக்கொண்ட தாமோதரம் "ம்" சரி... சரி... ரெண்டு பேரும் உள்ளே போங்கள் எனக்கூறியபடி வெளியே சென்றார். காலங்களும் ஓடிச்செல்ல முத்தாயி பேரப்பிள் ளையினையும் கண்டுகொண்டாள். ஜீவனுக்கு குழந்தை கிடைத்ததன் பலனாக வேலையும் கிடைத்தது. தாமோதரமும் கூலி வேலை செய்ய முடியாது போக பேரப்பிள்ளை யோடும் வீட்டில் நின்ற மாட்டினைப் பராமரிப்பதோடும் தன் காலத்தைக் கழித்தார்.

"முத்தாயி ஜீவனும் பிள்ளையும் முந்தின மாதிரி இப்ப இல்லை. இவையின்ர செயற்பாடுகள் எனக்குப் பிடிக்கயில்ல" எனக் கூறினார் தாமோதரம். "பேசாமல் இருங்கோ. அதுகள் உங்களை என்ன கேக்குதுகள்" எனத் தன் கணவனைச் சமாளித்தாள் முத்தாயி. அன்று ஞாயிற்றுக்கிழமை ஜீவன் வீட்டில் இருந்தபோது " தம்பி ஜீவன் எனக்கு ஒரே இருமலா இருக்கு, நாளைக்கு வேலைக்குப் போயிற்று வரும்போது " ரொனிக் மருந்து வாங்கிக்கொண்டுவா" எனக் கூறினார் தாமோதரம். "அப்பா எடுத்த சம்பளத்தில வீட்டிற்குத் தேவையான சாமானெல்லாம் வாங்கியாச்சு. இப்ப என்னட்ட காசு இல்லை. ஆஸ்பத்திரியில போய் மருந்தை எடுங்கோவன் எனக் கூறினான் ஜீவன்.

"அப்பா எனக்கு வேலைக்கு இடமாற்றம் வந்திருக்கு. நான் கொழும்பிற்குப் போகப் போகிறேன்" எனக் கூறினான் ஜீவன். " தம்பி நீ ஒன்றுக்கும் யோசிக்காமல் கவனமாகப் போயிற்றுவா. மருமகளையும் பிள்ளைளையும் நாங்கள் பார்க்கிறம்" என முத்தாயி கூற. "இல்லையம்மா காயத்திரியும் பிள்ளையும் என்னோடுதான் வருகினம்" என ஜீவன் கூற காயத்திரியும் தன் கணவனோடு சேர்ந்து அத்தை நாங்களும் இவரோடு தான் போறம்" எனக் கூறினாள் காயத்திரி.

முத்தாயிக்கு தூக்கிவாரிப்போட்டது. " தம்பி நீங்கள் இரண்டு பேரும் போனால் எங்களை யார் பார்க்கிறது. என்னாலும் ஏலாது. அம்மாவும் பாவம்" எனத் தாமோதரம் கூற. " அப்பா உங்கட நிலைமை எனக்கு விளங்குது. என்ன செய்யிறது நான் போய்த் தான் ஆகவேணும். நான் உங்களுக்கு காசு அனுப்புறன். மாசத்திற்கு ஒருதடவை நாங்கள் வருவம் தானே" எனக் கூறினான் ஜீவன்.

தாமோதரமும் முத்தாயியும் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவர்களை வழியனுப்பி வைத்தார்கள். அன்று சென்ற காயத்திரியும் ஜீவனும் இன்றுவரை இவர்களோடு தொடர்பு கொள்ளவில்லை. பேரப்பிள்ளையின் முகம் காணாத வேதனையால் இரு உள்ளங்களும் துடித்தன.

"முத்தாயி... முத்தாயி... எனத் தாமோதரம் கூப்பிட மாமரத்திற்குக் கீழிருந்த முத்தாயி கண்களில் வடிந்த நீரைத் துடைத்தபடி தன் கணவனை நோக்கிச் சென்றாள்.

**மா.செழியன், வேலணை.**




**கோகிலன் மதனா**
**வவுனியா.**

அன்று இரவு நடுநிசி தாண்டியும் நித்திரை வராது பொற்காலப் புதன் தன்னை பொழுதை போக்கினாள் காயத்திரி.

கட்டிலில் புரண்டு படுத்து பார்த்தாலும் விழிகளில் நித்திரையை விரைவாக வரவழைக்க முடியவில்லை. அவளுக்கு அந்த நாள், நேரம் அதுவே கண்முன் நின்றது. என்ன வேணும். உனக்கு இப்ப "போ போடி நீ எனக்குத் தேவையில்லை... இதுவே அவளுக்கு எந்நேரமும் காதில் கேட்கும் மந்திரம்...

தெட்சண கைலாயம் எனப் போற்றப்படும் மாதுமையாள் சமேத திருக்கோணேஸ்வர பெருமாள் குடிகொண்ட திருகோணமலை மாவட்டத்தில் முத்தூர் எனப்படும் முதுமையான ஊராம் மூதூரில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவள் இந்த காயத்திரி.

அழகு, அன்பு, அறிவும் நிறைந்த அழகான மாது அவள். அடுத்தவர்களுக்கு உதவி செய்வதில் அவளுக்கு நிகர் யாரும் இல்லை... கட்டுப்பாடான குடும்பத்தில் கண்ணியமாக வாழ்ந்த அந்த காயத்திரிக்கும் காதல் வராதா என்ன.

அன்பான பல உறவுகள் இருந்தாலும் அன்பு எல்லை கடந்து இருந்தும் அவளுக்கு போதவில்லை... ஆனால் அவள் கிஷோரின் அன்புக்காகவே ஏங்கி நின்றாள்.

உயர்தரப் பரீட்சையும் எழுதி விட்டாள் அவள். காயத்திரி பாடசாலை வாழ்க்கையிலும் படு கெட்டிக்காரி. மாணவத் தலைவியும்கூட. ஆசிரியர்களின் பாராட்டும் காணாது. அவளுக்கு கிஷோரின் பாராட்டும் தேவைப்பட்டது. அவளுக்கு கிஷோரும் இவள் பின்னால் சென்று களைத்துவிட்டான்.

அன்று நடு வீதியில் மறித்தான். என்ன காயத்திரி உனக்கு என் அன்பு புரியவில்லையா? அல்லது புரியாதது போல நடிக்கின்றாயா? உன் முடிவை கூறிவிட்டுச் செல்... படித்த நீங்கள் தானே பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்... பாதையை விடுங்கள்... பதில் சொல்கிறேன் என்றவள் விரைவாக வீடு வந்து சேர்ந்தாள்...

வந்து சேர்ந்தவள் தன் அம்மப்பாவிடம் நடந்ததை கூறினாள்... அவர் கிஷோரை கூப்பிட்டு கதைப்பம் என்றார். ஒருநாள் அவனிடம் எல்லா விடயங்களையும் அவரும் கூறி அனுப்பினார். அதன்பின் அவனும் தானும் தன் வேலையுமென திரிந்தான். மனம் நிறைந்த காயத்திரியுடன் பொழுது போனது அவனுக்கு... காயத்திரியும் தன் பெரியம்மாவின் ஏற்பாட்டில் படிப்பதற்கு லண்டன் செல்ல ஏற்பாடுகள் நடந்தது.

கிஷோர் நான் லண்டன் போகின்றேன். போய் நிச்சயம் உன்னை எடுப்பேன். நீ ஒரே மாதிரி இருக்க வேணும். என்னை ஏமாற்றி விடாதே. அவனிடம் சத்தியமும் வாங்கினாள். இதற்கிடையில் காயத்திரியின் தந்தை புற்று நோய் காரணமாக படுத்த படுக்கையானார். அவள் கட்டாயம் லண்டன் போக வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டாள்.

அவள் கிஷோர் மீது வைத்த அன்பு அதிகரித்ததே ஒழிய குறையவில்லை.. ஆனால் கிஷோரில் மாற்றங்கள் தென்படத்தொடங்கியது. ஆனால் அவள் கண்மூடித்தனமாக கிஷோரை காதலித்தாள். வெள்ளிக்கிழமை வழமைபோல காளி கோயிலுக்குச் சென்றாள். அங்கே அழகான பெண் யாரின் வருகைக்காக காத்து நின்றாள். அவள் அதை பெரிதாக எடுக்காமல் கடவுளை வணங்கினாள்.

கடவுளே! என் அப்பாவிற்கு சுகம் வரவேண்டும். என் லண்டன் பயணம் நிறைவேற வேண்டும். என் கிஷோரும் எனக்கு கிடைக்க வேண்டும் என கண்மூடி வணங்கினாள். கும்பிட்டு விட்டு கண்ணைத் திறந்தாள். அவள் கண்டது கனவா? நனவா? அவள் ஆசையாக வாங்கிக்கொடுத்த சேட்டும் பிறந்தநாளுக்கு வாங்கிக்கொடுத்த சப்பாத்தும் அவளின் நினைவுப் பரிசுடன் நின்றான் கிஷோர்.

என்னடா இன்று நல்ல அழகாய் இருக்கிறாய் எனக் கூறி விட்டு திரும்பிப் பார்த்தாள். அவள் கோவிலில் கண்ட அழகான பெண் அவனின் தோளைப் பிடித்தபடி மோட்டார் சைக்கிளில் ஏறினாள். அதிர்ச்சியில் உறைந்தவள் என்னடா இது என்றாள்.

இந்த ஒரு வருடம் உன்னோடு பட்ட துன்பம் காணும். இது என் மாமா மகள். இவளைத் தான் திருமணம் செய்ய போகின்றேன். என்னடா இப்படி சொல்கிறாய். வாடா நாம் லண்டன் போவோம். என்னை ஏமாற்றி விடாதே! எனக் கெஞ்சினாள். இவளை விட்டிட்டு. வா... பிளீஸ்.

என்ன வேணும் உனக்கு இப்போ... போ... போடி நீ எனக்குத் தேவையில்லை... அவன் கூறிய அந்தக்கணமே தன் புதிய காதலியுடன் பறந்து சென்றான்.

சும்மாவா சொன்னார்கள் "சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தாலும் வீடு வந்து சேராது" என்று அழுதபடி வீடு வந்து சேர்ந்தாள். தன் அம்மப்பாவின் மடியில் கிடந்து அழு தாள். நடந்ததை அவரிடம் அப்படியே சொன் னாள். சரி நீ கவலைப்படாதே! உன் அருமை அவனுக்குத் தெரியவில்லை. நீ அழாதே என்றார்.

வீட்டில் உள்ள அப்பா, அம்மா, தம்பிகள், மாமன்மார்கள் அனைவரும் ஆறுதல் சொன்னார்கள். சீ இப்படி என்னில் உயிரை வைத்திருக்கும் உறவை விட்டு அவனின் அன்புக்கு ஏங்கினேனே! என்ன பிறவி நான் என்று மனம் வருந்தினாள். எல்லாம் நல்லதுக்குத்தான்.

விட்டுச் சென்ற உனக்கு உறவு வந்தபோது விட்டுக்கொடுத்த எனக்கு உறவு இல்லையா? வாழ்க நீ வளமுடன். நினைவுகள் மறந்து திடுக்கிட்டவள் சூரியன் எப். எம். தன் பாடலை நலம் வாழ எந்நாளும் என் வாழ்த்துக்கள் என்று பாடியது. பாடலை கேட்டபடி நிம்மதியாக நித்திரைக்குச் சென்றாள்.

# கொரோனாவுக்கான ரஷ்யாவின் தடுக்குமா? தடைகளை உடைக்

**ஒரு தடுப்பூசி, பெரிதாக பக்கவிளைவுகள் ஏற்படுத்தாத அளவுக்குப் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும். நோய் தொற்றுவதைத் தடுப்பதாகவும் இருக்க வேண்டும். இதற்காக நூறாண்டுகளுக்கும் மேலாக பல்வேறு தரக் கட்டுப்பாடுகளை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.**

அணுகுண்டை ரகசியமாகத் தயாரித்து வெடித்துப் பார்த்துவிட்டு வெற்றியை அறிவிக்கலாம். தடுப்பூசியை அப்படிச் செய்ய முடியுமா? ஆனால், ரஷ்யா செய்துள்ளது. 'உலகின் முதல் கொரோனாத் தடுப்பூசி ரஷ்யாவில் தயாராகிவிட்டது' என்று ஓகஸ்ட் 11 ஆம் திகதி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்தார்.

"இன்று காலைதான் இதற்கு அங்கீகாரம் கொடுத்தேன். என் மகள் இதை ஏற்கனவே பரிசோதனை அடிப்படையில் போட்டுக் கொண்டார். லேசாக ஜுரம் வந்ததைத் தவிர வேறு பிரச்சினை இல்லை. தடுப்பூசி நன்றாக வேலை செய்கிறது'' என்று அவர் சொன்ன நிமிடத்திலிருந்து உலகெங்கும் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஒளி பரவியது. ஆனால், மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இதைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள். இதன் வரலாறு அப்படி!

## உளவு அட்டாக்!

'அமெரிக்க மருத்துவ நிறுவனங்களின் தடுப்பூசி ரகசியங்களை ரஷ்யா திருடப் பார்க்கிறது' என்று கடந்த ஏப்ரல் மாதமே 'பகீர்' புகார் ஒன்று கிளம்பியது. மருந்து நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சிக்கூடங்களின் கணனிகளை ரஷ்யாவில் இருந்தபடி இயங்கும் இணையத் திருடர்கள் சைபர் அட்டாக் மூலம் வசப்படுத்த முயன்றனர். இதேபோன்ற தாக்குதல் கனடா மற்றும் பிரிட்டன் நிறுவனங்கள்மீதும் நிகழ்ந்தது.

"ரஷ்ய உளவுத்துறையுடன் நெருங்கிய தொடர்புள்ள **Cozy Bear** என்ற குழுவினர்தான் இப்படி இணையத் தாக்குதல் நடத்தி, தடுப்பூசி ரகசியங்களைத் திருடப் பார்க்கிறார்கள்.

உலகமே கொரோனாவை முடிவுக்குக் கொண்டுவர உழைக்கும் போது, சிலர் இப்படிச் சுயநலமாகவும் பொறுப்பற்றும் நடந்துகொள்கிறார்கள்'' என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டொமினிக் ராப் குற்றம் சாட்டினார். ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், "இந்த இணையத் தாக்குதல்களுக்கும் ரஷ்யாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை" என்று மறுத்தார்.

அதேநேரத்தில், "ரஷ்யாவின் தடுப்பூசி முயற்சிக்குக் களங்கம் விளைவிக்க, மேற்கத்திய மருந்து நிறுவனங்கள் சதி செய்கின்றன. அதனால்தான் இப்படித் திருட்டுப்பழி சுமத்துகின்றன" என்று கிரில் டிமிட் ரியேவ் என்பவர் சொன்னார்.

ஹரஷ்யன் டைரக்ட் இன்வெஸ்ட்மென்ட் ஃபண்ட்' என்ற நிறுவனத்தின் தலைவர் அவர். இந்த நிறுவனம்தான் ரஷ்யத் தடுப்பூசி ஆராய்ச்சிக்கு நிதி தந்தது.

## அரைகுறை சோதனை... புதுப் பெயர்!


செமி ஃபைனலையே தாண்டாதவர்கள் சம்பியன் ஆக முடியுமா? இந்தத் தடுப்பூசியின் வெற்றி அப்படிப் பட்டதுதான். பல நாடுகளில் கொரோனா தடுப்பூசியை மனிதர்களுக்குச் செலுத்திப் பார்க்கும் பரிசோதனைகள் மார்ச் மாதமே தொடங்கிவிட்டன. அந்தத் தடுப்பூசிகள்கூட இந்த ஆண்டு இறுதிக்குள் தயாராகாது என்பதுதான் யதார்த்தம்.

ஆனால், ரஷ்யாவின் தடுப்பூசியை மனிதர்களுக்குச் செலுத்திப் பார்க்கும் முதல்கட்ட சோதனை ஜுன் 18ஆம் திகதி தான் தொடங்கியது. 38 பேருக்குச் செலுத்தினார்கள். இரண்டாம்கட்ட சோதனை பற்றிய எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. 'தடுப்பூசி ரெடி' என புடின் அறிவிப்பு செய்ததற்கு மறுநாள் தான் ரஷ்யா, பிரேசில், மெக்சிக்கோ மற்றும் அரபு நாடுகளில் 2 ஆயிரம் பேரிடம் மூன்றாம்கட்டப் பரிசோதனை செய்யப்போவதாக அறிவித்துள்ளார்கள். அந்தச்சோதனையைச்செய்வதற்கு முன்னரே 'வெற்றி' அறிவிப்பு ஏன்?

"கொரோனாவுக்குத் தடுப்பூசியை வேகமாக உருவாக்குவது முக்கியம் தான். ஆனால், அதற்காக உயிர்ப் பாதுகாப்பில் சமரசம் செய்துகொள்ளக் கூடாது. இந்த அறிவிப்பே அச்சம் தருகிறது" என்கிறார், அமெரிக்காவின் ஜான் ஹாப்கின்ஸ் தடுப்பூசி பாதுகாப்பு நிலைய இயக்குநர் டேனியல் சாலமன்.

## தடுப்பூசி எப்படித் தயாராகிறது?

ஒரு தடுப்பூசி, பெரிதாக பக்கவிளைவுகள் ஏற்படுத்தாத அளவுக்குப் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும், நோய் தொற்றுவதைத் தடுப்பதாகவும் இருக்க வேண்டும். இதற்காக நூறாண்டுக ளுக்கும் மேலாக பல்வேறு தரக் கட்டுப் பாடுகளை உருவாக்கி வைத்திருக்கி றார்கள்.



தடுப்பூசியை முதலில் விலங்குக்ளுக்குக் கொடுத்து பரிசோதிப்பார்கள். 'மனிதர்களுக்கு இதனால் ஆபத்து நேராது' என்பது உறுதியான பிறகே அடுத்த கட்டத்துக்கு நகர்வார்கள். முதலில் சில டஜன் தன்னார்வலர்களுக்குக் கொடுப்பார்கள். 'ஆபத்தான பக்கவிளைவுகளை ஏற்படுத்தவில்லை. குறிப்பிட்ட நோயைத் தடுக்கும் எதிர்ப்பணுவை உடலில் உருவாக்கியுள்ளது' என்பது உறுதியானதும், இரண்டாம் கட்டப் பரிசோதனை நடைபெறும். இதில் சில நூறு பேருக்கு தடுப்பூசியைக் கொடுத்து சோதிப்பார்கள்.

அதன்பிறகு மூன்றாம்கட்ட பரிசோதனை. பல நாடுகளில், பல்வேறு இனங்களைச் சேர்ந்த, வெவ்வேறு வயதிலிருக்கும் சில ஆயிரம் பேரிடம் இது நடத்தப்படும். வெவ்வேறு இனக் குழுக்களில், வெவ்வேறு வயதுகளில் இது பாதுகாப்பு தருகிறதா? என்பதை உறுதி செய்யும் சோதனை இது. இதில் ஒரு பிரிவினருக்குத் தடுப்பூசி போடு வார்கள். இன்னொரு பிரிவினருக்கு டம்மி மருந்தைச் செலுத்துவார்கள். இரண்டு பிரிவினரின் உடல் நிலை யையும் ஆராய்வார்கள். நோய் பரவும் சூழலில் இவர்கள் நடமாடும்போது, நோய் தொற்றுகிறதா? என்பது கண்காணிக்கப்படும். இதைச் செய்து முடிக்க, சில மாதங்கள் ஆகும். ஒவ்வொரு கட்டப் பரிசோதனையும் நிபுணர்க ளால் ஆய்வு செய்யப்படும்.

"மருந்துகளுக்கும் தடுப்பூசிக்கும் வித்தியாசம் உண்டு. மருந்துகளை நோயாளிக்குக் கொடுப்போம். 'அது நோய்க்கு நிவாரணம் தந்தாலும், சில பக்கவிளைவுகளை ஏற்படுத்தும். என் றாலும், இதைவிட்டால் வேறு வழியில்லை' என்று கொடுப்போம். ஆனால், தடுப்பூசி அப்படி இல்லை. அதை ஆரோக்கியமானவர்களுக்கே கொடுக்கிறோம். அதனால், கூடுதல் கவனம் தேவை.

குறிப்பாக, கொரோ னாத் தடுப்பூசிக்கு இன்னும் அக்கறை வேண் டும். குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பல கோடிப் பேருக்கு இதைக் கொடுக்கப் போகிறோம். அரிதினும் அரிதான ஒரு பக்க விளைவு ஏற்பட்டால்கூட, அது பல இலட்சம்பேரை பாதித்து விடும்.

இப்போது ஆஸ்ட்ரா ஜெனிகா, மாடெர்னா, நோவாவேக்ஸ், ஃபைஸர் ஆகிய நிறுவனங்கள் உருவாக்கிய தடுப்பூசிகள் நம்பிக்கை தந்துள்ளன. மோசமான பக்கவிளைவுகள் எதுவும் இல்லை. குணமடைந்த கொரோனா

# ன் தடுப்பூசி க்குமா?

நோயாளிகள் உடலில் இருப்பதைவிட, இந்தத் தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டவர்கள் உடலில் அதிக அளவிலான எதிர்ப்பணுக்கள் உருவாகியுள்ளன என்றாலும், மூன்றாம் கட்டப் பரிசோதனையில் ஏதாவது பாதிப்பு ஏற்படுவது தெரியவந்தால், இவற்றைப் பயன் படுத்த முடியாது. இதுதான் தடுப்பூசிகளின் நியதி. ரஷ்யா இதை மீறுகிறது. இதனால் ஏதாவது பாதிப்பு நிகழ்ந்தால், எல்லா கொரோனாத் தடுப்பூசிகள்மீதும் மக்களுக்கு நம்பிக்கை போய்விடும்" என்று எச்சரிக்கிறார், அமெரிக்க தடுப்பூசி நிபுணர் ஸ்டீவன் பிளாக்.

## 100 கோடிக்கு ஓடர் வந்துவிட்டது

'ஸ்புட்னிக்' என்ற உலகின் முதல் செயற்கைக்கோளை சோவியத் யூனியன் 1957ஆம் ஆண்டு விண்ணில் ஏவியது. அமெரிக்கா உள்ளிட்ட எல்லா நாடுகளையும் திகைப்பில் ஆழ்த்திய திடீர் சாதனை அது. அதன் நினைவாக இந்தத் தடுப்பூசிக்கு 'ஸ்புட்னிக்' என பெயரிடப்பட்டுள்ளது. ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகமும், கமாலேயா அறிவு ஆய்வு நிலையமும் இணைந்து இதை உருவாக்கியுள்ளன.

"இதை முதற்கட்டமாக மருத்துவப் பணியாளர்களுக்கும், கொரோனாவால் உயிரிழக்கும் ஆபத்துள்ள முதியோருக்கும் தரப்போகிறோம். உலக நாடுகள் பலவும் இதைக் கேட்கின்றன. இப்போதே 100 கோடி தடுப்பூசிகளுக்கு ஓடர் வந்துவிட்டது" என்கிறது ரஷ்ய சுகாதார அமைச்சகம்.

செப்டெம்பர் மாதம் இதன் தயாரிப்பைத் தொடங்கப் போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. என்றாலும், இந்தத் தடுப்பூ சிக்கான அங்கீகார ஆணையில், '2021 ஜன வரிக்கு முன்பாக இதைப் பரவலாகப் பயன்ப டுத்தக் கூடாது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அதற்கு முன்பாக இது ரஷ்ய எல்லையைத் தாண்டி வருவது சந்தேகமே!

## இரண்டு ஆண்டுகளுக்குப் பாதுகாப்பு!

இந்தத் தடுப்பூசி இரண்டு ஆண்டுகளுக்குக் கொரோனாவிலிருந்து பாதுகாப்பு தருவதாக ரஷ்யா சொல்கிறது. இரண்டு வெவ்வேறு மருந்துகளைக்கொண்டது இந்தத் தடுப்பூசி. முதல் மருந்தை ஊசியால் செலுத்திக் கொண்டு, 21 நாட்கள் இடைவெளியில் அடுத்த மருந்தைப் போட்டுக்கொள்ள வேண்டும்.

ஜலதோஷத்தை ஏற்படுத்தும் அடினோ வைரஸின் இரண்டு ரகங்களைவைத்து இந்தத் தடுப்பூசி மருந்துகள் உருவாக்கப் பட்டுள்ளன. இவை உடலில் சென்று எதிர்ப் பணுகளைத் தோற்றுவிக்கின்றன. கொரோனா வைரஸ் உள்ளே வந்தால், அதன் புரதத்தை அழிக்கும் வல்லமை இந்த எதிர்ப்பணுக் களுக்கு இருக்கிறதாம். ஏற்கனவே எபோலா, மெர்ஸ் ஆகிய வைரஸ் நோய்களுக்கு இதே முறையில் தடுப்பூசி உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்றன. அவை இன்னமும் வெற்றி பெறவில்லை என்றாலும், அந்த போர்முலாவைப் பின்பற்றியே இந்தத் தடுப்பூசி உருவாக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவின் நோக்கம் என்ன?

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் நடக்கும் வல்லரசு யுத்தத்தில் ரஷ்யா காணாமல் போய் விட்டது. இந்த நிலையில், 'நாங்கள் இன்ன மும் இந்த உலகில் முக்கியமான சக்தி' என் பதை நிரூபிக்க நினைக்கிறார் புடின். அதற்காகவே இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார்.

'இந்த ஆண்டில் தடுப்பூசி விற்பனைக்கு வர வாய்ப்பில்லை' என்று எல்லா நிறுவனங் களுமே சொல்கின்றன. ஆனால், 'வரும் நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு முன்பாகத் தடுப்பூசி ரெடியாகிவிடும்' என்று ட்ரம்ப் திரும்பத் திரும்பச் சொல்கிறார். அவசரச் சூழல் கருதி, ஒரு மருந்தை முழுமையான பரிசோதனைக்கு முன்பாகவே அங்கீகரிக்கும் விதி அமெரிக்காவிலும் உண்டு. அந்த விதியைப் பயன்படுத்தி ஏதாவது ஒரு தடுப்பூசியை ட்ரம்ப் விரைவில் அங்கீகரிக்கக்கூடும். சீனாவும் இப்படியே செய்தால் உலக நாடுகள் தடுமா றும். அரசியல் ஆதாயம் தேடுவது என்று முடிவாகி விட்டால் 'அறிவியல்' குப்பைக் கூடைக் குப் போய்விடும்!

## அட்வான்ஸ் புக்கிங் ஆரம்பம்!

இன்றைய நிலவரப்படி உலகெங்கும் 28 கொரோனாத் தடுப்பூசிகள் மனிதர்களிடம் பரிசோதனை செய்யப்படுகின்றன. இந்தியா வின் பாரத் பயோடெக் நிறுவனம், காடிலா ஹெல்த்கேர் ஆகியவற்றின் தடுப்பூசிகளும் இவற்றில் அடக்கம்.

இவற்றில் ஆறு தடுப்பூசிகள் இறுதிக்கட்ட பரிசோதனையில் உள்ளன. பிரிட்டனின் ஆஸ்ட்ரா ஜெனிகா, அமெரிக்காவின் மாடெ ர்னா, சீனாவின் சினோவேக் ஆகியவை ரேஸில் முந்துகின்றன.

ஜெர்மனியின் பயோ என் டெக் மற்றும் அமெரிக்காவின் ஃபைஸர் இணைந்து ஒரு தடுப்பூசியை உருவாக்கி, சோதிக்கின்றன.


சீனாவின் சினோஃபார்ம் நிறுவனத்தின் இரண்டு தடுப்பூசிகள் இறுதிக்கட்டப் பரி சோத னையில் உள்ளன. அதற்குள்ளாகவே இவற்றை வாங்குவதற்குப் பல நாடுகள் போட்டி போடுகின்றன. இதில் அமெரிக்கா முன்ன ணியில் உள்ளது.

ஆஸ்ட்ராஜெனிகா தடுப்பூசியின் விலை இந்திய மதிப்பில் சுமார் 1,000 ரூபாய் இருக் குமாம். அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரேசில் நாடுகள் 43 கோடி டோஸ் தடுப்பூசிக்கு ஓடர் கொடுத்து விட்டன.? ஃபைஸர் நிறுவனத்தின் தடுப்பூசிக்கு அமெரிக்கா, கனடா, பிரிட்டன், நெதர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் ஒப்பந்தம் போட்டுவிட்டன.

இதன் விலை ஒவ்வொரு நாட்டுக்கும் வித்தியாசப்படும். மாடெர்னா தடுப்பூசி விலை இந்திய மதிப் பில் 1,800 ரூபாய் முதல் 2,300 ரூபாய்க்குள் இருக்கக்கூடும். இதற்கு அமெரி க்கா, கனடா பெரிய அளவில் புக்கிங் செய்து ள்ளன. சீனா வின் மூன்று தடுப்பூசி களுக்கும் பெரி தாக வரவேற்பு இல்லை.என்பது வேறு விடயம்.

ஜூனியர் விகடன்

# மனைவியின் மெழுகு பொம்மை மனமுருகும் கணவர்



கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 57 வயது தொழிலதிபர் ஸ்ரீனிவாசமூர்த்தி. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் கோலார் தங்கவயல் பகுதியை அடுத்த நெடுஞ்சாலையில் நடந்த விபத்தில் மனைவி மாதவியைப் பறிகொடுத்தார். சொந்தமாக வீடு கட்ட வேண்டும் என்கிற தன் மனைவியின் கனவை அண்மையில் முன்னெடுத்த மூர்த்தி, பெங்களூர் நகரின் பிரபல கட்டட வல்லுநர்கள் பலரையும் சந்தித்தார். இறுதியாக மகேஷ் ரங்கண்ணதவரு என்கிற வடிவமைப்பாளரின் யோசனை பிடித்துப்போக, அதன்படியே பங்களா கட்டி வரவேற்பறையில் மனைவி மாதவியின் முழு உருவ மெழுகுச் சிலையை நிறுவியிருக்கிறார். பெங்களூரில் பொம்மைகள் செய்வதில் தேர்ந்தவரான கொம்பெ மானெ என்பவரின் கைவண்ணத்தில்... பட்டுச்சேலை, நகைகள், முகச்சுருக்கங்கள் என்று மெழுகில் அச்சு அசலாக உயிர் பெற்றிருக்கிறார் மாதவி. புதுமனை புகும் விழாவுக்கு வந்த உறவினர்களும் நண்பர்களும் ஆச்சரி யத்தில் அசந்துபோக, "என் ம்னைவி மாதவி, என்னைவிட்டு எங்கும் போகவில்லை" எனச் சிலிர்த்திருக்கிறார் மூர்த்தி.

# உண்மைக் காதல் இறப்பதில்லை!



முக்கிய போக்குவரத்து சிக்னல்களிலும், பாதசாரி சமிக்ஞை பலகைகளிலும் குறியீட்டுக்காக ஆண் உருவங்கள் பயன்படுத்தப் படுவதுதான் வழக்கம். மும்பை மாநகராட்சி தற்போது பெண் உருவங்களைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறது. பாலின சமத் துவத்துக்கான நல்ல முன்னெடுப்பு இது என்று மும்பை மாநகராட்சியைப் பாராட்டியிருக்கிறது ஐ.நா.பெண்கள் பிரிவான ஐ.நா.உமன்.

# சிங்கப்பெண்ணே!



அமெரிக்காவின் பிரபல டென்னிஸ் வீராங்கனையும் கிராண்ட் ஸ்லாம் சம்பியனுமான செரீனா வில்லியம்ஸ், 4.25 மில்லியன் முகக்கவசங்களை வசதியற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு வழங்கியிருக்கிறார். 1,15,000 பள்ளிகள் மூலம் இந்தக் கவசங்கள் அமெரிக்கப் பள்ளிக் குழந்தைகளுக்குக் கிடைத்திருக்கின்றன.

54 மில்லியன் பள்ளி மாணவர்களுக்கு முகக்கவசத்தின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லும் அறிவிப்புகளையும் செரீனா சொந்த செலவில் அச்சிட்டு அளித்திருக்கிறார்.

# பாராட்டுக்கள்

ஹரியானா மாநில தலைமைச் செயலகத்தில் கர்ப்பிணி ஊழியர்கள் தினமும் அலுவலகத்துக்கு வருவதிலிருந்து விலக்களித்திருக்கிறது அம்மாநில அரசு. தங்கள் பணிகளை வீடுகளிலிருந்தே வொர்க் ஃப்ரம் ஹோம் முறையில் செய்வதற்கு அனுமதியளித்துள்ள அரசு, கொவிட்-19 சூழலில் தம்முடைய ஊழியர்களைப் பாதுகாக்கும் முயற்சியாக முதலில் இந்த முடிவை எடுத்திருப்பதாக அறிவித்துள்ளது.

# அன்பே தவம்



மானுடம் வென்றதம்மா...' அழுத்தமாகச் சொல்கிறார் கம்பர். ராமன் ஆட்சி துறந்து, கானகம் நோக்கி நடக்கிறான். நடக்க, நடக்க அவன் உறவுகள் விரிகின்றன். உடன்பிறப்புகள் பெருகுகிறார்கள். குகனை உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான். அவன் காட்டு மனிதன். அடுத்து சுக்ரீவன் உடன்பிறப்பாகிறான். அவன் விலங்கினம்.

அடுத்து, விபீடணன் அவனோ அரக்கர் இனத்தைச் சேர்ந்தவன். ஆக, உயிர்கள் பட்டியலில் இருக்கிற அனைத்தையும் உடன் பிறப்பாக ஏற்றுக்கொள்கிறான் ராமன்.

கம்பரின் ராமகாதையில் மானுடம் வெற்றி பெறும் காட்சிகளை நிறைய பார்க்க முடிகிறது. ராமன் வனவாசம் செல்ல, பரதனுக்குத் தங்கத் தாம்பாளத்தில் மணிமகுடம். அதை மறுதலித்துவிட்டு, “அண்ணன் ராமன்தான் அரியணை ஏற வேண்டும்' என்று விரதம் பூணுகிறான் பரதன்.

அதனால்தான், கம்பர்,'தராசுத் தட்டில் ஒருபுறம் ராமனை வைத்து, மறுபுறம் பரதனை வைத்து எடைபோட்டால் பரதனுக்கு சரிநிகர் சமானமாக ஆயிரம் ராமர்கள் தேவைப்படுவர்' என்கிறார்.

‘ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ?' என்று புகழ்கிறார். எதற்காக... ஆட்சி துறந்ததற்காக மட்டுமல்ல மனிதத்தை ஏந்திப் பிடித்ததற்காக.

நம் கண்கள் எதற்காக? கருணை பொங்க வேண்டும், அதற்காக. நம் வார்த்தைகள் எதற்காக... மனக் காயம் பட்டவர்களுக்கு ஆறுதல் தருவதற்காக. வாழ்க்கை புதிர் நிறைந்தது.

### சிக்கல்கள் நிறைந்தது அவற்றிலிருந்து எப்படி விடுபடுவது?

ஒரு தந்தை, தன் மகளுக்கு விளையாட்டுப் பொருள் வாங்க, கடைக்குப் போனார். கடையில் ஒரு புதிர் பொம்மை இருந்தது. அதை எடுத்தார் அதிலிருந்த புதிரை விடுவிக்க முயன்றார். அவரால் முடியவில்லை. அவர் அறிவுஜீவி, முனைவர் பட்டம் பெற்றவர். அவராலேயே புதிருக்குப் பதில் காண இயலவில்லை. அதனால், “இந்த பொம்மை வேண்டாம்" என்றார்.

“நீங்கள் மட்டுமல்ல, யாராலும் இந்தப் புதிரை விடுவிக்க முடியாது" என்றார் கடைக்காரர்.

“பிறகெதற்கு இதைக் குழந்தைகளிடம் கொடுத்து சோர்வடையச் செய்கிறீர்கள்?" என்றார் தந்தை.

“இது குழந்தையைச் சோர்வடையச் செய்வதற்கு அல்ல. வாழ்க்கை என்பது புதிர் நிறைந்தது. அதில் பல மர்ம முடிச்சுகளுக்கு விடை தெரிவதில்லை. ஆனால், அதை விடுவிக்க நம்மால் முடியும். அன்பு ஒன்றால் முடியும். இதைக் குழந்தைகளுக்குக் கற்றுத் தரத்தான் இதை நாங்கள் விற்றுக்கொண்டிருக்கிறோம்." என்றார் கடைக்காரர். அந்த அப்பா மகிழ்ச்சியோடு அதை வாங்கிச் சென்றார்.

மனிதர்கள் எப்படி மதிப்பீடு செய்யப்படுகிறார்கள்... செல்வம், புகழ், பதவி... இவற்றின் உயரத்தில்தான் மனித மதிப்பீடுகள் அமைகின்றன.

தகுதியும் திறமையும் உண்மையான விருப்பு வெறுப்பற்ற கண்ணோட்டத்தோடு பார்க்கப்படுவதில்லை. ஒரு தாய் ஒட்டகமும் அதன் குட்டி ஒட்டகமும் பேசிக்கொண்டன.

“அம்மா, ஆண்டவன் படைப்பில் ஓரவஞ்சனை... நம்மை மட்டும் அவலட்சணமாகப் படைத்து விட்டான்." தாய் ஒட்டகம் தேற்றியது. “பார்த்தாயா... நமக்கு எவ்வளவு உயரமான கால்கள்!" “குச்சி குச்சியான, உயரமான கால்கள்... ஹூம்..."

“கண்ணே! பாலைவனத்தில் புதைமணலில் நாம் வேகமாக நடப்பதற்கும் ஓடுவதற்கும் இந்தக் குச்சி போன்ற கால்கள்தான் பயன்படுகின்றன."

“நமக்கு மட்டும் தட்டை மாதிரி அருவருப்பான பற்கள் இல்லையா அம்மா?

“பாலைவனத்தில் நிறைய முட்செடிகள். அவற்றை மென்று தின்பதற்காகத்தான் இந்தப் பற்கள்."

“அம்மா... சாக்கு போன்ற கடினமான தோல் நமக்கு. நன்றாகவா இருக்கிறது?"

“பாலைவனத்தில் கடுங்குளிர், கடுமையான வெப்பம் இருக்கும். இரண்டையும் எதிர்கொண்டு வாழ்வதற்காகத்தான் சாக்கு போன்ற முரட்டுத் தோலை இறைவன் கொடையாக அளித்திருக்கிறான்."

“சரியம்மா! தட்டை போன்ற பற்கள், சாக்கு போன்ற தோல், குச்சி போன்ற கால்கள்... ஆண்டவன் பாலைவனத்தில் வாழ்வதற்காகத் தந்தார். ஆனால், நாம் இப்போது எங்கே இருக்கிறோம்... ஒரு நகரத்தில், மிருகக்காட்சிச்சாலையில்." தாய் ஒட்டகம் பதில் பேசவில்லை.

கடுங்குளிரை, அடிக்கும் சூறைக் காற்றை, கொட்டும் மழையை எதிர்கொண்டு வாழ்வதற்கு இறைவன் நமக்குத் தக்க தகவமைப்புகளைத் தந்திருக்கிறார். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு நாம் எதிர்த் துருவத்திலேயே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். கோடை வெயில் பொறுக்காமல், குளிர்சாதனத்துக்குள் உறங்கிக் கொண்டிருக்கிறோம்.

இது என்ன முரண்பாடு? எதிர்த் துருவத்திலேயே வாழ்க்கை போவதால்தான், வாழ்க்கை புதிர் நிறைந்ததாக இருக்கிறது.

ஒரு பெரியவர், எந்த வீட்டில் மரணம் நடந்தாலும், அவர் வந்ததைக் காட்டிக்கொள்வதற்காக வீட்டு வாசலில் அவர் பயன்படுத்திய கைத்தடியை வைத்துவிட்டு வந்துவிடுவார்.

அவரும் ஒருநாள் உலகை விட்டு விடைபெற்றார். அன்றைக்கு அவர் வீட்டைச் சுற்றி நூற்றுக்கணக்கான கைத்தடிகள் கிடந்தன. நாம் யாரைச் சம்பாதிக்கிறோம்... மனிதர்களையா, மற்றவற்றையா... நாம்தான் தீர்மானிக்க வேண்டும். “கடவுள் உயர்ந்தவரா... மனிதர்கள் உயர்ந்தவர்களா?" பெரியநம்பிகள் கேட்டார்.

“கடவுள்தான் உயர்ந்தவர்." “மனிதர்கள் உயர்ந்தவர்களா... விலங்கினங்கள் உயர்ந்தவையா?" “மனிதர்கள்தாம் உயர்ந்தவர்கள்." மனிதநேயம் உயர்ந்ததாக இருக்க வேண்டும். அதைத்தான் எல்லாச் சமயங்களும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன.

மகா பிரளயம் தோன்ற இருப்பதற்கான ஓர் அறிவிப்பு. “இன்னும் சில நிமிடங்களில் இந்த உலகம் அழிந்துவிடும். யாரையும் காப்பாற்ற முடியாது. என்னால் முடிந்தது... ஆறு பேரை மட்டும் காப்பாற்ற முடியும். அவர்களை அடுத்த கிரகத்துக்கு அழைத்துச் செல்வேன். அவர்கள், தங்களுக்குப் பிடித்த ஒரு பொருளை மட்டும் கையில் எடுத்து வரலாம்" என்றது தேவதை.

அடுத்த நிமிடம், தேவதையின் சிறகைப் பற்றிக் கொள்ள மிகப்பெரிய போட்டி. முதலில் தேவதையின் சிறகை ஓர் இளைஞன் பற்றிக் கொண்டான். அவன் கையில், இறந்து போன அவன் காதலியின் உடைந்த வளையல் துண்டு. அடுத்து ஒரு கவிஞன் சிறகைப் பற்றிக்கொண்டான். அவன் கையில், அச்சுக்கு வராத அவன் கவிதைத் தொகுப்பு. ஒரு நோயாளி, தட்டுத் தடுமாறி சிறகைப் பற்றிக் கொண்டான்அவன் கையில் மருந்து புட்டி. இப்போது கூட்டத்திலிருந்து கோஷம்... “அடுத்த கிரகத்தை வெல்ல இருக்கிற தலைவர் வாழ்க!' ஓர் அரசியல் தலைவர் தொண்டர்கள் புடைசூழ வந்தார். தேவதையின் சிறகைப் பற்றிக்கொண்டார். “இன்னும் ஒருவர் மட்டும் வரலாம்" என்றது தேவதை. கூட்டத்திலிருந்து ஒரு சிறுமி. தன் செல்ல நாய்க்குட்டியை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு, தளிர்நடை போட்டு வந்தாள்.

“என் நிபந்தனை உனக்குத் தெரியுமா... வருபவர், பூமியிலிருந்து ஒரு பொருளைத்தான் கொண்டு வரலாம். நீ கொண்டுவருவது பொருளல்ல. நாய்க்குட்டி உயிர். அதைக் கீழே இறக்கிவிடு. நீ மட்டும் வரலாம்" என்றது தேவதை. “நான் இறங்கிக்கொள்கிறேன். என் செல்ல நாய்க்குட்டி உங்களோடு வரட்டும்'' என்றாள் அந்தச் சிறுமி.

தேவதையின் சிறகுகள் சிலிர்த்தன. அந்த வேகத்தில் சிறகுகளைப் பற்றிக்கொண்டிருந்த அனைவரும் கீழே விழுந்தார்கள். அந்தச் சிறுமியையும் நாய்க்குட்டியையும் தூக்கிக் கொண்டு பறந்தது தேவதை. இதயத்தில் அன்பு கசியும், பாசம் பொங்கும் இடம்தான் சொர்க்கம்.

**அன்பே தவம். அன்பினால் ஆள்வோம் வாழ்வோம்...**

> **“ மனிதர்கள் எப்படி மதிப்பீடு செய்யப்படுகிறார்கள்... செல்வம், புகழ், பதவி... இவற்றின் உயரத்தில் தான் மனித மதிப்பீடுகள் அமைகின்றன. தகுதியும் திறமையும் உண்மையான விருப்பு வெறுப்பற்ற கண்ணோட்டத்தோடு பார்க்கப் படுவதில்லை. ”**

# கொடுத்த வாக்கை யார் உதாசீனம் செய்தாலும் அவர்களை தமிழ் மக்கள் தூக்கி எறிவர்

**தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணையைச் சரியாகச் செய்யாததன் விளைவே இந்தத் தோல்வி என்றும் தமிழ்த் தேசியத்தில் இருந்து யார் தடம் மாறினாலும் அவர்களுக்கு இதுவே கதி என்பதனையும் தமிழ் மக்கள் இத்தேர்தல் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.**

பாரிய எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் கொரோனாவின் கொடும்பிடிக்குள்ளும் ஒருவாறு நடந்து முடிந்துவிட்டது பாராளுமன்றத் தேர்தல்.

தெற்கு மக்களும் மாற்றம் ஒன்று தேவை என்பதை உணர்ந்துள்ளனர் என்பது இத்தேர்தல் மூலம் நிரூபணமாகியுள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமோக வெற்றிபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அமோக வெற்றிபெற்றுள்ளது.

இவ்வெற்றி என்பது இலங்கை வரலாற்றில் பதியப்பட வேண்டிய மிக முக்கியமான வெற்றியாகும்.

எதிர்க்கட்சிகள் இவ்வெற்றி பற்றிக் கூறும்போது இனவாதத்தைத் தூண்டியதன் மூலம் பெற்றுக்கொண்ட வெற்றி எனக் கூறிப்பிடுகிறார்கள்.

வெறுமனே இனவாதத்திற்குக் கிடைத்த வெற்றி என்று இதைக் கூறிவிட முடியாது. கடந்த காலங்களில் மக்கள் நல்லாட்சி அரசில் கொண்ட வெறுப்பை இத்தேர்தலின் மூலம் பொதுஜன பெரமுனவிற்கு வெற்றியை வழங்கியுள்ளார்கள் என்று கூறுவதில் தவறேதும் இல்லை.

நல்லாட்சி அரசின் காலத்தில் நடைபெற்ற உயிர்த்தஞாயிறு தற்கொலைத் தாக்குதல், பிணைமுறி மோசடி என்பன மக்கள் மத்தியில் நல்லாட்சி அரசில் கொண்ட நம்பிக்கையைத் தகர்த்தெறிந்துவிட்டது என்பதே உண்மை.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ நிறுத்தப்பட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியாக சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியிருந்தது.

தேர்தல் கணிப்பீடுகளை ஒப்பிடும் போது கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் சஜித் பிரேமதாஸவிற்கும் சமபலம் இருப்பதாக ஊடகங்கள் கருத்து வெளியிட்டிருந்தன.

இருப்பினும் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்று நாட்டின் அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி ஏற்றார்.

இந்த நிலையிலும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரித்ததும் வடக்குக் கிழக்கில் பரவலாக சஜித்திற்கு தமிழ் மக்கள் அமோக வாக்களித்ததும் அனைவரும் அறிந்ததே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித்தை ஆதரிக்க, அதைத் தெற்கில் பொதுஜன பெரமுன எதிர்மறையான பிரசாரங்களைச் செய்ததான தகவல்களும் ஊடகங்களில் வெளிவந்தன.

தற்போது நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாறு காணாத தோல்வியையும் பின்னடைவையும் கண்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணையைச் சரியாக செய்யாததன் விளைவே இந்தத் தோல்வி என்றும் தமிழ்த் தேசியத்தில் இருந்து யார் தடம் மாறினாலும் அவர்களுக்கு இதுவே கதி என்பதனையும் தமிழ் மக்கள் இத்தேர்தல் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியத்தில் இருந்து தடம் மாறினாலும் அதே தேசிய சுயநிர்ணயம் பேசிய மாற்றுக் கட்சிகளுக்கு மேலாக, தெற்கை மையமாகக் கொண்ட அரசசார் கட்சிகளுக்கும் அதிக வாக்கு வீழ்ந்துள்ளமை ஏன் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மக்கள் கொண்ட அதிருப்தியும் தேசியம், சுயநிர்ணயம் என்பதிலும் அபிவிருத்தி என்பதை மக்கள் விரும்புகிறார்கள் என்பதும் மறுக்க முடியாத விடயமாகிறது.

இது இவ்வாறிருக்க, ஒன்பதாவது பாராளுமன்ற கன்னி அமர்வு கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிட்ட நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வெற்றிபெற்று பாராளுமன்றம் தெரிவாகி தனது கன்னி உரையினை ஆற்றியிருந்தார்.

இலங்கை மக்களின் எதிர்பார்ப்பு மட்டுமல்லாமல் உலகத்தின் எதிர்பார்ப்பாகவும் இருந்தது நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் என்ன பேசப்போகிறார் என்பது.

வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையினைக் கேட்க உரித்துண்டு என மிகவும் நிதானமாகவும் காத்திரமாகவும் தனது உரையினை ஆற்றியிருந்தார் அவர்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தேர்தலில் வென்றுவிடக் கூடாது என அவர் தொடர்பில் அவதூறுகளை பக்கம் பக்கமாக விமர்சித்தவர்களுக்கு இவ் உரை செருப்படியாக இருந்திருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நேரத்தில் நீதியரசர் இலங்கையின் ஆதிக் குடிகளான தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் எனப் பேசியது தென்னிலங்கை அரசியல்வாதிகளை சூடேற்றியுள்ளது.

அவரின் உரையில் சில பகுதிகளை கன்சல்ரில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்துள்ளன.

ஒன்பதாவது பாராளுமன்ற அமர்வை அண்மித்த இன்றைய நாள் ( .08.2020) சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்குக் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அகிம்சை ரீதியாக தமது உறவுகளிற்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக்கோரி ஆயிரம் நாட்களைக் கடந்தும் தொடர்ந்து வீதியில் இருந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளியிட்ட அனைத்து தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் விடயம் என்பன இடம் பெற்றிருந்தாலும் தேர்தல் முடிந்ததும் அதுபற்றி எதுவும் பேசாமல் விட்டுவிடுகிறார்கள்.

காணாமல்போன தன் பிள்ளைகளைத் தேடும் பெற்றோர், காணாமல்போன தன் கணவரைத் தேடும் மனைவி, காணாமல்போன தன் தந்தையைத் தேடும் பிள்ளைகள் இவற்றை நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் வெடிக்கிறது.

நாம் வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் வீட்டில் அம்மா இல்லை என்றால் மனம் ஏதோ ஒரு மாதிரி இருக்கிறது என உணர்ந்து கொள்வோமல்லவா.

இத்தனை வருடங்களும் தன் மகன் இருக்கிறானா? இல்லையா? வருவானா? வரமாட்டானா? என்று ஏங்கி ஏங்கி மனதுக்குள்ளேயே வெம்பி வெடிக்கும் அந்த மனங்களை ஒருகணம் நினைத்துப் பார்த்தால் அவர்களை வைத்து அரசியல் நடத்தும் ஜென்மங்களில் வெறுப்பு மேலோங்கி நிற்கிறது.

என்ன செய்ய, எமக்கான உரிமைகளையும் எமக்கான நீதி நியாயங்களையும் இந்த அரசுகள் தருவதற்குத் தயார் இல்லை என்பதே உண்மை.

சுயநிர்ணய உரிமையுடன் வாழ விரும்பி, கேட்டு கிடைக்காமல் ஆயுதமேந்தி வெற்றிபல பெற்று



துரோகத்தால் தோற்கடிக்கப்பட்டு இன்று நாதியற்றுக் கிடக்கிறது தமிழினம்.

ஆக, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற அரசு தமிழருக்கான தீர்வைத்தர இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்த வேண்டும்.

இருப்பினும் 19 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 20 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட அரசின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆனாலும் தமிழ் மக்களுக்கான உரிமைகளை ஓரளவு தரக்கூடிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை குழி தோண்டிப் புதையுங்கள் என அரசைக்கோரும் கோசங்கள் தெற்கில் வலுப்பெற ஆரம்பித்து விட்டன என்பது இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் தகர்த்தெறிந்துவிட்டது.

இறைவா தமிழரைக் காப்பாற்று. அதுவே இன்றைய ஒவ்வொரு தமிழரின் நினைவும்.

அபிமன்யு

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அடிமைப்பெண்
இயற்றியவர் : புலமைப்பித்தன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்கள் : எஸ்.பி.பாலசுப்பிரமணியம், பி.சுசீலா



ஆயிரம் நிலவே வா
ஓராயிரம் நிலவே வா
இதழோரம் சுவை தேட
புது பாடல் விழி பாட பாட

நள்ளிரவு துணையிருக்க
நாமிருவர் தனியிருக்க
நாணமென்ன பாவமென்ன
நடை தளர்ந்து போனதென்ன
இல்லை உறக்கம் ஒரே மனம்
என் ஆசை பாராயோ
என் உயிரிலே உன்னை
எழுத உன் மேனி தாராயோ
ஆயிரம் நிலவே வா

மன்னவனின் தோளிரண்டை
மங்கை எந்தன் கை தழுவ
கார்குழலும் பாய் விரிக்கும்
கண்சிவந்த வாய் வெளுக்கும்
இந்த மயக்கம் எழில் முகம்
முத்தாக வேர்க்காதோ
அந்த நினைவில் வந்து
விழுந்தேன் கொத்தான பூவாக
ஆயிரம் நிலவே வா

அல்லி மலர் மேனியிலே
ஆடையென நானிருக்க
கள்ள விழிப் பார்வையிலே
காணும் இன்பம் கோடி பெரும்
சின்ன இடையில் மலர்
இதழ் பட்டாலும் நோகாதோ
இன்பம் இதுவோ இன்னும்
ஏதுவோ தந்தாலும் ஆகாதோ
ஆயிரம் நிலவே வா

பொய்கை எனும் நீர் மகளின்
பூவாடை போர்த்திருந்தாள்
தென்றல் என்னும் காதலனின்
கைவிலக்க வேர்த்து நின்றாள்
என்ன துடிப்போ அவள் நிலை
நீ உணர மாட்டாயோ
அந்த நிலையில் தந்த சுகத்தை
நான் உணர காட்டாயோ

ஆயிரம் நிலவே வா
ஓராயிரம் நிலவே வா
இதழோரம் சுவை தேட
புது பாடல் விழி பாட பாட

# ஆயிரம் நிலவோடு அறிமுகமான வானம்பாடி



இதுதான் 'பாடும் நிலா' பாலுவின் குரலைக் கேட்டு வளர்ந்த என் போன்றோரின் வாழ்க்கையில் SPB என்ற மூன்றெழுத்தின் அர்த்தம்!

எஸ்.பி.பி.ஓர் அதிசயப்பிறவி. கர்நாடக சங்கீதம் கற்காமலே இசையில் சாதனைகள் நிகழ்த்திய, பொறியியல் படித்த இளைஞன். எல்லாமே கேள்வி ஞானம்தான். மெல்லிசைக் கச்சேரிகளில் பாடுவதையும் பாட்டுப் போட்டிகளில் பரிசுகளை வாங்கிக் குவிப்பதையும் ஆர்வத்தோடு செய்தவர். அவைதான் அவருக்கு எம்.ஜி.ஆர், சிவாஜி, என்.டி.ஆர், நாகேஸ்வர ராவுக்குப் பாடும் வாய்ப்பை வாங்கிக் கொடுத்தது. எந்தப் பாடகனுக்கும் ஆரம்பத்தில் உச்ச நட்சத்திரங்களுக்குப் பாட வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆனால் எஸ்.பி.பி. தமிழில் எம்.ஜி.ஆர்.பாடலைப் பாடி அறிமுகமானவர்.

இப்படி மிக இளம் வயதில் மெச்சூர்டான, 'ஆயிரம் நிலவே வா' பாடலைப் பாடியவர், 'Reverse Aging' என்பார்களே... ஆரம்பத்தில் வயதான பாடகர்களுக்கே உரிய இறுக்கமான குரலிலும், வயதாக வயதாக மலைத் தேனடையைப் பிளந்ததைப்போல எல்லோருக்குமானதாய் நாலாபுறமும் வடிந்து தேனினும் இனித்தது அவர் காந்தக் குரல்!

எஸ்.பி.பியின் பாடல்களைக் கேட்காமல் தமிழர்கள் யாரும் காதலித்திருப்பார்களா? என்று தெரியாது. "ரொமான்டிக் பாடல்களைப் பாடுறதுக்கு எனக்குள்ள தாக்கத்தை உண்டாக்கியது லெஜண்ட் முக்மது ரஃபி சேர். அவர் பாடல்களை கண்ணை மூடிக்கொண்டு கேட்டுப் பாருங்க... அவர் ஏதோ தன் காதலியிடம் சிரிச்சுப் பேசிட்டு இருக்கிற மாதிரியே தோன்றும். அவரோட பாதிப்புத்தான் என்கிட்ட இருக்கு. அதனாலகூட ரொமான்டிக் பாடல்களில் என் குரலில் காதல் நிரம்பி வழியலாம்!" என்று ரஃபியைச் சிலாகிக்கும் பாலுவும் காதல் திருமணம் செய்தவர்தான்.

சங்கீதத்தோடு இங்கிதமும் தெரிந்தவர் பாலு. எந்த இடத்திலும் அவர் உணர்ச்சிவயப்பட்டுப் பேசி யாரையும் காயப்படுத்தியதே இல்லை. உயிரைக் கொடுத்துப் பாடிய பாடல், படத்திலிருந்து தூக்கப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன. இப்போதுபோல அப்போது ரெக்கார்டுகளிலும் இடம்பிடிக்காமல் குப்பைகளுக்குப் போகும் அந்தப் பாடல்களுக்காக அவர் சண்டை போட்டதுமில்லை.

தன்னை நம்பி வந்த பல இளம் இசையமைப்பாளர்களுக்கு உயிரைக் கொடுத்துப் பாடி அவர்களுக்குப் பெரிய பிரேக் கொடுத்திருக்கிறார். இவரைப் பிடித்துப்போய் கடைசிவரை இவரைத்தவிர வேறு யாரையும் பாட வைக்காமல் தங்கள் கரியரில் Single singer Wonder ஆகப் பயன்படுத்தி இசையமைத்தவர்கள் பலர். அதேபோல ஏ.ஆர்.ரஹ்மானுக்கும் வேறுவிதமான அனுபவம் நடந்திருக்கிறது.

"ரோஜா படத்தின்போது சாமியார் மடத்திலுள்ள என் பஞ்சதன் ரெக்கார்டிங் ஸ்டூடியோவில் அப்போ அவ்வளவு வசதியெல்லாம் இருக்காது. பாடகர்கள் பாடும் அந்தக் கண்ணாடி அறைக்குள் எஸ்.பி.பியால் வசதியாக நின்றுகூட பாட முடியாது. அவ்வளவு சின்னதாய் இருக்கும். ஆனாலும் புன்சிரிப்போடு மூன்று நாட்கள் வந்து பொறுமையாகப் பாடிக் கொடுத்திட்டுப் போனார்!" என்கிறார் ரஹ்மான்.

'சங்கராபரணம்' படத்துக்காக முதல் தேசிய விருதை வாங்கிவிட்டு, 'எனக்குக் கர்நாடக சங்கீதம் தெரியாது' என்று பாலு சொன்னபோது கர்நாடக சங்கீத மேதைகளே ஆடிப் போனார்கள். அதேபோல இரண்டாவது தேசிய விருதினை 'ஏக் துஜே கேலியே' படத்துக்காக வாங்கியபோது, 'எனக்கு இந்தி தெரியாது' என்றபோது, 'கியா..!' என ஷாக் ஆனது பாலிவுட்.

சாரீரம் சரீரம் எல்லாமே இசையால் நிரம்பியவர் எஸ்.பி.பி. ஒரேநாளில் அசுரத்தனமாக 19 பாடல்களைப் பாடி கம்போஸ் செய்ததெல்லாம் இன்றளவும் யாரும் மிஞ்ச முடியாத ரெக்கார்டு. அதேபோல ஒரு பாடகர் இசையமைப்பாளராக உருமாறி பல படங்களுக்கு இசையமைத்ததும் டப்பிங் ஆர்ட்டிஸ்ட்டாக இந்தியா முழு வதும் 13 நடிகர்களுக்குக் குரல் கொடுத்திருப்பதும் ஆல்டைம் ரெக்கார்டுதான்! ஐஸ்கிரீமில் செர்ரி போல நடிப்புத் திறமை என்பது அவர் நமக்குக் கொடுத்த சுவீட் சர்ப்ரைஸ். மிக நல்ல நடிகர்!

"ஒரு பாடகன் என்பவன் கிட்டத்தட்ட நடிகன்தான். என்ன, மைக் முன்னாடி நடிக்கிற நடிகன். நான் பள்ளி நாட்களிலேயே மேடை நடிகன்தான். இயல்பாக நடிப்பேன். அதனால் நடிப்பது சிரமமாக இல்லை. ஆனால், நல்ல அப்பா, நல்ல அண்ணன், நல்ல டாக்டர் என ஒரே மாதிரி ரோல்கள் செய்வது பிடிக்கல. தெலுங்கில் தணிகல பரணியின் இயக்கத்தில் 'மிதுனம்' படத்தில கிடைச்சது மாதிரியான சவாலான கரக்டர்களை எதிர்பார்த்திட்டு இருக்கேன்!" என்று தன் நடிப்பார்வத்தையும் 74 வயதில் வெளிக்காட்டியவர் பாலு!

எஸ்.பி.பியை எல்லோருக்கும் பிடிக்கக் காரணமே அவரின் எளிமைதான். எவ்வளவு உயரங்கள் போனாலும் சிகரங்கள் தொட்டாலும் அவர் எல்லோரிடத்திலும் அன்பாகவே இருக்கிறார். எளிதில் அணுகும் மனிதராக இருக்கிறார்.

"நான் உங்களை ரொம்ப நேரம் காக்க வைத்துவிட்டேனோ... ஐ ஆம் ரியலி ரியலி சொரி..!"-கைகளைக் கூப்பியபடி தன்னைச் சந்திக்க வந்த நிருபனின் கைகளைப் பற்றி, "என்ன சாப்பிடுறீங்க?" என்று வாஞ்சையோடு கேட்கும்போதே அவன் வானத்தில் மிதந்து கொண்டிருப்பான். பேட்டியில் போகிற போக்கில் பிடித்த ஐஸ்கிரீம் 'கஸாட்டா' பற்றி சப்புக்கொட்டியபடி பேசுவார். குரல் உடைந்து இனி பாடவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரித்ததையும் மீண்டு வந்ததைப் பற்றியும் கண்ணீரோடு நிருபனிடம் பகிர்ந்துகொள்வார், ஒரு பாசக்கார பெரியப்பாவைப் போல!

சுப்பர் சிங்கர் நிகழ்ச்சிகளில் எவ்வளவு வற்புறுத்தினாலும் அவர் யாரையும் திட்டமாட்டார். "ஏன் திட்டணும்... முடிந்த அளவு பாசிட்டிவிட்டியை விதைப்போமே?" என்பார்.

தான் பிஸியாக கமல்-ரஜினி என உச்ச நட்சத்திரங்களுக்குப் பாடிக்கொண்டிருந்தபோதுகூட, சக பாடகரான மனோவை வளர்த்துவிட மெனக்கெட்டார். "பாலுண்ணா எப்பவும் மற்றவங்க நல்லாயிருக்கணும்னு நினைக்கிறவர். நான் பாடின பாட்டில பாதி அவர் சிபாரிசு செஞ்சதுதான். ரஜினிக்கு 'எங்கிட்ட மோதாதே, நான் ராஜாதி ராஜனடா' அப்படிப் பாடினதுதான். யாருக்கு அப்படி ஒரு மனசு வரும்!" என்று மனோவே நெகிழ்ந்து சொல்கிறார்.

கொடுத்ததை அப்படியே பாடுபவர் அல்ல பாலு. சின்னச் சின்ன விளையாட்டுகள் மூலம் பாடலை செழுமைப்படுத்தும் இரசாயன வித்தைகள் தெரிந்தவர். அவர் தாண்டி வந்தது தலைமுறைக் கலைஞர்களை மட்டுமல்ல, பல தலைமுறை இரசனைகளையும்தான். எல்லா தலைமுறை இரசனைக்கும் ஈடுகொடுத்து மயக்கியது எஸ்.பி.பியின் குரல்.

எம்.ஜி.ஆர், ரஜினி, கமல், விஜய், அஜித், எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா, ரஹ்மான், அனிருத், கண்ணதாசன், வாலி, வைரமுத்து என்று காலங்கள் கடந்து பயணிக்கும் பாடலின் குரல் பாலுவுடையது. காலங்களைக் கடந்த அந்த குரல் இன்னும் பல காலங்களைக் கடந்தும் ஒலிக்கும் நிலைக்கும் நிறைக்கும் இசைக்கும்.


# மிகவும் எளிமையாக நடைபெற்ற திருமணம்



விஜய் நடிப்பில் வெளியான பைரவா படத்தில் வில்லனாக நடித்த ரோஷன் பஷீரின் திருமணம் மிகவும் எளிமையாக நடைபெற்றது.

தமிழில் கமல்ஹாசனின் பாபநாசம் படத்தில் வில்லனாக நடித்து பிரபலமானவர் ரோஷன் பஷீர். தொடர்ந்து விஜயின் பைரவா படத்திலும் வில்லனாக வந்தார். குபேர ராசி படத்தில் நடித்துள்ளார். தற்போது மூன்று ரசிகர்கள் படத்தில் நடித்து வருகிறார்.

இவர் மலையாளத்தில் பிளஸ் டூ படத்தில் அறிமுகமானார். வசூல் சாதனை நிகழ்த்திய மோகன்லாலின் திரிஷ்யம் படத்தில் வில்லனாக நடித்து அங்குள்ள ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார். இந்தப் படத்தின் தமிழ் ரீமேக் ஆகவே பாபநாசம் வந்தது.




ரெட் ஒயின் படத்திலும் மோகன்லாலுடன் நடித்துள்ளார். பாங்கிங் அவேர்ஸ், டூரிஸ்ட் ஹோம், இன்னனு ஆ கல்யாணம் ஆகிய படங்களிலும் தெலுங்கில் துருஷ்யம் படத்திலும் நடித்துள்ளார்.

கேரள மாநிலம் கோழிக் கோட்டைச் சேர்ந்த ரோஷனுக்கும் வக்கீலுக்கு படித்துள்ள பர்ஸானா என்ற பெண்ணுக்கும் பெற்றோர்கள் திருமணம் நிச்சயம் செய்து இருந்தனர்.

பர்ஸானா பிரபல மலையாள நடிகர் மம்முட்டியின் உறவினர் ஆவார். ரோஷன்-பர்ஸானா திருமணம் கேரளாவில் நடந்தது. கொரோனா ஊரடங்கினால் குறைவானவர்களே திருமணத்தில் கலந்து கொண்டனர்.



## பல கோடி பட்ஜெட்டில் உருவாகும் அடிபுருஷ்




பிரபாஸ் பாகுபலிக்கு பிறகு இந்தியாவே வியக்கும் நடிகர் ஆகிவிட்டார். இவர் தற்போது பல மொழி படங்களில் தான் நடிக்கின்றார். தற்போது பல கோடி செலவில் எடுக்கப்படும் Adipurush என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் போஸ்டர் பார்க்கும் போது இராமாயணம் கதையை தான் பிரபாஸ் படமாக நடிக்கவுள்ளார் என தெரியவருகிறது.

## ராட்சசன்-2 ஸ்கிரிப்ட் ரெடியா?

ராட்சசன்-2 படத்தின் கதை தற்போது தயாராகி வருவதாக இயக்குநர் ராம்குமார் தெரிவித்து இருக்கிறார்.

ராம்குமார் இயக்கத்தில் விஷ்ணு விஷால், அமலாபால் உள்ளிட்ட பலர் நடித்திருந்த படம் ராட்சசன். இந்தத் திரைப்படம் ஒக்டோபர் 5, 2018 இல் வெளிவந்தது விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

இந்த சைக்கோ திரில்லர் படம் தற்போது ஐ.எம்.டி.பி இணையத்தளத்தில் தமிழ் பாடங்களில் அதிக ரேட்டிங் பெற்ற படம் என்கிற பெருமையைப் பெற்றிருக்கிறது. இந்தப் படத்திற்கு அடுத்து இரண்டாவது இடத்தில் விக்ரம் வேதா படம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்திய அளவில் ராட்சசன் படத்திற்கு மூன்றாவது இடம் கிடைத்திருக்கிறது. ஒரு படத்திற்கு முதல் இரண்டு இடங்களில் பொலிவுட் படங்கள் இருக்கின்றன. இந்திய அளவில் மூன்றாவது இடம், தமிழ் சினிமாவில் முதல் இடம் என சத்தமில்லாமல் ராட்சசன் படம் செய்திருக்கும் சாதனை



படக்குழுவினர் மற்றும் ரசிகர்கள் கொண்டாடி வருகிறார்கள். படக்குழுவினர் டுவிட்டரில் மகிழ்ச்சியை பதிவிட்டு இருந்தார்கள்.

இயக்குநர் ராம்குமார் டுவிட்டரில் அந்த IMDB ரேட்டிங் ஸ்கிரீன் ஷொட் பதிவிட்டு "மொத்த ராட்சசன் குழுவினருக்கும் நன்றி" எனக் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் இதுபற்றி பேசி இருந்த விஷ்ணு விஷால், "ராட்சசன் எப்போதும் அதனுடைய சாதனைகளை அதுவே முறியடிக்கிறது. உங்களது அன்புக்கு நன்றி" எனப் பதிவிட்டு இருக்கிறார். இது ஒரு புறமிருக்க ராட்சசன் படத்தின் இரண்டாம் பாகம் நிச்சயம் வேண்டுமென டுவிட்டரில் ஒருவர் கேட்க அதற்கு பதில் அளித்த விஷ்ணு, "நிச்சயமாக இயக்குநர் ராம்குமார் ராட்சசன்-2 ஸ்கிரிப்ட் ரெடியா?" எனக் கேட்டிருக்கிறார். அதற்கு பதிலளித்த இயக்குநர் ராம்குமார் "ரெடியாயிற்று இருக்கு" எனக்கூறியிருக்கிறார்.

இதனால் அவர் தற்போது அதன் இரண்டாம் பாகத்துக்கான கதையை எழுதி வருகிறார் என்பது உறுதியாகியிருக்கிறது.

இயக்குநர் ராம்குமாருக்கு பதிலளித்த விஷ்ணு சுப்பரோ சுப்பர் எனக் குறிப்பிட்டிருக்கிறார். விஷ்ணு மற்றும் இயக்குநர் இப்படி டுவிட்டரில் பேசியிருப்பது ரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அதனால் ராட்சசன் இரண்டாம் பாகம் பற்றிய அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2018-2020 வசூலில் சாதனை படைத்த திரைப்படங்கள்



தர்பார் - 2020




பிகில் - 2019



2.0 - 2018

# டோனி எனும் சுப்பர் ஹீரோ



இந்திய கிரிக்கெட்டின் இந்த நூற்றாண்டின் ஈடில்லா, இணையில்லா வீரன் டோனி ஓய்வு பெற்று விட்டார். அப்படி என்ன செய்துவிட்டார் ராஞ்சியின் ரகளையான இந்த வீரன்…? ஹோலி போல டோனி என்னும் சகாப்தத்திற்குப் பின்னிருக்கும் மனிதனைப் பார்க்கும் முயற்சியே இந்தக் கட்டுரை.

ராஞ்சியில் பிறந்தார், கால்பந்தில் ஆர்வம் கொண்டவராக இருந்தார் என வரலாறு சொல்லிப் போர் அடிக்க விரும்பவில்லை. அதை சுவாரஸ்யமான படமாகவே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதனால் அதையெல்லாம் ஸ்கிப் அடித்து நேராகச் சர்வதேச கிரிக்கெட்டில் அவர் களம் கண்ட படலத்துக்கு வருவோம்.

அதிரடி சிக்ஸ் ஹிட்டராகவே இந்திய ரசிகர்களுக்கு அறிமுகமானார் டோனி. அவரது பட்டிங் ஸ்டைலும் சரி அவரது ஆட்டமும் சரி இந்திய கிரிக்கெட்டுக்கு புதுசு. அப்போதைய இந்திய கிரிக்கெட் அணி சச்சின், டிராவிட், லக்ஷ்மன் என கிளாசிக் பட்ஸ்மேன்களால் நிறைந்திருந்தது. அதிரடி காட்ட சேவாக், கங்குலி, யுவராஜ் எனச் சிலர் மட்டுமே இருந்தனர்.

ஆனால், "யார்க்கர் போட்டாலும் சிக்ஸ் அடிப்பேன்டா" ஆட்டிடியூட் டோனியின் டிரேட் மார்க். நீளமான முடி, ஹெலிகொப்டர் ஷாட் என அதிரடி ஆட்டக்காரராக அணியிலிருந்த டோனியைப் பற்றி அப்போது மக்கள் மனதில் வரைந்து வைத்திருந்தது வேறு மாதிரியான பிம்பம். கிரிக்கெட் பற்றி இவ்வளவு தெளிவான புரிதல் டோனிக்கு உண்டு என அப்போது சொல்லியிருந்தால் யாருமே நம்பியிருக்க மாட்டார்கள்.

2007 ஒருநாள் உலகக் கோப்பையில் படுதோல்வி அடைந்து முதல் சுற்றிலேயே வெளியே வந்தது இந்தியா. சச்சின் போன்ற ஜாம்பவான்கள் இருந்தும் இந்தியாவுக்கு இப்படி ஒரு நிலையா? எனக் கொதித்துப் போனது இந்திய ரசிகர் கூட்டம். அப்போதுதான் டோனி தலைமையில் தென்னாபிரிக்கா கிளம்பியது ஒரு இளம்படை.

2007 இல் இருபது-20 உலகக் கோப்பையை இந்தியா வென்றது கிரிக்கெட் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வு. அங்குதான் ஐ.பி.எல்லுக்கு விதை போடப்பட்டது. உலகமெங்கும் கிரிக்கெட்டின் முகமாக இருபது-20 மாறியது. அந்த வருடம் இந்தியா ஜெயிக்கவில்லை என்றால் இதெல்லாம் இவ்வளவு வேகமாக நடந்திருக்குமா? என்பது சந்தேகம்தான். அந்த வகையில் கிரிக்கெட் உலகையே தலைகீழாகத் திருப்பிப்போட்டது டோனியின் வருகை எனத் தாராளமாகச் சொல்லலாம்.

> **நான் ஒரு தற்காலிக கலைஞன் தான். இந்தச் சில தருணங்கள்தான் நான் யார் என்ற கதையைச் சொல்கின்றன. எனக்கு முன்பு ஒரு கலைஞன் இருந்தது போல் எனக்கு அடுத்தும் என்னை விஞ்சும் சிறந்த கலைஞன் வருவான்.**

"One of the best Cricketing brains" எனத் டோனியைப் பலரும் குறிப்பிடுவார்கள். அது உண்மையும் கூட. டோனியின் தலைமையில் ஆடிய வீரர்கள் அவரை "Instinctive Captaid" என்று குறிப்பிடுவதைப் பார்க்கலாம்.

ஒரு பட்ஸ்மேனின் பலவீனம் எது, பந்துவீச்சாளர்களின் பலம் எது என ஒவ்வொரு போட்டிக்கு முன்னும் டேட்டாவை ஆராய்ந்து அந்தப் போட்டிக்கென திட்டங்களை அணிகள் வகுப்பது வழக்கம்.

ஆனால், டோனி தலைமை தாங்கும் அணிகளில் இது ஒரு சம்பிரதாயத்திற்காக மட்டுமே நடக்குமாம். முக்கிய முடிவுகள் அனைத்தையுமே களத்தில் அந்த நொடியில்தான் எடுக்கிறார் டோனி. டோனியின் வெற்றிக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

எப்படி எதிர்காலத்திற்கான தெளிவான விஷன் டோனியிடம் எப்போதும் இருக்கும் எனச் சொன்னோமோ அதேபோலத்தான் நிகழ்காலத்தில் அந்தக் கணத்தில் இருக்கும் வீரர்களை வைத்து ஜெயிக்க என்ன செய்ய வேண்டும் என்பதிலும் டோனிக்கு தெளிவு உண்டு.

இப்படி அவர் களத்தில் எடுத்த முடிவுகள் ஏராளம். இந்தியா வென்ற மூன்று ஐ.சி.சி.கோப்பைகளின் இறுதிப் போட்டியிலுமே இப்படி ஒரு முக்கிய முடிவை எடுத்திருப்பார் டோனி.

சச்சின் சதங்களையும் கும்ப்ளேவின் விக்கெட்டுகளையும் மட்டும் கொண்டாடிக்கொண்டிருந்த இந்திய ரசிகர்களுக்குப் பெரிய வெற்றிகளின் சுவையைக் காட்டியவர் டோனி.

சரி கப்டன்ஷிப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறோம். டோனியின் ஹீரோயிசம் மொத்தமாக வெளிப்படுவது அவரது பட்டிங்கில்தான். நம்மூர் சினிமாவை எடுத்துக்கொள்வோமே, முடியாததை முடிப்பவன் தான் மாஸ் ஹீரோ. அப்படித்தான் டோனியும்.

இதை எடுத்துக்காட்டும் இன்னிங்ஸ்கள் பல. "முடியாத சூழலுக்குக் கொண்டு போறதே உங்க ஆளுதான்" என்ற விமர்சனங்களும் உண்டு.

ஆனால், கடைசி வரை களத்தில் நின்றால் எதையும் சாதித்துவிடலாம் என்ற தன்னம்பிக்கை ததும்பும் மனிதனாக சாமான்ய மக்களின் ஹீரோவானார் டோனி

உலக அளவில் சிறந்த விக்கெட் கீப்பர் பட்ஸ்மேன்களில் சங்கக்காரா, கில்கிறிஸ்ட்டுடன் டோனியின் பெயரும் நீங்காத இடம்பெறும். இப்போதே பட்லர், பில்லிங்ஸ் போன்ற பிற நாட்டு கீப்பர் பட்ஸ்மேன்களுக்கு டோனிதான் ரோல் மொடல்.

தான் வலியுறுத்தும் விடயங்களைத் தானே பின்பற்றாமல் இருப்பதை 'Hypocrisy' என ஆங்கிலத்தில் அழைப்பர். அனைவருமே ஏதோ ஒரு விதத்தில் Hypocrite. ஆகவே இருப்போம். ஆனால், டோனி அப்படி இல்லை.

ஒவ்வொரு அணியும் அடுத்து வரும் உலகக் கோப்பையை மனதில் வைத்தே உருவாக்கப்பட வேண்டும் என்பது டோனி நம்பிக்கை. 2011 இல் உலகக் கோப்பை வென்ற கையோடு 2015 உலகக் கோப்பைக்கான அணியை உருவாக்கும் பணிகளில் தீவிரமானார். ஃபிட்னஸை முக்கிய விடயமாக முன்னிறுத்தினார். இந்தக் காரணத்தால் சில முக்கிய வீரர்கள் ஓரம்கட்டப்பட "அவர்களுக்கு Fare well மேட்ச் கூட கொடுக்கப்படவில்லை" எனத் டோனிக்கு எதிர்ப்பும் அதிகரித்தது. ஆனால், தான் நம்பியதில் சிறிதும் விலகவில்லை டோனி. இன்று உலகின் ஃபிட்டான அணியாக இந்தியா இருக்கிறது என்றால் அதற்கு விதைபோட்டது டோனி. இதில் மாற்றுக்கருத்தே இருக்க முடியாது. ஃபிட்னஸ் முக்கியம் எனச் சொன்னவர் அணியில் இருக்கும் வரை ஃபிட்டாகவே இருந்தார்

2015 உலகக் கோப்பை முடிந்ததுமே அடுத்த உலகக் கோப்பை அணி ஹோலி தலைமையில்தான் ஆடப் போகிறது என முடிவெடுத்து முதலில் டெஸ்ட் கப்டன் பதவியிலிருந்து விலகினார். அடுத்து அனைத்து ஃபார்மேட்களிலும் ஹோலியை கப்டன் ஆக்கினார்.

"ஒரு அணிக்கு மூன்று கப்டன் கள் என்பதில் எனக்கு என்றுமே நம்பிக்கை இருந்ததில்லை. அனைத்துமே ஒருவரிடம் இருப்பதே அணிக்குச் சிறந்தது" என்று இந்த முடிவுக்கான காரணத்தைச் சொன்னார் டோனி. நம்பியதில் திடமாக இருந்தார்.

சொன்னதைப் போலவே 2019 உலகக்கோப்பை முடிந்ததுமே 2023 உலகக்கோப்பைக்கான அணி தயாராக வேண்டிய நேரம் என அமைதியாக ஒதுங்கிக்கொண்டார். 2020 இருபது-20 உலகக்கோப்பை மட்டும் ஆடிவிடலாம் என்று இருந்த மனிதனுக்கு கொரோனா கைகொடுக்கவில்லை.

**Doni** அமைதியாகச் சத்தமில்லாமல் விடைபெற்று விடுவார் எனத் தெரியும். ஆனால், ஐ.பி.எல். முடித்து விட்டு அறிவிப்பார் என்றே எதிர்பார்த்தோம்.

ஆனால் இப்படி இன்ஸ்டாவில் இரண்டு வரி போஸ்ட் மட்டும் போட்டு ஓய்வை அறிவிப்பார் என்பது யாருமே எதிர்பாராதது. இதிலும் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியிருக்கிறார்.

இன்ஸ்டாவில் அவரது கிரிக்கெட் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளை எளிமையாக ஒரு ஸ்லைடு-ஷோ வீடியோவாக ஒரு பாடலுடன் பதிவிட்டு **'Thanks a lot for your love and support throughout. From 1929 hrs consider me as Reti red'** என்று ஓய்வை அறிவித்திருக்கிறார் டோனி.

அந்தப் பாடலின் அர்த்தம் என்ன எனக் கண்டுபிடித்தோம்.

"நான் ஒரு தற்காலிக கலைஞன் தான். இந்தச் சில தருணங்கள்தான் நான் யார் என்ற கதையைச் சொல்கின்றன. எனக்கு முன்பு ஒரு கலைஞன் இருந்தது போல் எனக்கு அடுத்தும் என்னை விஞ்சும் சிறந்த கலைஞன் வருவான்."

அதுதான் டோனி. "மகேந்திர சிங் டோனி" என்னும் பெயருக்கு பின்னிருக்கும் மனிதன் யார் எனச் சொல்ல இதுவே போதும். இவ்வளவு பெரிய கட்டுரையே எழுதியிருக்க வேண்டாம் தான்.

உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் டோனி அடிக்கும் கடைசி சிக்ஸரின் போது ரவி சாஸ்திரி செய்யும் வர்ணனையை யாராலும் மறக்க முடியாதது. இப்போதும் ஏனோ அது தான் மண்டைக்குள் ஓடிக்கொண்டிருக்கிறது.


# அயோத்தி இராமர் கோவில் அழகோ! அழகு!

பல ஆண்டு சர்ச்சைகள் ஓய்ந்து அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டுள்ளது. உத்தரப்பிரதேசத்துக்கு வெளியே உள்ள இந்தியர்களுக்கும் உலகம் முழுக்க இருக்கும் வெளி நாட்டினருக்கும் இனி முக்கியமான சுற்றுலாத்தலங்கள் லிஸ்ட்டில் அயோத்தி ராமர் கோயிலும் சேரும்.


பரந்துவிரிந்த நிலப்பரப்பில் அமைந்துள்ள பெரிய கோயில் வரிசையில் கம்போடியா அங்கூர்வாட் விஷ்ணு ஆலயம், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலுக்கு அடுத்து மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது அயோத்தி ராமர் கோயில். 120 ஏக்கர் பரப்பளவில் இந்தக் கோயில் வளாகம் அமையவிருக்கிறது.

மூன்று தளங்களாக அமையவிருக்கும் இந்தக் கோயிலில் ஒவ்வொரு தளத்திலும் 106 தூண்கள் வீதம் மொத்தம் 318 தூண்கள் அமையவுள்ளன.

300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் இந்தக் கோயிலின் கட்டுமானப் பொறுப்பைப் பிரபல கட்டடக் கலை நிபுணர் சந்திரகாந்த்பாய் சோம்புரா ஏற்றுள்ளார்.



கோயிலைச் சுற்றியிருக்கும் 20 ஏக்கர் நிலப்பரப்பில் தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்க 1,000 கோடி ரூபாய் வரையிலும் செலவாகும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.



இதுதவிர, விமான நிலையம், வீதி வசதி விரிவாக்கம் போன்ற 500 கோடி மதிப்பிலான நலத் திட்டங்களும் திட்டமிடப்பட்டுள்ளன.

கோயில் கட்டிமுடிக்க சுமார் 3.5 ஆண்டுகள் வரை ஆகலாம்.

முக்கூடல் எனப்படும் கன்னியா குமரி, தனுஷ்கோடி, ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களிலிருந்து நீர் மற்றும் மண் ஆகியன பூஜை செய்து அனுப்பி வைக்கப்பட்டன.

இதேபோன்று நாட்டின் பிற பகுதிகளிலுள்ள 2,000 கோயில்களிலிருந்து மண்ணும் சுமார் 100 நதிகளிலிருந்து தீர்த்தமும் அடிக்கல் நாட்டு விழாவுக்கு அனுப்பப்பட்டன.

சேலத்திலிருந்து பொதுமக்கள் மற்றும் வெள்ளி வியாபாரிகளின் பங்களிப்புடன் 11,30,000 ரூபாய் செலவில் 17.4 கிலோ எடை கொண்ட வெள்ளிச் செங்கல் பூஜை செய்து அனுப்பி வைக்கப்பட்டது.

அதேபோன்று உத்தரப்பிரதேச புல்லியன் அசோஷியேஷன் சார்பில் 33 கிலோ எடை கொண்ட வெள்ளிச் செங்கல் அயோத்திக்கு அனுப்பப்பட்டது.

கோயிலின் உட்புறம் கலை நுணுக்கத்தோடு கூடிய கல் வேலைப்பாடுகளோடும் நான்கு ஐந்து வளைந்த கூரைகள் **(Dooms)** அமைக்கப்படவுள்ளன.

குழந்தை ராமர் விக்கிரகமே மூல விக்கிரகமாக அமைந்துள்ளது.

கோயில் வளாகத்தில் பிரார்த்தனைக் கூடம், சொற்பொழிவுக்கூடம் (ராம்கதா குன்ச்), வேதபாடசாலை, சாதுக்கள் தங்கும் விடுதி மற்றும் பயணிகள் தங்கும் விடுதிகள் அமையவுள்ளன. இவை தவிர ஒரு அருங்காட்சியகமும் உணவு விடுதிகளும் அமையவுள்ளன.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2093

Search for people, places and things

### கிருசாளினி




### நிலுசா




### இந்து




### சிவா




### சுபராஜ்




### நிசாந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 218

## உடற்பயிற்சி இல்லாதிருப்பது புகைத்தலுக்கு சமன்


சிகரெட் புகையிலிருக்கும் 3500 இற்கும் அதிகமான நச்சுப் பதார்த்தங்கள் மனிதனில் இருதய நோய்கள், புற்று நோய்கள், சுவாச நோய்கள், பாலியல் குறைபாடுகள், பாரிசவாதம் போன்ற பல நோய்களை ஏற்படுத்தி மனிதனின் வாழ்நாளைக் குறைக்கிறது. என்பது அனைவரும் அறிந்ததே. புகைத்துக் கொண்டிருப்பவரின் அருகில் இருப்பதும் ஆபத்தானது என்பதை நாம் அறிவோம்.

புகைப்பிடிப்பவர்களுக்கு இருதய நோய் ஏற்படும் சந்தர்ப்பம் இரட்டிப்படைகிறது என்று ஆய்வுகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.


உடற்பயிற்சி செய்யாதிருப்பது இருதய நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தை இரண்டு மடங்காக அதிகரிக்கச் செய்கின்றன. அதாவது புகைப்பிடிப்பதால் மாரடைப்பு ஏற்படும் சந்தர்ப்பமும் ஏறத்தாழ சமமானவை எனக் கணிப்பிடப்படுகிறது.

நாம் ஒழுங்காக உடற்பயிற்சி செய்து வருவோமாக இருந்தால் புற்றுநோய், நீரிழிவு, பாரிசவாதம், மாரடைப்பு, உயர்குருதி அமுக்கம், நுரையீரல் நோய்கள் போன்றவை ஏற்படும் சந்தர்ப்பத்தை பெருமளவு குறைத்துக்கொள்ள முடியும்.

அத்துடன் ஒழுங்கான உடற்பயிற்சி மூலம் எலும்பு மூட்டுக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த முடியும். இதற்கு மேலதிகமாக மன அழுத்தத்தை குறைத்து உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் இது உறுதுணையாக அமைகிறது.





நடத்தல், சைக்கிள் ஓடுதல், நடனம், நீச்சல், மைதான விளையாட்டுக்கள், வீட்டு வேலைகளை செய்தல் போன்ற சிறிய பயிற்சிகள் அழகான உடலமைப்பையும் ஆரோக்கியத்தையும் தருவதுடன் உடல் நிறை பராமரிப்புக்கும் உறுதுணையாக அமையும். உடற்பயிற்சி இல்லாமல் இருப்பது ஆபத்தானது என்பதை மனதில் நிறுத்துவோம்.

Dr.சி.சிவன்சுதன்.
பொதுவைத்திய நிபுணர்

## பருப்பு வகைகள் உண்பதால் கிடைக்கும் பயன்கள்

பருப்புவகைகள் புரதத்தினைக் கொண்ட நல்ல உணவாக மட்டுமல்லாது அவை கரையக் கூடிய அதிக நார்ப்பொருட்களையும், காபோவைதரேற்றின் கலவைகளையும், விற்றமின் மற்றும் கனியுப்புக்களையும் கொண்டுள்ளன. இவை கொழுப்பு குறைந்தவையாகும். பருப்புகளை வழமையாக சாப்பிடுவதன் மூலம் நீரிழிவு நோயின் ஆபத்தைக் குறைக்க முடியும்.

புரதம் - சைவ உணவுகளில் தானியங்களுடன் பருப்புகளை (போஞ்சி, பயற்றம்பயறு, கௌபி அல்லது பருப்பு [lentils]) சேர்க்கும் போது எல்லா அத்தியாவசியமான அமினோ அமிலங்களையும் உள்ளடக்கிய ஒரு தரமான புரதத்தை பெற்றுக் கொள்ள முடியும்.



**உதாரணம்:** பருப்பு, கொள்ளு, கௌபி, பயறு, சோறு

விற்றமின்கள் - பருப்புகளில் விற்றமின் B அதிகமாக உள்ளது. முளைத்தலின் போது விற்றமின் B மற்றும் C உள்ளடக்கமானது அதிகரிக்கின்றது.

இரும்பு - பருப்புகளில் இரும்பு உள்ளது. ஆனாலும் அவை உடலினால் உடனடியாக அகத்துறிஞ்சக் கூடிய நிலையில் இருப்பதில்லை. முளைக்கின்ற போதும் புளித்துப் பொங்குகின்ற போதும் **(Fermentation)** பெற்றுக்கொள்ளக் கூடிய இரும்பின் அளவு **(bioavailability)** அதிகரிக்கின்றது.

**நல்ல பருப்புக்களின் தெரிவுக்கு:** பருப்பு, பட்டாணிக்கடலை, கௌபி, பயறு, சோயா, அவரை விதைகள் போன்றன.

சோயாவிலும் கூடிய புரதம், விற்றமின்கள், கனியுப்புக்கள், கொழுப்பு மற்றும் நார்ப்பொருட்கள் காணப்படுகிறது. வடிவமைக்கப்பட்ட காய்கறிப் புரதம் **(TVP-Textured Vegetable Protein)** ஆனது. இலங்கையில் பொதுவாக பயன்படுத்துகின்ற சோயா அவரையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு உணவு உற்பத்தியாகும். சோயா அவரை மற்றும் சோயா உற்பத்திகள் சைவ உணவுகளை உட்கொள்பவர்களுக்கு ஒரு சிறந்த உணவாகும்.

- மருத்துவக் குழு -

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்